بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ


சிறப்பிதழ் - திருக்குர்ஆன்

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian Tamil

இதழ் எண் 51-52

வருடாந்திரச் சந்தா ரூபாய் 600

தொகுதி 8

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மத்

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

www.akhbarbadr.in

**Post Reg.No. GDP-39/2023-2025** ஹிஜ்ரி கமரி 1445 ஜமாதிஸ் ஸானீ 7- 14 ★ ஹிஜ்ரி ஷம்ஸி 1402 21 -28 ஃபத்ஹ் ★ 21 -28 டிசம்பர் 2023


## இறை வசனம்

اِنَّ ہٰذَا الۡقُرۡاٰنَ یَہۡدِیۡ لِلَّتِیۡ ہِیَ اَقۡوَمُ وَیُبَشِّرُ الۡمُؤۡمِنِیۡنَ الَّذِیۡنَ

یَعۡمَلُوۡنَ الصّٰلِحٰتِ اَنَّ لَہُمۡ اَجۡرًا کَبِیۡرًا ۙ﴿۱۰﴾

பொருள்: நிச்சயமாக இந்தக் குர்ஆன் மற்றெல்லாவற்றையும் விட மிகவும் சரியானதாக இருக்கின்ற பாதையின் பக்கம் வழிகாட்டுகின்றது. நம்பிக்கைக் கொண்டு நிலைமைக் கேற்றவாறு செயலாற்றுபவர்களுக்கு (மா) பெரும் வெகுமதி (விதிக்கப்பட்டு) உள்ளதென்று இது அவர்களுக்கு நற்செய்தியினையும் வழங்குகின்றது.

(சூரா பனீ இஸ்ராயீல்: வசனம் 10)

## நபிமொழி


عَنۡ عُثۡمَانَ بۡنِ عَفَّانَ رَضِیَ اللّٰہُ عَنۡہُ قَالَ

قَالَ رَسُوۡلُ اللّٰہِ صَلَّی اللّٰہُ عَلَیۡہِ وَسَلَّمَ خَیۡرُکُمۡ مَنۡ تَعَلَّمَ الۡقُرۡاٰنَ وَعَلَّمَہٗ

பொருள்: எவர் திருக்குர்ஆனை தாமும் கற்று பிறருக்கும் கற்றுக் கொடுக்கின்றாரோ அவர் உங்களில் மிகச் சிறந்தவர் ஆவார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்ஃபான் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

(ஸஹீஹ் புகாரி, கிதாப் ஃபஸாயிலுல் குர்ஆன்)

**எல்லா வகையான நன்மைகளும் திருக்குர்ஆனில் இருக்கின்றன** اَلْخَيْرُ كُلُّهٗ فِى الْقُرْاٰنِ




**ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

اَلْخَيْرُ كُلُّهٗ فِى الْقُرْاٰنِ என்று இறைவன் என்னை விளித்துக் கூறினான். அதாவது எல்லா வகையான நன்மைகளும் திருக்குர்ஆனில் இருக்கின்றன. இதுவே உண்மையாகும். அம்மக்களின் மீது பரிதாபம்! அவர்கள் மற்றவற்றிற்கு அதனை விட முன்னுரிமை கொடுக்கின்றனர். உங்களது அனைத்து வெற்றிகளும், ஈடேற்றத்தின் தலையூற்றும் திருக்குர்ஆனில் தான் உள்ளது. உங்களுக்கு அவசியமான அனைத்து மார்க்கத் தேவைகளும் திருக்குர்ஆனில் இடம் பெற்றுள்ளன. உங்களது ஈமானை கியாமத்து நாளில் உண்மைப்படுத்தக் கூடியது அல்லது பொய்ப்பிக்கக் கூடியது திருக்குர்ஆனே ஆகும். திருக்குர்ஆனைத் தவிர வானத்தின் கீழ் உங்களுக்கு நேரடியாக நேர்வழி காட்டக் கூடிய எந்த வேதமும் இல்லை. திருக்குர்ஆனைப் போன்ற ஒரு வேதத்தை உங்களுக்கு அருளியதன் மூலம் இறைவன் உங்கள் மீது கருணை காட்டியுள்ளான்.

நான் உண்மையாகக் கூறுகின்றேன். உங்களிடம் படித்துக் காட்டப்பட்ட இந்த வேதம் கிறிஸ்தவர்களிடம் இறக்கப்பட்டிருந்தால் அவர்கள் அழிந்து போயிருக்க மாட்டார்கள்...... தவ்ராத்திற்குப் பதில் உங்களுக்கு வழங்கப்பட்டிருந்த இந்த வேதம் யூதர்களுக்கு வழங்கப்பட்டிருந்தால் அவர்களுள் சில பிரிவினர் கியாமத்தை மறுத்திருக்க மாட்டார்கள். ஆகவே, உங்களுக்கு தரப்பட்ட இந்த அருட்கொடைக்கு கண்ணியம் அளியுங்கள். இது மிகவும் அன்பிற்குரிய அருட்கொடை ஆகும். இது பெரும் செல்வமாகும். (கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயீன், தொகுதி 19, பக்கம்-26)

**உலகின் இறுதி (நாள்) வரை நிகழக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்த மார்க்க சம்பவங்களின் செய்தி இதில் இடம் பெற்றுள்ளது**




**ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆன் اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ என்பதிலிருந்து ஆரம்பமாகின்றது. இது எந்த வசனம் என்றால், இதில் (இஸ்லாத்திற்கெதிரான) அனைத்து மார்க்கங்களுக்கும் மறுப்பு உள்ளது. இதன் மூலம் கிறிஸ்தவர்களின் முத்தெய்வக் கொள்கையும் எஞ்சியிருக்க முடியாது. மேலும், கருணை மற்றும் பிறருக்காக ஒப்புவித்தல் என்ற பெயரில் பாவமற்ற ஒருவரை சிலுவையில் ஏற்ற வேண்டிய அவசியம் இல்லை. மேலும், ஆரியர்களின் கருத்துப்படி ஆன்மா என்பது நிலையானதாகவும், நிரந்தரமானதாகவும் ஆக முடியாது. மேலும் மறுபிறவிக் கொள்கைக்கான எந்த சான்றும் எஞ்சியிருப்பதில்லை. மேலும், அதேபோன்று ஷியா பிரிவினர் ஸஹாபா பெரு மக்கள் மீதும் ஆட்சேபனை செய்ய முடியாது. ஓர் இறை மறுப்பாளர் எந்தவொரு ஒளிமயமான சான்றாலும் இறைவனின் இருப்பை மறுக்க முடியாது. இதுவே ஒரு வசனத்தைக் குறித்த விஷயமாகும். ஏழு வசனங்களும் படிக்கப்பட்டால் பின்னர் அனைத்து மார்க்கங்களின் உண்மைத்துவத்தின் நறுமணத்தின் தொகுப்பும் இதில் கிடைக்கும். மேலும் உலகின் இறுதி (நாள்) வரை நிகழக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்த மார்க்க சம்பவங்களின் செய்தி இதில் இடம் பெற்றுள்ளது.

(ஹகாயிகுல் ஃபுர்கான், தொகுதி 1, பக்கம் -5)

**திருக்குர்ஆனில் எந்த அளவிற்கு நுட்பமான ஞானங்கள் இருக்கின்றனவோ அவற்றிற்கான உதாரணத்தை எந்தவொரு வேதமும் முன்வைக்க முடியாது**



**ஸய்யிதுனா ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உண்மை என்னவென்றால் திருக்குர்ஆனின் எந்தவொரு பகுதியும் மாற்றப்பட்டப் பகுதி இல்லை. அதன் ஒவ்வொரு சொல்லும் பேணத் தக்கதாகும். மேலும், இது கியாமத் நாள் வரை நிலைபெறக் கூடிய ஷரீஅத் ஆகும். நான் ஒரு கனவில் இவ்வாறு கண்டேன்: அதாவது திருக்குர்ஆனின் ஒவ்வொரு சொல்லும், ஸபரும், ஸேரும், தன்னகத்தே பொருள் கொண்டுள்ளது. மேலும், திருக்குர்ஆனில் (ஓதும்போது தவறுதலாக நிகழும்) சிறு, சிறு வித்தியாசத்தால் கூட அதன் பொருள் மாறிவிடுகின்றது. திருக்குர்ஆனில் எந்த அளவிற்கு நுட்பமான ஞானங்கள் இருக்கின்றனவோ அவற்றிற்கான உதாரணத்தை எந்தவொரு வேதமும் முன்வைக்க முடியாது. ஆயினும் அனைத்து மதிநுட்பமும் ஒரு நபருக்கு திறக்கப்படுவது அவசியம் இல்லை. எனினும், ஒவ்வொரு காலத்திலும் திருக்குர்ஆனின் சில புதிய பொருள்கள் வெளிப்படுகின்றன. மேலும், அதுமட்டுமின்றி சில கூடுதல் பொருள்களும் இருக்கின்றன. அதனை இறைவன் பின்னவர்களுக்காக வைத்திருக்கின்றான். இந்தத் தொடர் இவ்வாறு தொடர்ந்து கொண்டு இருக்கும். எது வரை என்றால் கியாமத் வந்து விடும்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 2, பக்கம் 98)

**திருக்குர்ஆனின் இரகசியங்கள், அதன் ஆழிய ஞானங்கள் தூய மக்களுக்கே திறக்கின்றன. மேலும் அதற்கு தூய மக்களின் தோழமையிலிருந்து பயன் பெறுவதற்கும் அவசியம் உள்ளது**

---

**ஸஹாபிகள் மீது திருக்குர்ஆன் ஏற்படுத்திய தாக்கம் என்னவென்றால் அவர்கள் பூமியிலிருந்து எழுந்து விண்ணின் ஒளிவீசும் நட்சத்திரங்களாக ஆகிவிட்டனர். அவர்களில் ஒவ்வொருவரும் உங்களுக்கு வழிகாட்டி ஆவார்கள் என்று அந்த ஸஹாபிகளைக் குறித்தே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்**

---

**அல்லாஹ் அனைத்து வாசகர்களுக்கும் திருக்குர்ஆனை ஓதுவதற்கும், அதன் பொருளை புரிவதற்கும், மேலும் அதன் போதனைகளுக்கு ஏற்ப வாழ்வை கழிப்பதற்கும் நற்பேறு வழங்க வேண்டும் என்பது எனது துஆ ஆகும்.**

---

## ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பத்ர் வாசகர்களுக்கு வழங்கிய அகப்பார்வை மிக்க தூதுச் செய்தி

இஸ்லாமாபாத், யூ.கே
MA 28-10-23

அன்பிற்குரிய பத்ர் வாரப் பத்திரிகை காதியான் வாசகர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காதஹு

திருக்குர்ஆன் என்ற தலைப்பில் சிறப்பிதழ் வெயிடுவதற்கு பத்ர் பத்திரிகைக்கு நற்பேறு கிடைத்துக் கொண்டிருக்கின்றது. அல்ஹம்துலில்லாஹ். அல்லாஹ் எல்லா வகையிலும் இதன் வெளியீட்டில் அருள் செய்வானாக. ஆமீன்!

இந்த சந்தர்ப்பத்தில் தூதுச் செய்தி அனுப்பும்படி என்னிடம் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. எனது தூதுச் செய்தி இதுவாகும். அதாவது, இக்காலத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரை திருக்குர்ஆனைப் பரப்புவதற்காக அனுப்பியுள்ளான். திருக்குர்ஆனின் பாதுகாப்பிற்காக அனுப்பியுள்ளான். மக்களிடம் இருந்து மறைவாக இருந்த அந்த ஞானங்களை அல்லாஹ் அன்னாருக்கு கற்றுக் கொடுத்துள்ளான். அன்னாரின் மூலமாக திருக்குர்ஆனின் பயனிற்கான ஊற்று நிறுவப்பட்டுள்ளது. திருக்குர்ஆனின் சொற்ச் செறிவைக் குறித்து அன்னார் (அலை) கூறினார்கள்:

இது திருக்குர்ஆனின் தனித்தன்மை ஆகும். அதாவது, இதில் எல்லா சொற்களும் எப்படிப்பட்ட முத்துக்களைப் போன்று கோர்க்கப்பட்டுள்ளன என்றால் மேலும் தத்தமது இடத்தில் எவ்வாறு வைக்கப்பட்டுள்ளன என்றால், ஒன்றை ஓரிடத்தில் இருந்து எடுத்து மற்றோர் இடத்தில் வைக்க முடியாது. மேலும், எதனையும் மற்றோர் சொல்லால் மாற்ற முடியாது. ஆயினும், இதன் பின்னரும் கூட அதன் வாக்கிய அமைப்பிலும், சொற்செறிவிலும், கருத்துச் செறிவிலும் அனைத்து அவசியமான விஷயமும் இடம் பெற்றுள்ளது. (மல்ஃபூஸாத் தொகுதி 10, பக்கம் 173)

திருக்குர்ஆன் உலக சமுதாயங்களை ஒன்றிணைப்பதற்காக வந்துள்ளது என்ற விஷயத்தை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இறைவன் முதலில் தனித்தனியாக ஒவ்வொரு சமுதாயத்திற்கும் வேறு வேறு செயல் சட்டத்தை அனுப்பினான். பின்னர், இறைவன் ஏகனாக இருப்பதைப் போன்று அவர்களும் ஒன்றாக ஆகிவிட வேண்டும் என்று அவன் விரும்பினான். அப்போது அனைவரையும் ஒன்றிணைப்பதற்காக திருக்குர்ஆனை அனுப்பினான். மேலும், ஒரு காலம் வர இருக்கின்றது; இறைவன் அனைத்து சமுதாயங்களையும் ஒரே சமுதாயமாக ஆக்கிவிடுவான். எல்லா நாடுகளையும் ஒரே தேசமாக ஆக்கிவிடுவான். மேலும் அனைத்து மொழிகளையும் ஒரு மொழியாக ஆக்கிவிடுவான் என்று செய்தி வழங்கினான். (ருஸீமே தஃவத், ரூஹானீ கஸாயீன், தொகுதி 19, பக்கம் 428)

பல்வேறு மார்க்கங்கள் ஏன் வந்துள்ளன? என்று மக்கள் கேட்கின்றனர். ஏனெனில், அப்போது வரை அவர்களின் அறிவும், புரிதலும், அதுவரை இருந்த வசதிவாய்ப்புகளும் தத்தமது காலத்திற்குள்ளேயே வரையறுக்கப்பட்டவையாக இருந்தன. முந்தைய காலத்தில் தனித்தனியாக அனுப்பப்பட்டனர். தற்போது அனைவரும் ஒன்றிணையக் கூடிய ஒரு காலம் வந்துவிட்டது. எனவே திருக்குர்ஆனின் வடிவில் முழுமையான ஷரீஅத்தை இறைவன் அனுப்பி விட்டான். மேலும், எல்லா நாடுகளையும் ஒரே தேசமாக ஆக்கிவிடுவான்; மேலும் அனைத்து மொழிகளையும் ஒரு மொழியாக ஆக்கிவிடுவான் என்று அவன் கூறினான். உலகம் ஒன்றாகிவிட்டது; அது ஒரே நகரம் என்ற அந்தஸ்தை அடைந்து விட்டது என்பதைக் குறிக்க இன்று உலகில் குளோபல் வில்லேஜ் என்ற ஒரு சொல்லாடல் பயன்படுத்தப்படுகின்றது.

எவ்வாறு இருப்பினும், திருக்குர்ஆன் மட்டுமே இப்படிப்பட்ட வேதமாக இருக்கின்றது. அதாவது, உலகில் பலதரப்பட்ட மொழிகளை பேசக் கூடியவர்களும் இருக்கின்றனர்; பல மொழிகள் பேசப்படுகின்றன. ஆயினும், உலகில் எங்கு முஸ்லிம்கள் இருந்த போதிலும், மேலும் எந்த சமுதாயத்தில் முஸ்லிம்கள் இருந்தபோதிலும் அவர்கள் அதனை அரபி மொழியில் ஓதுகின்றனர். மேலும், இவ்வாறு ஐவேளை தொழுகைகளில் அது பயன்படுத்தப்படுகின்றது.

நினைவிற் கொள்ள வேண்டும்; அதாவது, திருக்குர்ஆனின் இரகசியங்கள், அதன் ஆழிய ஞானங்கள் தூய மக்களுக்கே திறக்கின்றன. மேலும், அதற்கு தூய மக்களின் தோழமையிலிருந்து பயன் பெறுவதற்கும் அவசியம் உள்ளது. மேலும், இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே அப்படிப்பட்ட நபராக இருக்கின்றார்கள். அன்னார் (அலை) அல்லாஹ்வால் வழங்கப்பட்ட ஞானத்திலிருந்து பயனடைந்து எடுத்துரைத்த விஷயங்களை நாம் பார்க்க வேண்டும்; அதனை சிந்தித்து பார்க்க வேண்டும். மேலும், அன்னார் (அலை) வழங்கிய திருக்குர்ஆன் விளக்கவுரையே அன்னாரின் ஞானத்திற்கு ஏற்ப அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இருக்கின்ற நூல்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் பள்ளிக் கூடங்களில் என்ன கற்று வருகின்றனரோ அதற்கு எவ்வாறு பதில் கொடுப்பது? என்று ஏராளமான பெற்றோர்கள் கேள்வியும் கேட்கின்றனர். நாம் ஆழந்து சிந்தித்து படித்தால்; விளக்கவுரையை படித்தால்; திருக்குர்ஆனின் கட்டளைகளின் ஒளியிலேயே அமைந்திருக்கின்ற ஜமாஅத்தின் நூல்களை படித்தால் பின்னர் பெற்றோர்களால் பிள்ளைகளின் கேள்விகளுக்கும் பதில் அளிக்க முடியும்.

ஸஹாபா பெருமக்கள் மீது திருக்குர்ஆன் ஏற்படுத்திய தாக்கத்தை குறிப்பிட்டவாறு ஹஸ்ரத வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அதாவது, நாம் எந்த நிலையில் வாழ்க்கையை(இது வரை) கழித்து இருக்கின்றோமோ அது ஒரு காட்டுமிராண்டித்தனமான வாழ்க்கையாகும். மேலும், முற்றிலும் தீய அமல்களால் கலந்திருக்கின்ற வாழ்க்கையாகும் என்பதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய தோழமையில் வந்த உடனும், (திருக்குர்ஆன் எனும்) ஃபுர்கானே மஜீதுடைய உள்ளத்தை கவரக் கூடிய தாக்கத்தினாலும் (ஸஹபா பெருமக்களாகிய) அவர்கள் உணர்ந்து கொண்டனர்.எனவே அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஆற்றல் பெற்று தூய அமல்களின் பக்கம் செயல்பட துவங்கினர். அவர்களுக்கு ஆதரவாக அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

وَاَيَّدَهُمۡ بِرُوۡحٍ مِّنۡهُ

அதாவது இறைவன் ஒரு பரிசுத்த ஆவியினால் அவர்களுக்கு உதவி செய்தான். (அல்முஜாதிலா: 23)


(சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானீ கஸாயீன், தொகுதி 23, பக்கம் 424 - 425)

ஆக, இதுதான் அவர்கள் மீது திருக்குர்ஆன் ஏற்படுத்திய தாக்கம் ஆகும். அதாவது, அவர்கள் பூமியிலிருந்து எழுந்து விண்ணின் ஒளிவீசும் நட்சத்திரங்களாக ஆகிவிட்டனர். அவர்களில் ஒவ்வொருவரும் உங்களுக்கு வழிகாட்டி ஆவார்கள் என்று இந்த ஸஹாபிகளைக் குறித்தே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அல்லாஹ் அனைத்து வாசகர்களுக்கும் திருக்குர்ஆனை ஓதுவதற்கும், அதன் பொருளை புரிவதற்கும், மேலும் அதன் போதனைகளுக்கு ஏற்ப வாழ்வை கழிப்பதற்கும் நற்பேறு வழங்குவானாக என்று நான் துஆ செய்கிறேன். ஆமீன்.

வஸ்ஸலாம்
எளியவன்

ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்



ஸய்யிதுனா ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் நிழற்படம்

لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

# பதர் வாரப் பத்திரிகை காதியான் - சிறப்பிதழ்

| | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | தலையங்கம் | 1 |
| 2. | திருக்குர்ஆனின் அந்தஸ்து ( திருக்குர்ஆன் மற்றும் நபிமொழிகளின் ஒளியில் ) | 3 |
| 3. | ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி (அலை) அவர்களின் மேற்கோள்கள் | 4 |
| 4. | அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கலீஃபாக்களின் மேற்கோள்கள் | 5 |
| 5. | ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பா பேருரை | 6 |
| 6. | திருக்குர்ஆனின் ஒளியில் ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கை | 14 |
| 7. | உலக அமைதிக்கு திருக்குர்ஆன் நல்கும் போதனைகள் | 19 |
| 8. | முஸ்லிம் அல்லாதவர்களுடன் சகிப்புத்தன்மை மற்றும் நன்னடத்தை தொடர்பாக திருக்குர்ஆன் நல்கும் போதனைகள் | 24 |

## தலையங்கம்

### ஏகத்துவ கொள்கையின் முக்கியத்துவமும் திருக்குர்ஆனில் அதற்கான போதனைகளும்

இஸ்லாத்தில் மிகவும் அடிப்படையான மற்றும் மிக முக்கியமான போதனை ஏகத்துவம் ஆகும்.

அதாவது لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ

என்பதாகும்.இதன் பொருள்: அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறு எவரும் இல்லை.

மனிதன் தன்னைப் போன்ற ஒரு மனிதனையோ அல்லது வேறு ஏதேனும் படைப்பினத்தையோ அல்லது ஆறு, கடல், மலை, சிகரம் அல்லது கல்லையோ, மரத்தையோ வணங்குவது ஆகுமானது இல்லை. முழு அண்ட சராசரத்திற்கும் ஒரே இறைவனே ஆவான். ஒரே இறைவன் தான் இருக்கின்றான். ஒரே எஜமானனும், படைப்பாளனுமே உள்ளான்.அவன் எப்பொழுதும் இருக்கின்றான். மேலும் எப்பொழுதும் இருப்பான். அனைத்து பொருட்களுக்கும் அழிவு உள்ளது. அவனுக்கோ அழிவு இல்லை. ஏகத்துவ போதனையால் நிறைந்து இருக்கக் கூடிய ஒரே வேதம் திருக்குர்ஆன் ஆகும். அல்லாஹ் உலகத்தில் நபிமார்களை அனுப்பும் தொடரை ஆரம்பித்ததன் நோக்கமே மக்களை ஏகத்துவத்தில் நிலைபெறச் செய்ய வேண்டும்; மேலும், இணை வைத்தலை முற்றாக ஒழிக்க வேண்டும் என்பதாகும். அல்லாஹ்வுக்கு தன்னுடைய ஏகத்துவத்தின் மீது தன்மானம் உள்ளது. முழு அண்ட சராசரத்தையும் படைத்ததன் நோக்கம் மனிதனுடைய ஆன்மிக, பௌதீக முன்னேற்றத்தை முழுமையாக கவனத்தில் வைக்க வேண்டும் என்பதாகும். அவ்வாறு இருக்கையில் மனிதனுக்கு அந்த இறைவனை விட்டு விட்டு வேறு ஒன்றை வணங்குவது எவ்வாறு ஆகுமானதாகும்? தன்னை படைத்தவனை மறந்து விட்டு சூரியன், சந்திரன், நட்சத்திரங்களை வணங்குவது என்பது எத்தகைய அநீதியாகும். மனிதன் தேனீரின் கருணையை ஏற்றுக் கொள்கிறான். ஆனால், அதை பருகக் கொடுத்தவரை மறந்து விட்டான். கருணை செய்தவனை மறந்து விட்டான். ஆனால், அவனிடமிருந்து வழங்கப்பட்ட பொருளை மட்டும் ஞாபகம் வைத்து இருக்கின்றான் என்றால் இது எவ்வாறான அறிவீனம் ஆகும்!

பெற்றோருக்கு கட்டுப்படுதல் மற்றும் கீழ்படிதல் தொடர்பாக அல்லாஹ் திருக்குர்ஆனில் மிகவும் வலுவாக கூறியுள்ளான். ஆனால், இணை வைப்பின் விஷயத்தில் அவர்களுக்கு கீழ்படிவதிலிருந்து தடுத்தும் இருக்கின்றான். பாருங்கள்! அல்லாஹ் கூறுகின்றான்:

وَاِنْ جَاهَدٰكَ عَلٰٓى اَنْ تُشْرِكَ بِىْ مَا لَيْسَ لَكَ بِهٖ عِلْمٌ ۙ فَلَا تُطِعْهُمَا وَصَاحِبْهُمَا فِى الدُّنْيَا
مَعْرُوْفًا ۫ وَّاتَّبِعْ سَبِيْلَ مَنْ اَنَابَ اِلَىَّ ۚ ثُمَّ اِلَىَّ مَرْجِعُكُمْ فَاُنَبِّئُكُمْ بِمَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿١٦﴾

பொருள்: நீ அறியாத ஒன்றை எனக்கு இணை வைக்கும்படி உன்னிடம் அவ்விருவரும் வாக்குவாதம் செய்தால் நீ அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடக்காதே. எனினும், உலக விவகாரங்களில் அவர்களுடன் அன்புடன் ஒத்துழைப்பீராக. மேலும் நீ என்பால் குனிகின்றவரின் வழியைப் பின்பற்றுவாயாக. பின்னர் என்னிடமே நீங்கள் திரும்பி வர வேண்டியதிருக்கின்றது. அப்பொழுது நீங்கள் செய்து கொண்டிருந்தது பற்றி நான் உங்களுக்கு அறிவிப்பேன். (திருக்குர்ஆன் 31: 16)

பின்னர் ஸூரா அன்கபூத்தில் அல்லாஹ் இவ்வாறான போதனையை வழங்கியவாறு கூறுகின்றான்:

وَوَصَّيْنَا الْاِنْسَانَ بِوَالِدَيْهِ حُسْنًا ؕ وَاِنْ جَاهَدٰكَ لِتُشْرِكَ بِىْ مَا لَيْسَ لَكَ بِهٖ عِلْمٌ فَلَا
تُطِعْهُمَا ؕ اِلَىَّ مَرْجِعُكُمْ فَاُنَبِّئُكُمْ بِمَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿٨﴾

பொருள்: தன் பெற்றோரிடம் நல்லமுறையில் நடந்து கொள்ள வேண்டுமென மனிதனுக்கு நாம் கட்டளையிட்டுள்ளோம். ஆனால், உனக்கு எதனைப் பற்றித் தெரியாதோ அதனை எனக்கு நீ இணை வைப்பது குறித்து அவர்கள் உன்னிடம் வாக்குவாதம் செய்தால் நீ அவர்களுக்குக் கீழ்படிய வேண்டாம். என்னிடமே நீங்கள் திரும்பி வர வேண்டியுள்ளது. நீங்கள் செய்த(நல்லவை,தீய)வை பற்றி நான் உங்களுக்கு அறிவிப்பேன். (திருக்குர்ஆன் 29:9)

இணை வைத்தலை மாபெரும் அநீதி என்று அல்லாஹ் கூறுகின்றான். மேலும், இந்த அநீதியை மன்னிக்க முடியாது என்றும் கூறியுள்ளான். இதை தவிர என்ன பாவமாக இருந்தாலும்,எந்த அளவாக இருந்தாலும் அல்லாஹ் அதை மன்னிக்கலாம். ஆனால், இணைவைத்தல் என்ற பாவத்தை அவன் மன்னிப்பதில்லை. ஏனெனில், எந்த நபர் முழு வாழ்நாளும் அல்லாஹ்வை விட்டு விட்டு வேறு ஒருவரிடம் கேட்டுக் கொண்டு இருந்தாரோ தற்பொழுது அவர் அல்லாஹ்விடம் எவ்வாறு கேட்பார்? மேலும் ஒருவேளை அவர் கேட்டார் என்றால், அவருக்கு ஏன் வழங்கப்பட வேண்டும்?

இணை வைத்தல் எனும் மாபெரும் அநீதி குறித்து அல்லாஹ் கூறுகின்றான்:

وَاِذْ قَالَ لُقْمٰنُ لِابْنِهٖ وَهُوَ يَعِظُهٗ يٰبُنَىَّ لَا تُشْرِكْ بِاللّٰهِ ؕ
اِنَّ الشِّرْكَ لَظُلْمٌ عَظِيْمٌ ﴿١٤﴾

பொருள்: லுக்மான் தன் மகனுக்கு அறிவுரை கூறிய பொழுது, என் அருமை மகனே! நீ! அல்லாஹ்வுக்கு இணை வைக்காதே. நிச்சயமாக (அவனுக்கு) இணை வைப்பது மாபெரும் அநீதியாகும் எனக் கூறினார்.

இந்த இணை வைத்தல் எனும் பாவத்திற்கு மன்னிப்பு இல்லை என்பதற்கான அறிவிப்பை அல்லாஹ் ஸூரா அந்நிஸாவில் இரண்டு இடங்களில் கூறுகின்றான்.

اِنَّ اللّٰهَ لَا يَغْفِرُ اَنْ يُّشْرَكَ بِهٖ وَيَغْفِرُ مَا دُوْنَ ذٰلِكَ لِمَنْ يَّشَآءُ ۚ وَمَنْ يُّشْرِكْ
بِاللّٰهِ فَقَدِ افْتَرٰٓى اِثْمًا عَظِيْمًا ﴿٤٩﴾

பொருள்: தனக்கு இணை வைப்பதை அல்லாஹ் ஒருபோதும் மன்னிக்க மாட்டான். இ(ந்தப் பாவத்)தை விடக் குறைந்ததை தான் நாடியவருக்கு மன்னிப்பான். அல்லாஹ்வுக்கு (எதையாவது) இணை வைப்பவன் மாபெரும் பாவத்தை உருவாக்கிக் கொண்டான். (திருக்குர்ஆன் 4: 49)

அடுத்து, 117-வது வசனத்தில் வருகிறது:

اِنَّ اللّٰهَ لَا يَغْفِرُ اَنْ يُّشْرَكَ بِهٖ وَيَغْفِرُ مَا دُوْنَ ذٰلِكَ لِمَنْ يَّشَآءُ ؕ وَمَنْ يُّشْرِكْ بِاللّٰهِ فَقَدْ ضَلَّ ضَلٰلًاۢ بَعِيْدًا ﴿۱۱۷﴾

பொருள்: அல்லாஹ் தனக்கு இணையாக எதையும் ஆக்கிக் கொள்வதை ஒருபோதும் மன்னிக்க மாட்டான். இதை விடக் குறைந்ததை தான் நாடியவருக்கு மன்னிப்பான். அல்லாஹ்வுக்கு எதையாவது இணையாக ஆக்குகின்றவன் (நேரான பாதையிலிருந்து) வெகு தூரம் சென்று விட்டான். (எனப் புரிந்து கொள்க) . ( 4:117)

பிறிதோர் இடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்: இணை வைப்பவரின் இருப்பிடம் நரகமாகும். அதாவது அல்லாஹ் கூறுகின்றான்:

اِنَّهٗ مَنْ يُّشْرِكْ بِاللّٰهِ فَقَدْ حَرَّمَ اللّٰهُ عَلَيْهِ الْجَنَّةَ وَمَاْوٰىهُ النَّارُ ؕ وَمَا لِلظّٰلِمِيْنَ مِنْ اَنْصَارٍ ﴿۷۳﴾

பொருள்: அல்லாஹ்வுக்கு இணை வைக்கின்றவருக்கு அல்லாஹ் சுவர்க்கத்தை விலக்கி விட்டான் (என்றும்) அவருடைய தங்குமிடம் நரகமாகும் (என்றும் புரிந்து கொள்ளுங்கள்). அநீதி இழைப்பவர்களுக்கு உதவியாளர் எவரும் இல்லை. (திருக்குர்ஆன் 5: 73)

இணை வைத்தல் அதிலும் குறிப்பாக இறைவனுக்கு மகன் இருக்கின்றான் என்ற கொள்கை எந்த அளவிற்கு குறைபாடு மிக்கதும், தீய கொள்கையும் என்றால் அல்லாஹ் இந்தக் கொள்கையை குறித்து கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான்:

وَقَالُوا اتَّخَذَ الرَّحْمٰنُ وَلَدًا ﴿۸۹﴾ لَقَدْ جِئْتُمْ شَيْـًٔا اِدًّا ﴿۹۰﴾ تَكَادُ السَّمٰوٰتُ يَتَفَطَّرْنَ مِنْهُ وَتَنْشَقُّ الْاَرْضُ وَتَخِرُّ الْجِبَالُ هَدًّا ﴿۹۱﴾ اَنْ دَعَوْا لِلرَّحْمٰنِ وَلَدًا ﴿۹۲﴾ وَمَا يَنْۢبَغِيْ لِلرَّحْمٰنِ اَنْ يَّتَّخِذَ وَلَدًا ﴿۹۳﴾ اِنْ كُلُّ مَنْ فِي السَّمٰوٰتِ وَالْاَرْضِ اِلَّآ اٰتِي الرَّحْمٰنِ عَبْدًا ﴿۹۴﴾

பொருள்: அளவற்ற அருளா(னான இறைவ)ன் தனக்கு ஒரு மகனை உருவாக்கிக் கொண்டான் என்று அவர்கள் கூறுகின்றனர். நீர் கூறுவீராக. நிச்சயமாக நீங்கள் கொடூரமான (செய்தி) ஒன்றைக் கூறுகிறீர்கள். அதனால் வானங்கள் வெடித்து விடவும், பூமி பிளந்து (பல) துண்டுகளாகி விடவும், மலைகள் தூள்தூளாகி வீழ்ந்தும் விடலாம். ஏனெனில், அவர்கள் அளவற்ற அருளா(ளனான இறைவ)னுக்கு ஒரு மகனை ஏற்படுத்துகின்றனர். அருளா(னனான இறைவ)ன் தனக்கு ஒரு மகனை கொண்டிருப்பதென்பது அவனுக்கு முற்றிலும் தேவையற்றதாகும். ஏனெனில், வானங்கள், பூமி ஆகியவற்றிலுள்ள ஒவ்வொருவரும் அருளா(ளனான இறைவ)னிடம் ஓர் அடிமையாகவே வருவார். (திருக்குர்ஆன் 19: 39-94)

மனிதன் தனக்கு மகன் வேண்டும் என்று விரும்புவது சந்ததி மற்றும் குடும்பத்தின் பாதுகாப்பை கருதியாகும். ஏனெனில், ஒவ்வொரு தந்தைக்கும் ஒருநாள் அழிவு இருக்கின்றது. எனவே, தனக்கு பிறகு பிரதிநிதியை மனிதன் விரும்புகின்றான். ஆகையால் மகன் தந்தையின் பணியை செய்ய வேண்டும்; சொத்துக்களை கவனித்துக் கொள்ள வேண்டும்; தனது பணியில் ஒத்துழைப்பு நல்கியவாறு தனது வேலைகளை எளிமையாக்க வேண்டும்; மேலும் முதுமைப் பருவத்தில் தனக்கு உதவி செய்ய வேண்டும் என்பது மனிதன் சந்ததியை விரும்பவுவதன் நோக்கம் ஆகும்.ஆனால், அல்லாஹ் இந்த அனைத்து விஷயங்களில் இருந்தும் தூயவனும், தேவையற்றவனும் ஆவான்.

اللّٰهُ الصَّمَدُ

அல்லாஹ் எப்படிப்பட்ட இருப்பு என்றால் அவன் அனைவருக்கும் தேவையானவனாக இருக்கின்றான். அவனுக்கு எவருடைய தேவையும் இல்லை. ஒவ்வொரு பொருளும் அல்லாஹ்வினுடைய அடிமையாகும். அவ்வாறு இருக்கையில் அவனுக்கு மகனுடைய தேவை எங்கனம்? அல்லாஹ் அழியக் கூடிய இருப்பு அல்ல. அவனுக்கு மகனுடைய தேவை இல்லை. அல்லாஹ் எப்பொழுதும் இருக்கின்றான். எப்பொழுதும் இருப்பான். சூரா அல்பக்ராவில் 117-வது வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:

பொருள்: இணை வைத்தலை தவிர வேறு எந்த பாவமாக இருந்தாலும் மேலும் எவ்வளவு பெரிதாக இருந்தாலும் அல்லாஹ் நாடினால் மன்னித்து விடுவான்.

ஆகையால் தான் ஸூரா ஸுமரில் தன்னுடைய மாபெரும் அருள் மற்றும் கருணையை அறிவிப்பு செய்தவாறு அல்லாஹ் கூறுகின்றான்:

قُلْ يٰعِبَادِيَ الَّذِيْنَ اَسْرَفُوْا عَلٰٓى اَنْفُسِهِمْ لَا تَقْنَطُوْا مِنْ رَّحْمَةِ اللّٰهِ ؕ اِنَّ اللّٰهَ يَغْفِرُ الذُّنُوْبَ جَمِيْعًا ؕ اِنَّهٗ هُوَ الْغَفُوْرُ الرَّحِيْمُ ﴿۵۴﴾

நீர் கூறுவீராக. தமக்கே (பாவஞ் செய்து) அநீதி இழைத்துக் கொண்ட என் அடியார்களே! நீங்கள் அல்லாஹ்வின் கருணை பற்றி நம்பிக்கை இழந்து விட வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் எல்லா பாவங்களையும் மன்னிக்கின்றான். நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். (திருக்குர்ஆன் 39: 54)

كُلُّ شَيْءٍ هَالِكٌ اِلَّا وَجْهَهٗ -

பொருள்: இறைவனைத் தவிர அனைத்துப் பொருட்களும் அழியக் கூடியவையே ஆகும்.

ஆகையால் இறைவன் ஒரு அழியக் கூடிய இருப்பு அல்லன். இதனால் அவனுக்கு மகனுடைய தேவை ஏற்படவில்லை. அல்லாஹ் எப்பொழுதும் இருக்கின்றான். எப்பொழுதும் இருப்பான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அடுத்து, ஏகத்துவத்தின் இரண்டாவது பகுதி இதுவாகும். அதாவது, எந்தப் பொருளும் இறைவனைத் தவிர சுயமாக நிலைத்திருப்பது இல்லை. அதேபோன்று இறைவனைத் தவிர ஒவ்வொரு பொருளும் தன்னுடைய இருப்பில் அழியக் கூடியதும், அழிவிலிருந்து தப்ப முடியாததும் ஆகும். உதாரணமாக அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்: كُلُّ مَنْ عَلَيْهَا فَانٍ

அதாவது ஒவ்வொரு பொருளும் அழியக் கூடியதாக இருக்கின்றது. மேலும் மரணிக்கக் கூடியது ஆகும். இறைவன் மட்டும் தான் மரணம் என்பதிலிருந்து தூயவன் ஆவான். இதேபோன்று வேறு ஒரு வசனத்தில் வருகின்றது பூமயில் இருக்கின்ற ஒவ்வொருவரும் இறுதியில் மரணம் அடைவார். ஆகையால்,

كُلُّ مَنْ عَلَيْهَا فَانٍ

என்ற இந்த வசனத்தில்

كُلُّ

என்ற சொல் அனைத்தையும் குறிப்பதற்காக வருகிறது. அவனை தவிர்த்து ஒவ்வொரு பொருளும் படைப்பினத்தில்

இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம்....

நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்

தொலைபேசி எண் : 1800 103 2131

இந்த *TOLL FREE* எண்ணில்

∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

## திருக்குர்ஆனின் மகத்துவ மிக்க அந்தஸ்து
## திருக்குர்ஆன் மற்றும் நபிமொழியின் ஒளியில்

### திருக்குர்ஆன் தன்னிகரற்ற வேதம் ஆகும்

قُلْ لَّئِنِ اجْتَمَعَتِ الْاِنْسُ وَالْجِنُّ عَلٰٓى اَنْ يَّاْتُوْا بِمِثْلِ هٰذَا الْقُرْاٰنِ لَا يَاْتُوْنَ
بِمِثْلِهٖ وَلَوْ كَانَ بَعْضُهُمْ لِبَعْضٍ ظَهِيْرًا

பொருள்: நீர் (அவர்களிடம்) கூறுக: இந்தக் குர்ஆனிற்கு நிகரானதைக் கொண்டு வருவதற்காக எல்லா மனிதர்களும், ஜின்களும் ஒன்று திரண்டு விட்டாலும் அவர்களால் இதற்கு நிகாரானதைக் கொண்டு வர முடியாது: அவர்களுள் ஒருவருக்கொருவர் உதவி செய்பவராக இருந்தாலும் சரியே. (17: 89)

### திருக்குர்ஆன் மிகச் சிறந்த வழிகாட்டல் வழங்கக் கூடிய வேதம் ஆகும்

اِنَّ هٰذَا الْقُرْاٰنَ يَهْدِيْ لِلَّتِيْ هِيَ اَقْوَمُ وَيُبَشِّرُ الْمُؤْمِنِيْنَ الَّذِيْنَ يَعْمَلُوْنَ
الصّٰلِحٰتِ اَنَّ لَهُمْ اَجْرًا كَبِيْرًا

பொருள்: நிச்சயமாக இந்தக் குர்ஆன் மற்றெல்லாவற்றையும் விட மிகவும் சரியானதாக இருக்கின்ற பாதையின் பக்கம் வழிகாட்டுகின்றது. நம்பிக்கைக் கொண்டு நிலைமைக் கேற்றவாறு செயலாற்றுபவர்களுக்கு (மா)பெரும் வெகுமதி (விதிக்கப்பட்டு) உள்ளதென்று இது அவர்களுக்கு நற்செய்தியினையும் வழங்குகின்றது. (17:10)

### திருக்குர்ஆன் நம்பிக்கையாளர்களுக்கு குணமளிக்கக் கூடியதும், அருளும் ஆகும்

وَنُنَزِّلُ مِنَ الْقُرْاٰنِ مَا هُوَ شِفَاۤءٌ وَّرَحْمَةٌ لِّلْمُؤْمِنِيْنَ ۙ وَلَا يَزِيْدُ الظّٰلِمِيْنَ اِلَّا
خَسَارًا

பொருள்: நம்பிக்கையாளருக்கு குணமளிப்பதாகவும், அருளாகவும் தவறிழைப்பவர்களுக்கு நஷ்டத்தை அதிகரிக்கக் கூடியதாகவும் திருக்குர்ஆனிலிருந்து (படிப்படியாகப் போதனைகளை) இறக்கிக் கொண்டிருக்கின்றோம். (17:83)

### திருக்குர்ஆன் ஓதுவதற்கு முன்னர் அடைக்கலம் வேண்டுதல்

فَاِذَا قَرَاْتَ الْقُرْاٰنَ فَاسْتَعِذْ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

பொருள்

:(செவியேற்பவரே) நீர் திருக்குர்ஆனை ஓதும்போது துரத்தப்பட்ட ஷைத்தானி(ன் தீங்கி)லிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுவீராக.

( அந் நஹ்ல்:99)

### திருக்குர்ஆனின் திலாவத்தின்போது அமைதியாக இருந்து செவியேற்க வேண்டும்

وَاِذَا قُرِئَ الْقُرْاٰنُ فَاسْتَمِعُوْا لَهٗ وَاَنْصِتُوْا لَعَلَّكُمْ تُرْحَمُوْنَ

பொருள்:

திருக்குர்ஆன் ஓதப்படும்போது அதனை கவனத்துடனும், அமைதியாகவும் செவியேற்க வேண்டும். அப்போதுதான் உங்கள் மீது கருணை செய்யப்படும்.

(அல் அஃராப்: 215)

### ஹதீஸின் அடிப்படையில் திருக்குர்ஆனின் அந்தஸ்து திருக்குர்ஆனை கற்றல் மற்றும் கற்பித்தலின் சிறப்புகள்

عَنْ عُثْمَانَ بْنِ عَفَّانَ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ : قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ
وَسَلَّمَ : خَيْرُكُمْ مَنْ تَعَلَّمَ الْقُرْاٰنَ وَعَلَّمَهٗ

பொருள்:

ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்ஃபான் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: திருக்குர்ஆனை தாமும் கற்று மற்றவருக்கும் எவர் கற்பிக்கின்றாரோ அவரே உங்களில் மிகச் சிறந்தவர் ஆவார்.

(புகாரி, கிதாப் ஃபஸாயிலுல் குர்ஆன்)

### திருக்குர்ஆனின் மூலம் சொர்க்கத்தில் படித்தரங்களின் மேன்மை

قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ يُقَالُ لِصَاحِبِ الْقُرْاٰنِ اِذَا دَخَلَ
الْجَنَّةَ اِقْرَاْ وَاصْعَدْ فَيَقْرَاُ وَيَصْعَدُ بِكُلِّ اٰيَةٍ دَرَجَةً حَتّٰى يَقْرَاَ اٰخِرَ شَيْءٍ مَعَهٗ-


பொருள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: திருக்குர்ஆனை மனனம் செய்தவர் சொர்க்கத்தில் நுழையும்போது, நீங்கள் திருக்குர்ஆனை ஓதிக் கொண்டே செல்லுங்கள்; மேலும் படித்தரங்களின் மேன்மையை பெற்றுக் கொண்டே செல்லுங்கள் என்று அவரிடம் கூறப்படும். அவர் திருக்குர்ஆனை ஓதிக் கொண்டே செல்வார். மேலும், உயர் படித்தரங்களை அடைந்து கொண்டே செல்வார். எந்த அளவிற்கு என்றால், அவருக்கு நினைவில் இருக்கும் கடைசி வசனம் வரை அவர் உயர் படிதரங்களை பெற்றுக் கொண்டே செல்வார்.

(ஸுனன் இப்னு மாஜா, கிதாபுல் அதப்,பாப் ஸவாபுல் குர்ஆன்)

* * * * *

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

## ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி (அலை) அவர்களின் மேற்கோள்கள்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆன் உங்களுக்காக ஏராளமான புனிதக் கட்டளைகளை வகுத்துள்ளது. அவற்றுள் ஒன்று, இணை வைப்பதிலிருந்தும் நீங்கள் உங்களை முற்றிலும் விலக்கிக் கொள்ள வேண்டும் என்பதாகும். ஏனெனில், இணை வைப்பவர் இரட்சிப்பின் தலையூற்றிலிருந்து நற்பேறை இழந்தவராக இருக்கின்றார். நீங்கள் பொய் பேசாதீர்கள். ஏனெனில் பொய்யும் இணை வைத்தலின் ஒரு பகுதியாகும். திருக்குர்ஆன் உங்களுக்கு புதிய ஏற்பாட்டைப் போன்று அந்நியப் பெண்களை தீய பார்வையுடனும் காம இச்சையுடனோ பார்க்கக் கூடாது; அது அல்லாமல் அவர்களை பார்ப்பது ஆகுமானது என்று மட்டும் கூறவில்லை. மாறாக, தீய பார்வையுடனோ நல்ல பார்வையுடனோ நீங்கள் அவர்களை அறவே பார்க்கக் கூடாதென்றே அது கூறுகின்றது. காரணம் இவையெல்லாம் உங்களுக்குத் தடுமாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய இடமாகும். மேலும் அந்நியப் பெண்களுக்கு எதிரில் நீர் இருக்கும்போது உமது கண்கள் உறங்குவது போன்ற நிலையில் இருப்பது அவசியமாகும். அவளது உருவத்தைப் பற்றிய எவ்வித அறிவும் உங்களுக்கு இருத்தலாகாது. கண் நோயின் ஆரம்பத்தில் கண்ணீர் வடியும் போது நிலவும் மங்கலான பார்வையின் நிலையைப் போன்று இருக்க வேண்டும்.

திருக்குர்ஆன் உங்களுக்கு புதிய ஏற்பாட்டைப் போன்று போதை உண்டாகும் வரை மது அருந்தக் கூடாது என்று கூறவில்லை. மாறாக, நீங்கள் மதுவை அருந்தவே வேண்டாம்; இல்லாவிடில் உங்களுக்கு இறைவனை அடையும் வழி கிடைக்காது. மேலும், இறைவன் உங்களோடு உரையாடவும் மாட்டான். மேலும், அசுத்தங்களிலிருந்தும் அவன் உங்களை தூய்மைப்படுத்தவும் மாட்டான் என்றே திருக்குர்ஆன் கூறுகிறது. மேலும் இது ஷைத்தானால் உண்டாக்கப்பட்டதொன்றாகும். ஆகவே இதிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும் என்று அது கூறுகிறது.

திருக்குர்ஆன் உங்களுக்கு புதிய ஏற்பாட்டைப் போன்று உனது சகோதரர் மீது நீர் காரணமில்லாமல் கோபம் கொள்ள வேண்டாம் என்று மட்டும் கூறவில்லை. மாறாக, உங்கள் கோபத்தை மட்டும் அடக்கினால் போதாது. அத்துடன் تَوَاصَوْا بِالْمَرْحَمَةِ

. (ஒருவருக்கொருவர் கருணை புரியுமாறு அறிவுரை கூறவேண்டும்) (திருக்குர்ஆன் 90: 18) என்பதன் படியும் செயல்படுங்கள் எனவும், இதனைக் கடைபிடித்தொழுகுமாறு மற்றவர்களுக்கும் நீங்கள் கூறிக் கொண்டே இருங்கள் எனவும் மேலும் நீங்கள் மட்டும் கருணை காட்டினால் போதாது; உங்களது எல்லா சகோதரர்களுக்கும் கருணை காட்டுமாறு போதனை செய்து கொண்டிருங்கள் எனவும் அது கூறுகிறது.

புதிய ஏற்பாட்டைப் போன்று விபச்சாரத்தைத் தவிர உங்களது மனைவியின் பரிசுத்தமற்ற ஒவ்வொரு செயல் மீதும் நீங்கள் பொறுமையைக் கடைபிடியுங்கள்; நீங்கள் அவளுக்கு மண விலக்கு கொடுக்கக் கூடாது என்று திருக்குர்ஆன் உங்களுக்கு கூறவில்லை. மாறாக,

اَلطَّيِّبَاتُ لِلطَّيِّبِيْنَ

(24:27) என்று கூறுகின்றது. (அதாவது, நல்லப் பெண்கள் நல்ல ஆண்களுக்குத் தகுதந்தவர்கள் ஆவர்- தூய்மையற்றது தூய்மையானதுடன் சேர்ந்திருக்க முடியாது என்பது திருக்குர்ஆனின் கருத்தாகும். எனவே உங்கள் மனைவி விபச்சாரம் செய்யாவிட்டாலும் அவர் காம இச்சையுடன் மற்றவர்களை பார்க்கின்றார்: அவர்களை கட்டியணைக்கிறாள்; விபச்சாரத்திற்கு முன்னோடியான செயல்கள் அவளிடமிருந்து வெளிப்படுகின்றன ; அவை முழுமையை அடையவில்லையென்றாலும் அவள் தனது நிர்வாணத்தை மற்றவர்களுக்குக் காட்டுகிறாள்; அவள் இணை வைப்பவளாகவும், குழப்பம் விளைவிப்பவளாகவும் இருக்கின்றாள்; மேலும் நீங்கள் எந்தப் பரிசுத்த இறைவன் மீது நம்பிக்கை கொண்டிருக்கின்றீர்களோ அவனோடு அவள் வெறுப்புணர்ச்சி கொண்டவளாகவும் இருக்கின்றாள்; என்றால், அவள் இத்தீய செயல்களை விட்டும் மனந்திரும்பாவிடில் நீங்கள் அவளுக்கு மணவிலக்கு கொடுத்து விடலாம். ஏனெனில், அவள் தனது செயல்களால் உங்களை விட்டும் பிரிந்து போய் விட்டாள். இப்போது அவள் உங்களது உடலின் ஒரு பகுதியாக இல்லை. ஆகவே வெட்கம் கெட்ட நிலையில் இப்போது நீங்கள் அவளுடன் வாழ்க்கை நடத்துவது ஆகுமானதன்று. ஏனெனில், இப்போது அவள் உங்களது உடலின் பகுதியாக இல்லை. அவள் அசுத்தம் நிரம்பிய, துர்நாற்றம் கொண்ட ஓர் உறுப்பாக இருக்கின்றாள். ஆகவே இவ்வுறுப்பானது துண்டித்து ஒதுக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இல்லையெனில், இது மற்ற உறுப்புகளையும் அசுத்தமாக்கிவிடும். இதனால் நீங்கள் மரணித்து விடலாம்.

திருக்குர்ஆன் உங்களைப் புதிய ஏற்பாட்டைப் போல ஒருபோதும் சத்தியம் செய்ய வேண்டாம் என்று கூறவில்லை. மாறாக, முட்டாள்தனமான சத்தியம் செய்வதிலிருந்து அது உங்களை தடுக்கின்றது. ஏனெனில், சில சந்தர்ப்பங்களில் சத்தியம் செய்வது நல்ல தீர்ப்பு உண்டாகுவதற்கான ஒரு வழிமுறையாக இருக்கின்றது. மேலும், இறைவன் உண்மை நிரூபணமாகுவதற்குரிய எந்த வழியையும் வீணாக்க விரும்புவதில்லை. இதனால் அவனுடைய குறிக்கோள் மறுக்கப்பட்டு விடுகின்றது. சர்ச்சைக்குரிய விஷயத்தில் எந்த மனிதனும் சாட்சியமளிக்காவிட்டால் அப்போது தீர்ப்புக்காக இறைவனது சாட்சியம் அவசியமாகத் தேவைப்படுவது இயற்கையான ஒன்றாகும். எனவே சத்தியம் செய்வது இறைவனை சாட்சியாளனாக ஆக்குவதற்காக ஆகும்.

மேலும், திருக்குர்ஆன் உங்களுக்கு புதிய ஏற்பாட்டைப் போன்று எந்த ஓரிடத்திலும் அக்கிரமக்காரர்களை எதிர்க்க வேண்டாம் என்று கூறவில்லை. மாறாக,

جَزٰٓؤُا سَيِّئَةٍ سَيِّئَةٌ مِّثْلُهَا فَمَنْ عَفَا
وَاَصْلَحَ فَاَجْرُهٗ عَلَى اللّٰهِ

(திருக்குர்ஆன் 42:41) என்று கூறுகின்றது. அதாவது, தீங்குக்குரிய கூலி அதே அளவிலான தீங்கேயாகும்; ஆயினும், எவர் கண்டும் காணாதிருந்து பாவத்தை மன்னித்து விடுகிறாரோ - மேலும் அந்த மன்னிப்பினால் எந்தவொரு தீமையும் ஏற்படாமல் ஏதாவதொரு சீர்திருத்தம் ஏற்படுமோ இறைவன் அவர் மீது மகிழ்ச்சி அடைவான். மேலும், அவருக்கு இதன் பிரதி பலனையும் அளிப்பான்.

ஆகவே திருக்குர்ஆனின் அடிப்படையில் எல்லா இடங்களிலும் பழிக்குப் பழிவாங்குவது புகழத்தக்கதன்று அல்லது எல்லா சந்தர்ப்பங்களிலும் மன்னிப்பதும் போற்றத்தக்கதன்று. மாறாக, சூழ்நிலைக்கேற்பச் செயல்பட வேண்டும். எனவே பழிவாங்குவதும், மன்னிப்பதும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறும் அதனால் விளையும் நன்மையைப் பொருத்தும் இருக்க வேண்டுமேயன்றி தனது போக்கில் கட்டுப்பாடின்றி செயல்படக் கூடாது என்பது திருக்குர்ஆனின் கருத்தாகும்.

திருக்குர்ஆன் புதிய ஏற்பாட்டைப் போன்று உங்களது பகைவர்களை நேசியுங்கள் என்று மட்டும்

இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம்......

## திருக்குர்ஆனின் மகத்துவம் தொடர்பாக அஹ்மதிய்யா கலீஃபாக்களின் மேற்கோள்கள்

**திருக்குர்ஆனை எத்தனை முறை ஓதுவீர்களோ அத்தனை முறை இன்பமும், ஆனந்தமும் அதிகரித்துக் கொண்டே செல்லும்**

**ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நான் உலகின் ஏராளமான நூல்களை படித்துள்ளேன். மிக அதிகமாக படித்துள்ளேன். ஆனால், உலகின் அழகையும், இன்பத்தையும் வழங்கக் கூடிய இதுபோன்ற வேதத்தை நான் கண்டதில்லை. அதனை மீண்டும், மீண்டும் ஓதுவதால், படிப்பதால் மேலும், சிந்தித்துப் பார்ப்பதால் உள்ளம் சோர்வடைவதில்லை. நான் உங்களுக்கு மீண்டும் நம்பிக்கையூட்டுகின்றேன். (திருக்குர்ஆனாகிய) இதைப் போன்ற ஒரு நூல் ஒருபோதும், ஒருபோதும் இல்லை என்று கூறுகின்றேன். எனது ஆயுள், வாசிப்பை விரும்பும் எனது இயல்பு, நூல்களின் மீதான ஆர்வம் போன்றவற்றின் அடிப்படையில் ஓர் அகப்பார்வை மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் இப்படி கூறுவதற்கு எனக்கு துணிவை வழங்குகின்றது. அப்படி ஒரு நூல் இருக்கின்றது என்றால் ஒரே ஒரு வேதம் மட்டுமே இருக்கின்றது. எது அந்த வேதம்?

ذَالِكَ الْكِتٰبُ لَارَيْبَ فِيْهِ

இது எவ்வளவு அன்பிற்குரிய பெயர் ஆகும்!நான் உண்மையாக கூறுகின்றேன்: திருக்குர்ஆனைத் தவிர வேறு எந்த வேதமும் இல்லை. திருக்குர்ஆனை எத்தனை முறை ஓதுவீர்களோ எத்தனை முறை படிப்பீர்களோ மேலும், எவ்வளவு சிந்தித்துப் பார்ப்பீர்களோ அதே அளவிற்கு ஆனந்தமும், இன்பமும் அதிகரித்துக் கொண்டே செல்லும். இயல்பு சோர்ந்து விடுவதற்கு பகரமாக இன்னும் கூடுதல் நேரம் இதில் செலவழிக்க வேண்டும் என்று இயல்பு விரும்பும். அமல் செய்வதற்காக குறைந்தபட்சம் உத்வேகத்தை உருவாக்குகின்றது. மேலும், உள்ளத்தில் ஈமான், உறுதி மற்றும் ஞானத்திற்கான அலைகள் எழுகின்றன. (ஹகாயிக்குல் ஃபுர்கான், தொகுதி 1, பக்கம் 34)

**திருக்குர்ஆனுடைய ஒரு வசனம் கூட ரத்து செய்யப்படவில்லை**

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆன் முழுமையாக அமல்படுத்துவதற்கு தகுந்த வேதம் ஆகும். எனவே தாம் மரணமடையும் நாள் வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருக்குர்ஆனின் அனைத்து கட்டளைகளின்படியும் செயல்பட்டு வந்தார்கள். மேலும், அதன்படி (மற்றவர்களை) செயல்பட வைத்தும் வந்தார்கள்.திருக்குர்ஆனும் கூட தெளிவான சொற்களில் தனது பாதுகாப்பிற்கான சாட்சியத்தை பகர்கின்றது. உதாரணமாக

اِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَاِنَّا لَهٗ لَحَافِظُوْنَ

என்பதிலிருந்து வெளிப்படுகின்றது.

எனவே இந்த சம்பவங்கள் இருக்கின்றபோது திருக்குர்ஆனின் சில வசனங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளவையாக இருக்கின்றன என்று எண்ணம் கூட கொள்ள முடியாது. தற்போது உலகில் இருக்கின்ற இந்த திருக்குர்ஆனில் ஒரு வசனம் கூட ரத்து செய்யப்படவில்லை.அது தனது தற்போதைய வடிவில் முழுமையானதாகவும், குறைகளற்றதாகவும் இருக்கின்றது.இஸ்லாத்தின் அனைத்து எதிரிகளும் இணைந்து அதில் ஏதாவது வேறுபாட்டை நிரூபிக்க விரும்பினாலும் நிரூபிக்க முடியாது. நாம் அல்லாஹ்வின் அருளால் வாதம் செய்து கூறுகின்றோம்: அறிவார்ந்த தகுதி படைத்த அல்லது ஜமாஅத்தின் ஓர் எதிரி திருக்குர்ஆனில் வேறுபாட்டை நிரூபணம் செய்ய விரும்பினால் பின்னர் திருக்குர்ஆனிலிருந்தே நம்மமால் அவருக்கு மறுப்பு வழங்க முடியும். (தஃப்ஸீரே கபீர், தொகுதி 2, பக்கம் 101)

**எல்லா இறை வேதங்களின் உண்மைத்துவங்களும் திருக்குர்ஆனிற்குள் வந்து விட்டன**

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறுகின்றார்கள்:

அல்லாஹ் சூரா அன்ஆமில் கூறுகின்றான்:

وَهٰذَا كِتٰبٌ اَنْزَلْنٰهُ مُبٰرَكٌ فَاتَّبِعُوْهُ
وَاتَّقُوْا لَعَلَّكُمْ تُرْحَمُوْنَ○

அதாவது திருக்குர்ஆனாகிய இந்த வேதம் எப்படிப்பட்ட வேதமும், எப்படிப்பட்ட ஷரீஅத்தும் என்றால் இது அருளுக்குரியதாகும். அனைத்து இறை வேதங்களின் சிறப்புகளும், அவற்றின் அடிப்படை உண்மைத்துவங்களும் மிதந்து வந்ததைப் போன்று இதனுள் வந்து விட்டன. இனி நீங்கள் இந்த அருளுக்குரிய வேதத்தை பின்பற்றி செயலாற்றுங்கள். இதனால் உங்களுக்கு இரண்டு நன்மைகள் கிடைக்கும். ஒன்று என்னவென்றால், நீங்கள் இறைவனின் அடைக்கலத்தில் வந்து விடுவீர்கள். இறைவன் உங்களுக்கு கேடயமாகி விடுவான். மேலும், அந்த அனைத்து ஷைத்தானிய எண்ணங்களிலிருந்தும் அவன் உங்களை பாதுகாப்பான். ஏனெனில், இந்த அருளுக்குரிய வேதத்தைப் பின்பற்றாமல் இறையச்சத்தின் உண்மையான வழிகளைப் பற்றிய ஞானத்தையும் நீங்கள் பெற முடியாது. மேலும்,இதன் வழி நடக்காமல் மனிதன் இறைவனின் முழுமையான பாதுகாப்பின் கீழும் வர முடியாது. இரண்டாவது நன்மை என்னவன்றால்,
.

تُرْحَمُوْنَ

அல்லாஹ்வின் கருணைக்கு நீங்கள் தகுதி படைத்தவராக இருப்பீர்கள். மேலும் அவனது எண்ணற்ற அருட்கொடைகளும், பௌதீக, ஆன்மிக இன்பங்களும் இதன் விளைவாக கிடைக்கும். (குத்பா ஜுமுஆ, மே 5, 1967)

**ஆரம்பம் முதல் இறுதி வரை நேர்வழிக்கான அனைத்து வழிமுறைகளையும் கற்றுக் கொடுக்கும் வேதம் திருக்குர்ஆன் ஆகும்**

**ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆன் எத்தகைய நேர்வழி வழங்குகின்ற வேதம் என்றால், அதன் மூலம் நேர்வழி பெற விரும்பும் ஒவ்வொரு மனிதனுக்கும் முதல் அடியில் இருந்து அவரது இறுதி எல்லை வரை நேர்வழிக்கான அனைத்து வழிமுறைகளையும் அவருக்கு கற்றுக் கொடுக்கின்றது. ஒவ்வோர் அடியிலும் அவருடன் இருக்கின்றது. இது எப்படிப்பட்ட ஒரு வேதம் என்றால் படித்தரங்களில் உள்ள அனைத்து அபாயங்களையும் அது அறிந்திருக்கின்றது. ஒவ்வோர் அடியிலும் எவ்வகையான சோதனை அந்தப் பயணி அல்லது சீடருக்கு ஏற்படக் கூடுமோ அவற்றை முற்றிலும் அறிந்திருக்கின்றது. மேலும், நேர்வழியைத் தேடிச் செல்கின்ற ஒவ்வொரு பயணிக்கும் மேலும், திருக்குர்ஆனிலிருந்து வழிகாட்டலை பெற விரும்புகின்ற ஒவ்வொரு நபருக்கும் ஒவ்வோர் அபாயத்தின்

இதன் தொடர்ச்சி 10-ம் பக்கம்......

# ஜுமுஆ பேருரை

**திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள அனைத்து நன்மைகளையும் நீங்கள் மேற்கொள்வதற்கு முயற்சி செய்யுங்கள்**

**திருக்குர்ஆனிற்கு வழங்கும் அசல் கண்ணியம் மற்றும் நேசம் என்னவென்றால் அதன் கட்டளைகளின்படி செயல்படுவதற்கு முழுமையான முறையில் முயற்சி செய்யப்பட வேண்டும்**
**நாம் திருக்குர்ஆனை புரிவதற்கு மிக அதிகமாக முயற்சி செய்ய வேண்டும்**
**அதன்படி அமல் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்**

**பத்ர் பத்திரிகையின் சிறப்பிதழ் திருக்குர்ஆன் என்ற தலைப்பின் அடிப்படையில்**
**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன், பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 16 மே 2011** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை இந்த இதழில் வாசகர்களின் பயனுக்காக வெளியிடப்படுகின்றது**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

பொதுவாக நமது பிள்ளைகள் மாஷா அல்லாஹ் மிகவும் சிறிய வயதிலேயே திருக்குர்ஆன் ஓதி முடித்து விடுகின்றனர். அவர்களின் தாய்மார்களுக்கு தமது குழந்தைகள் விரைவாக திருக்குர்ஆன் ஓதி முடிக்க வேண்டும் என்ற கவலை உள்ளது. அதற்காக மிகவும் உழைக்கின்றனர். பல்வேறு நாடுகளில் நான் செல்லும்போது பெற்றோர்கள் தமது குழந்தைகளை என்னிடம் திருக்குர்ஆன் ஓத வைத்து ஆமீன் நிகழ்ச்சியை நடத்தினார்கள். ஆனால், ஒருமுறை திருக்குர்ஆன் ஓதி முடிக்க வைத்த பிறகு அதனைத் திரும்ப ஓதவும்; தொடர்ந்து ஓதுவதற்கும் அவ்வளவாக முயற்சி செய்யப்படுவதில்லை. ஒருமுறை திருக்குர்ஆனை ஓதி முடிக்க வைப்பதற்கு செய்யப்படும் முயற்சி தொடர்ந்து ஓத வைப்பதில் செய்யப்படுவதில்லை. நான் பொதுவாக அவர்களிடம் நீங்கள் தொடர்ந்து திருக்குர்ஆன் ஓதுகின்றீர்களா? இல்லையா? என்று கேட்கும்போதும், சிலர் ஓதுவதை வைத்தும் என்னால் அதனை மதிப்பிட முடிகிறது. தொடர்ச்சியாக திருக்குர்ஆன் ஓதுவது குறித்து திருப்திகரமான பதில் கிடைப்பதில்லை. தாய்மார்களோ ஒருமுறை ஓதி முடித்த பிறகும் குழந்தைகளை கண்காணித்திருக்க வேண்டும். குழந்தைகளிடம் முறைப்படி தொடர்ந்து ஓதும் பழக்கத்தை உருவாக்க முயற்சி எடுத்திருக்க வேண்டும். நமது கவலையெல்லாம் ஒருமுறை திருக்குர்ஆன் ஓதி முடிக்க வைப்பதுடன் நின்று விடக் கூடாது.மாறாக, பிறகும் கூட தொடர்ந்து அதனை கண்காணித்து வர வேண்டும். நிச்சயமாக ஒருமுறை திருக்குர்ஆனை ஓதி வைப்பதும் மிக முக்கிய பணிதான். சில பெற்றோர்கள் 4-5 வயதிலேயே குழந்தைகளை திருக்குர்ஆன் ஓதி முடிக்க வைத்து விடுகின்றனர். நிச்சயமாக இது கடினமாக உழைத்து செய்ய வேண்டிய பணிதான். ஆனால் நான் ஏற்கனவே கூறியதுபோன்று இதனை நிரந்தரமாக கண்காணித்து வருவது இன்னும் அதிக அவசியமான ஒன்றாகும்.

கடந்த சில நாட்களுக்கு முன் ஒரு பெண்மணியின் கடிதம் எனக்கு கிடைத்தது. அதில் எனது தாயாரைப் பற்றி அவர் குறிப்பிட்டிருந்தார். அவர் இவ்வாறு எழுதியிருந்தார்:

அன்னார் என்னிடம் கூறிய ஒரு விஷயத்திறகாக இன்று வரை நான் அன்னாருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். அதாவது ஒருமுறை நான் எனது பிள்ளையை அழைத்துக் கொண்டு (ஹுஸூர் அவர்களின் தாயாராகிய) அன்னாரிடம் சென்றிருந்தேன். எனது பிள்ளை திருக்குர்ஆன் ஓதி முடித்திருந்தது. இந்தக் குழந்தை ஆறு வயதில் திருக்குர்ஆனை ஓதி முடித்து விட்டது என்று நான் மிகவும் பெருமையுடன் அவர்களிடம் கூறினேன். 5 அல்லது 6 வயதில் திருக்குர்ஆனை ஓதி முடிப்பது ஒன்றும் அவ்வளவு சிறப்பிற்குரிய விஷயமல்ல. இந்த குழந்தையின் உள்ளத்தில் திருக்குர்ஆன் மீது எவ்வளவு அன்பை உருவாக்கியுள்ளீர்கள்? என்று எனக்கு கூறுங்கள் என அன்னார் என்னிடம் கேட்டார்கள்.

ஆக, உண்மை இதுவே ஆகும். அதாவது திருக்குர்ஆன் கற்றுக் கொடுப்பதுடன் திருக்குர்ஆன் மீது அன்பை உருவாக்குவதும் மிக அவசியமாகும். அப்போதுதான் குழந்தைக்கு சுயமாக அதனை ஓதுவதற்கு ஆர்வம் ஏற்படும். எந்தக் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோமோ அதில் குழந்தைக்கு பல்வேறு மனம் கவரும் விஷயங்கள் காணப்படுகின்றன. டி.வி. இன்டர்நெட், மற்ற புத்தகங்களின் மீதுள்ள இரசனைகளுக்கிடையில் குழந்தைகள் சுயமாகவே சுபுஹ் வேளையில் திருக்குர்ஆன் ஓதும் போது அது அவர்களிடம் திருக்குர்ஆனின் முக்கியத்துவம் குறித்து ஓர் உணர்வை ஏற்படுத்தும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூட இதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். இக்காலத்தில் மனம் கவரும் பல விஷயங்களும் பல்வேறு புத்தகங்களும் உள்ளன. பல்வேறு அறிவுகளும் வெளி வருகின்றன. இக்காலத்தில் திருக்குர்ஆன் ஓதுவதன் முக்கியத்துவம் இன்னும் அதிகமாகிறது. எப்போதும் கவனம் செலுத்தவும் வேண்டும். அதனைப் படிப்பதன் பக்கம் இன்னும் அதிகம் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

பெற்றோர்ருக்கு திருக்குர்ஆனை ஓதி அதனை சிந்தித்துக் கொண்டிருக்கும் பழக்கம் இருந்தால் தான், அதனைப் படிப்பதில் கவனம் செலுத்தினால் தான் பிள்ளைகளிடம் திருக்குர்ஆன் ஓதுவதில் கவனம் உருவாகும். வீட்டில் சுப்ஹ் தொழுகைக்குப் பிறகு தற்போது குளிர்காலம் என்பதால் சற்று தாமதமாகவே சுபுஹ் நேரம் வருகிறது. எனவே சற்று துரிதமாக பணிக்காக வெளியேற வேண்டியிருப்பவர்கள் தொழுகைக்கு முன்பே முறைப்படி தொடர்ந்து திருக்குர்ஆன் ஓதி வர வேண்டும். இதனால் குழந்தைகளிடமும் கவனம் ஏற்படும்.திருக்குர்ஆனால் வீடு அருட்களால் நிரம்பும். பிறகு ஒரு நம்பிக்கையாளரிடம் இருக்க வேண்டிய நன்மைகளைச் செய்யத் தொடங்கும்

நிலை இருக்கும். இவ்வாறு திருக்குர்ஆனின் மகத்துவம் உள்ளத்தில் வளர்ந்து கொண்டே செல்லும். நம்மில் ஒவ்வொருவரும் அதனைக் காணலாம். நாம் திருக்குர்ஆனை சிந்தித்து ஓதி வந்தால் வீட்டில் கணவன்,மனைவிக்கு இடையில் இறைவனுக்காக அன்பு காணப்படும். அதனால் குழந்தைகளும் ஜமாஅத்தின் ஒரு பயனுள்ள அங்கமாக இருப்பர். அவர்களின் தர்பிய்யத்தும் மிக உரிய முறையில் ஏற்படும். இதனை ஓர் அஹ்மதி தனது வாழ்வின் அங்கமாக்குவதற்கு முழுமையாக கவனம் செலுத்தி முயற்சி செய்ய வேண்டும்.

இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இதனை உருவாக்கவே பெரிதும் முயன்றார்கள். அவர்களின் வருகையின் நோக்கமும் இதுவேயாகும். அல்லாஹ் நம்மை திருக்குர்ஆனுக்கு எல்லாவற்றையும் விட உயரிய அந்துஸ்து வழங்குபவர்களாக ஆக்குவானாக. அவர்களுக்கு இதனை விட கண்ணியத்திற்குரியது எதுவுமே இல்லாமல் ஆகிவிட வேண்டும். நமது ஜமாஅத்திற்கு வெளியில் இருப்பவர்கள் திருக்குர்ஆனுக்கு கண்ணியம் தருவது போன்று கண்ணியம் தந்தால் போதாது. அழகான உறையிலிட்டு ,அழகான அலமாரியில் அவர்கள் வைத்து விட்டார்கள்.அழகானப் பெட்டியில் வைத்துவிட்டார்கள். திருக்குர்ஆனுக்கு தரப்படும் அசல் கண்ணியம், பிரியம் எல்லாம் அதன் கட்டளையின்படி செயல்படுவதிலும் பரிபூரணமாக முயற்சி செய்வதிலும் தான் உள்ளது. மேலும், அதன் ஏவல்,விலக்கல்களை தமது வாழ்வின் அங்கமாக்குவதில் உள்ளது. இறைவன் தடுத்தவற்றிலிருந்து மனிதன் தன்னை தடுத்துக் கொள்வதில் உள்ளது. செய்யுமாறு கட்டளையிடப்பட்ட விஷயங்களைச் செய்வதற்காக தனது எல்லா ஆற்றல்களையும் பயன்படுத்துவதில் உள்ளது. இறைவனின் பயத்தை உள்ளத்தில் கொண்டவாறு அதனை ஓதுவதில் உள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தமது நூல்களில் எண்ணற்ற இடங்களில் தமது சபைகளில், மல்ஃபூஸாத்தில் திருக்குர்ஆனின் முக்கியத்துவத்தை விளக்கியுள்ளார்கள். இதனைப் பற்றி தமது எதிர்பார்ப்பைக் கூறியுள்ளார்கள். பைஅத் செய்த ஓர் அஹ்மதியிடம் தமது எதிர்பார்ப்பு என்ன? என்பதைப் பற்றி அன்னார் (அலை) கூறியுள்ளார்கள்: நாம் நமது வீடுகளை திருக்குர்ஆன் திலாவத்தினால் நிரப்ப வேண்டும். மேலும், திருக்குர்ஆனை ஓதுவதுடன் அதன் மொழியாக்கத்தையும் படிப்பது அவசியமாகும். அப்போதுதான் அதன் கட்டளைகள் புரியும். வீடுகளில் குழந்தைகளுக்கு முன்னால் திருக்குர்ஆன் ஓதுவதுடன் அதனை புரிவதற்கு அது குறித்த மொழியாக்கத்தின் உரையாடல்களும் முயற்சியும் அவசியம் ஆகும். வெறும் திலாவத் செய்யும் வழக்கம் மட்டும் இருந்தால் போதாது. மாறாக, திருக்குர்ஆனின் பொருளை எடுத்துச் சொல்லும் சிறு, சிறு சபைகளை நடத்த வேண்டும். அவர்களிடம் அதனால் ஓர் ஆர்வம் ஏற்படும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தொழுகை மற்றும் திருக்குர்ஆனின் பொருளைப் படிப்பதும், புரிவதும் மிகவும் அவசியமானதாகக் கருதினார்கள். ஆனால், வெறுமனே மொழியாக்கத்தை மட்டும் படித்துக் கொண்டு அசல் சொல்லை ஓதாமல் விட்டு விடுவதற்கு அனுமதியில்லை.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனின் மொழியாக்கத்தை மட்டும் படிப்பதற்கு நாம் ஒருபோதும் அனுமதி தரமாட்டோம். அவ்வாறு செய்வதால் திருக்குர்ஆனில் அற்புதம் மறுக்கப்படுகிறது. மொழியாக்கத்தைப் படிப்பது மட்டுமே போதும் என்று கூறுபவர் உலகில் திருக்குர்ஆனை இல்லாமல் ஆக்க விரும்புகிறார். திருக்குர்ஆனின் அற்புதம் அதன் அசல் நிலையில்தான் உள்ளது. அதுவே அதன் அற்புதமாகும். அதுவே இறைவனது அறிவிப்பு ஆகும்.

إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ

நாமே இந்தத் திக்ரை இறக்கினோம். நாமே இதனை பாதுகாப்போம்.(15:10)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறியுள்ள இந்த அற்புதம் அசல் அரபிச் சொல்லின் மூலம் மட்டுமே இன்று வரை உள்ளது. மிகக் கடும் ஆட்சேபனையாளர்கள், இஸ்லாமிய எதிரிகள் கூட திருக்குர்ஆன் அதன் அசல் வடிவத்தில் அசல் நிலையில் இன்று வரை உள்ளது என்பதை ஒப்புக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. மொழியாக்கத்தை மட்டுமே முற்றிலும் சார்ந்திருந்து விட்டால் பின்னர் ஒரு மொழியாக்கம் மற்றொன்றை விட்டு வேறுபட்டு இருப்பதை நாம் பார்க்கின்றோம். இன்னும் சொல்வதாயின், நாம் நமது மொழியாக்கத்தை உலகின் முன் வைக்கின்றோம். நமது மொழியாக்கம் முற்றிலும் மாறுபட்டது என்றும் ஒப்புக் கொண்டுள்ளோம். மற்றவர்களோ சரியான மொழியாக்கத்தை எழுதவில்லை. இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்யும் பெரும் பாதிரி ஒருவர் அமெரிக்காவில் மொழியாக்கத்தை மட்டும் வைத்துக் கொண்டு அரபி மூலத்தைப் பார்க்காமல் இஸ்லாம் இவ்வாறு கூறுகிறது; இவ்வாறு கூறுகிறது என்று ஆட்சேபனை செய்து வந்தார். அவருக்கு நாம் நமது விளக்கவுரையை அனுப்பினோம். அதனைப் படித்த பிறகு நான் எழுதியுள்ள பொருளும் கூட முஸ்லிம்கள் எழுதியதுதன் என்று அவர் கூறினார்.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மட்டும்தான் மொழிபெயர்ப்பையும் கூட அசல் அரபி வாசகத்திற்கு நெருக்கமாக வழங்கினார்கள். சரியான பொருளையும், ஞானத்தையும் கற்பித்தார்கள். இதனைத் தொடர்ந்து நான் இன்னொன்றையும் கூறுகிறேன். கடந்த நாட்களில் அஹ்மதிகளின் மீது ஆட்சேபனை செய்யக் கூடிய ஒருவரின் ஆட்சேபனை ஒன்று என் பார்வையில் பட்டது. அதில் அவர் கூறியிருந்தார். மிர்ஸா ஸாஹிப் நபியாக இருந்தார்; பிறகு அவர் ஏன்? தனது ஜமாஅத்தைப் பார்த்து இமாம் அபூஹனீஃபாவைப் பின்பற்றுங்கள் என்று கூறினார். அதற்குப் பதிலாக நமது பதில் வந்துள்ளது. அவரைப் பின்பற்றுங்கள் என்று நிச்சயமாக எங்கும் கூறவில்லை. ஆனால் திருக்குர்ஆன் தொடர்பாக இது குறித்து கூறினார்கள்: ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஒரு சபையில் கூறினார்கள். ஹனஃபி மத்ஹபில் திருக்குர்ஆன் மொழியாக்கத்தை மட்டும் படிப்பது போதுமானது என்று உணரப்படுகின்றது; இது ஹஸ்ரத் இமாமே அஃஸம் உடைய மார்க்கமாக இருக்கும் எனில் அது தவறாகும். நிச்சயமாக அவர்கள் இமாம் ஆவார்கள். இஸ்லாத்திற்கு பெரும் தொண்டு செய்துள்ளார்கள். பல மார்க்கச் சட்ட பிரச்சனைகளைச் சரியாகக் கூறியுள்ளார்கள். ஆனால், மொழியாக்கம் மட்டும் படிப்பது போதுமானது என்று அன்னார் கூறுவார்கள் என்றால் அது தவறாகும்.

எவ்வாறிருப்பினும், அல்லாஹ் திருக்குர்ஆனின் அசல் சொற்களை பாதுகாப்பதற்கான வழியாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை)அவர்களை அனுப்பினான். அவர்கள் தமது ஜமாஅத்தை திருக்குர்ஆனைப் படிக்கவும் அதன் மீது அன்பு செலுத்தவும் எண்ணற்ற இடங்களில் வலியுறுத்தியுள்ளார்கள்.

அன்னார் (அலை) ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் வானத்துச் சட்டமும், ஈடேற்றத்தின் ஊடகமும் ஆகும்.

இந்த சொற்களின் பின்னணியில் ஒரு விவாதத்தை பற்றிய குறிப்பு இருக்கின்றது. அதாவது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய மரணத்தை நிரூபணம் செய்வதற்காக அன்னார் (அலை) இவ்வாறு

கூறியுள்ளார்கள். எனினும், இது ஓர் அடிப்படைச் சட்டமாகும். அதாவது திருக்குர்ஆன் ஒரு வானத்துச் சட்டமாகும். அதன் அடிப்படையில் அது ஈடேற்றத்தின் ஊடகமும் ஆகும். நாம் இவ்வுலகிலும் பார்கின்றோம். உலகச் சட்டங்களும் கூட இயற்றப்படுதல் மட்டுமே பயன் தந்து விடுவதில்லை. அதனை அமல்படுத்தாதவரை பயன் தருவதில்லை. அதுபோன்று திருக்குர்ஆனின் சட்டமும் அமல் செய்யப்படும் போதுதான் பயனளிப்பதாகவும், ஈடேற்றத்தின் ஊடகமாகவும் ஆகின்றது. அமல் செய்யப்படவில்லை என்றால் பின்னர் ஈடேற்றத்தின் ஊடகமாக இருக்காது. வெறுமனே படித்து விட்டு அமல் செய்யாவிட்டால் ஈடேற்றம் கிடைக்காது. இறைவனின் திருப்தி கிடைக்காது. இறைவனின் அருட்கொடை மற்றும் வெகுமதிகளுக்கு நாம் வாரிசாக முடியாது. திருக்குர்ஆனின் போதனைகளை புரிவது மற்றும் அதன்படி அமல் செய்வது மிகவும் அவசியமாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:

நினைவிற் கொள்ளுங்கள்! திருக்குர்ஆன் உண்மையான அருட்களின் தலையூற்று மற்றும் ஈடேற்றத்தின் ஊடகம் ஆகும். திருக்குர்ஆனின் மீது அமல் செய்யாதது அம்மக்களின் தவறாகும். அம்மக்களுள் ஒரு பிரிவு அதனை நம்பவில்லை. அதனை இறை வார்த்தையாகக் கருதவில்லை. அவர்கள் மிகவும் வெகு தொலைவில் உள்ளனர். ஆனால் ஈமான் கொண்டவர்களுக்கு இறைவனின் வேதம் நிவாரணம் ஆகும். அவர்கள் அதன்படி அமல் செய்யாவிட்டால் அது எத்தனை வியப்புக்கும், பரிதாபத்திற்கும் உரிய விஷயம்!

அவர்களுள் சிலர் வாழ்நாள் முழுவதும் அதனைப் படித்துப் பார்த்ததே இல்லை. அத்தகையோர் இறைவனது வார்த்தையை பொருட்படுத்தாதவர்; கவனமற்றவர். அவரது உதாரணம், ஒரு மனிதன், இன்ன ஊற்று மிகவும் பரிசுத்தமாக்கக் கூடியது மற்றும் இனிமையானது; பல நோய்களுக்கு அருமருந்து என்று அறிகிறார். அவருக்கு அது குறித்து உறுதியாக அறிவு உள்ளது. அப்படி அறிந்திருந்தும், தாகம் இருந்தும், பல நோய்களால் அவர் பீடிக்கப்பட்டிருந்தும் அந்த நீரூற்றின் பக்கம் செல்லவில்லை. இது அவருக்கு எத்தகைய பேரிழப்பு! அவர் அந்த நீரூற்றில் வாய் வைத்து அருந்தியிருக்க வேண்டும். நிவாரணம் தரும் அந்த இனிய நீரை அவர் சுவைத்திருக்க வேண்டும். அறிந்திருந்தும் அறியாதவரைப் போன்று விலகியிருந்து விட்டார்.

அல்லாஹ் நம்மை இந்த படிப்பினை நிறைந்த தூதுச் செய்தியை புரிந்து திருக்குர்ஆனின் போதனையின்படி அமல் செய்வதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக. அதனைப் புரிந்து கொள்வதற்கு நற்பேறு வழங்குவானாக. நாம் திருக்குர்ஆனின் போதனையை நம்மிடம் செயல்படுத்திக் கொள்ளும்போதுதான் நமது பைஅத்திற்குரிய உண்மையான உரிமையை நாம் செலுத்த முடியும்.

திருக்குர்ஆனின் போதனையாகும். ஏற்கனவே கூறப்பட்டது போன்று திருக்குர்ஆனில் விலக்கப்பட்டுள்ள ஒவ்வொரு தீமையிலிருந்தும் விலகி இருக்க வேண்டும். அதில் கூறப்பட்ட ஒவ்வொரு நன்மையையும் கடைபிடிக்க வேண்டும். அவற்றை மேற்கொள்வதற்கு முழுமையாக முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

மனிதன் தீமையிலிருந்து மட்டும் விலகிக் கொண்டு நாம் முழுமையான மனிதனாகி விட்டோம் என்று நினைத்துக் கொள்ள வேண்டும் என்பது திருக்குர்ஆனின் போதனை அன்று. திருக்குர்ஆன் மனிதனை மிக உன்னத நல்லொழுக்கங்களை உடையவனாக்க விரும்புகிறது. மனித குலத்திற்கு நன்மையும், அனுதாபமும் காட்டத் தக்க செயல்கள் அவனிடமிருந்து வெளிப்பட வேண்டும். அதன் விளைவாக அல்லாஹ் அவனிடம் திருப்தி கொள்ள வேண்டும் என்று அது விரும்புகிறது.

எனவே ஒரு நம்பிக்கையாளருக்கு திருக்குர்ஆனின் மீது உண்யையான பிரியம் இருக்கும் எனில், அவர் இந்த தகுதியை அடைய தாமும் முயன்று, தமது பிள்ளைகளையும் அதன் பக்கம் கொண்டு செல்ல முயற்சி செய்வார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

விஷமம் மற்றும் தீமையிலிருந்து விலகி இருப்பது மட்டுமே முழுமையாகி விடாது. அது மட்டுமே நமது இலக்காகி விடாது. நமது இலக்கை உயர்வாக வைத்திருக்க வேண்டும். அதற்கு முயற்சி செய்ய வேண்டும். திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள எல்லா வகையான நன்மைகளையும், தம் மீது கொண்டு வர முயற்சி செய்ய வேண்டும். இவ்வாறான முயற்சி ஒவ்வோர் ஆண், பெண் மற்றும் குழந்தைகளிடமும் உருவாகி விட்டால் ஒரு தூய சமுதாயம் உருவாகி விடும். இஸ்லாம் நிலைநாட்ட விரும்புகின்ற சமுதாயம் உருவாகும். இக்காலத்தில் திருக்குர்ஆன் மற்றும் இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்பவர்களின் வாயும் அடைபட்டு விடும். இங்கு இஸ்லாத்தின் சட்டங்களுக்கு எதிராக ஆட்சேபனைகளைச் செய்யும் விஷயத்தில் இரண்டு பெண்கள் பிரபல்யமாக இருக்கின்றனர். பல்வேறு சொற்பொழிவுகள் அதனையொட்டி நடக்கின்றன. இஸ்லாமியச் சட்டங்கள் மீது ஆட்சேபிப்பது எல்லை கடந்துள்ளது.

கடந்த நாட்களில் யூ.கே குத்தாமுல் அஹ்மதிய்யாவின் முயற்சியால் அவர்களுடன் UNIVERSITY OF COLLEGE, LONDON- ல் ஒரு விவாதம் நடந்தது. அந்த யுனிவர்சிட்டி அமைப்பு இந்த விவாதத்தை ஏற்பாடு செய்திருந்தது. அதில் இந்த இரு பெண்கள் தமது தரப்பிலிருந்து தமக்குரிய பாணியில் ஆட்சேபனைகளை வீசினர். ஆனால், நமது இரண்டு குத்தாம்களில் ஒருவர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர். நமது ஜாமிஆவில் படிப்பவர். மற்றொருவர், புதிய அஹ்மதியான ஆங்கிலேயர் ஆவார். இருவரும் திருப்திகரமான, ஆதாரப்பூர்வமான பதிலை திருக்குர்ஆனிலிருந்து, திருக்குர்ஆனின் போதனைகளுக்கு ஏற்பவும், இஸ்லாமிய போதனைகளுக்கேற்பவும் வழங்கினார்கள். இது அவர்களைக் கோபமடையச் செய்தது. அவர்கள் இவ்வாறு கோபத்தால் படபடவென ஆட்சேபனை செய்வதைக் கண்டு அவர்களது ஆதரவாளர்கள் கூட பரிதாபப்பட்டனர். அல்லாஹ்வின் அருளால் அஹ்மதி இளைஞர்கள் மூலமாக அவ்விடத்தில் இஸ்லாத்திற்கு வெற்றி கிடைத்தது. இஸ்லாமிய போதனைக்கு வெற்றி கிடைத்தது.

நாம் திருக்குர்ஆனை விளங்குவதற்கு மிகவும் முயற்சி செய்ய வேண்டும். அதன்படி அமல் செய்ய முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் நமது வீடு சொர்க்கத்தின் முன்மாதிரியாகும். நமது சமுதாயத்திலும், சுற்றுப் புறத்திலும் அப்போதுதான் தப்லீஃகின் கடமையை நிறைவேற்றியவர் ஆவோம்.

திருக்குர்ஆனைத் திலாவத் செய்யும் முறையைக் கற்பித்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனை ஆர்வமுடன் சிந்தித்துப் படிக்க வேண்டும்.

ஹதீஸில் வருகிறது: (திருக்குர்ஆனை முறைப்படி ஓதுபவர்களாகிய) காரிகள் எனும் அநேகர் உள்ளனர். அவர்கள் மீது திருக்குர்ஆன் சாபம் அனுப்புகிறது. ஒருவர் திருக்குர்ஆனைப் படித்து அமல் செய்யவில்லை எனில், திருக்குர்ஆன் அவர் மீது சாபத்தை அனுப்புகின்றது. திலாவத் செய்யும் போது கருணையைப் பற்றி வந்தால் அங்கு இறைவனிடம் கருணையை வேண்ட வேண்டும். ஏதாவது ஒரு சமுதாயத்தின் தண்டனை பற்றி குறிப்பிடப்படும் இடத்தை

ஓதும்போது இறைவனிடம் இறை தண்டனையிலிருந்து அடைக்கலம் தேட வேண்டும். சிந்தித்து நிதானமாக ஓத வேண்டும். அதன்படி அமல் செய்ய வேண்டும். அதன் முக்கியத்துவம் தெரிந்தால் மட்டுமே இந்நிலை உருவாக முடியும். அதனுடன் சிறப்பான தொடர்பு இருக்க வேண்டும். திருக்குர்ஆனின் மீதான ஒரு முக்கியத்துவத்தை நமது உள்ளத்தில் நாம் உருவாக்க வேண்டும்.

சிலர் திருக்குர்ஆனைப் புரிவது கடினம் என்று சாக்குப்போக்குகளைக் கூறுவது குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

எம்மால் திருக்குர்ஆனை விளங்க முடியாது;இது மிகவும் சிக்கலானது எனவே இதன் மீது கவனம் செலுத்த வேண்டாம் என்று சில அறிவீனர்கள் கூறுகின்றார்கள். அது அவர்களின் தவறாகும். திருக்குர்ஆன் கொள்கை ரீதியான விஷயங்களை மிகவும் விளக்கமாக எடுத்துரைத்துள்ளது. அது ஈடிணையற்றது. அதன் சான்றுகள் உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் வல்லமை கொண்டவை. திருக்குர்ஆன் எத்துணை பொருட்செறிவு மிக்கது எனில் முற்றிலும் கல்வி அறிவற்ற அரபிகளுக்குக் கூட புரிய முடிந்தது. பிறகு எப்படி? அதனை முடியாது என்று கூற முடியும்!

இக்காலத்தில் நம் மீது இறைவன் செய்த பெரும் அருளால் - நம் மீது பேரருள் செய்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை அனுப்பினான். அவர்கள் நமக்கு வெளிப்படையான கட்டளைகளை மட்டும் கூறவில்லை. மாறாக, ஆழமான தத்துவங்களையும், திருக்குர்ஆன் ஞானங்களையும் விளக்கினார்கள்.

وَآخَرِينَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوا بِهِمْ

(இவர்களுடன் சேராத பின்னுள்ளவர்களிலிருந்து அவரை அனுப்புவான்) என்பதன் அருளை நம் வரை கொண்டு சேர்த்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தந்த அந்த கருவூலத்திலிருந்து வைரங்களைத் திரட்ட முயற்சி செய்ய வேண்டும். நாம் அதன் மீது உண்மையான அன்பு வைக்காத வரை அவ்வாறு ஆக முடியாது.உலகில் பெரும்பாலார் ஜமாஅத்திற்கு வெளியிலுள்ள முஸ்லிம்கள் ஆவர். அவர்களின் கிராஅத் மிக நன்றாக இருக்கிறது. பெரும் பரிசுகளைப் பெறுகின்றனர். அவர்களது பதிவுகளைக் கொண்ட கேசட்டுகள் வருகின்றன. அந்த நல்ல கிராஅத்தை உடையவர்களுள் சிலருக்கு திருக்குர்ஆனின் பொருள் தெரிவதில்லை. ஏன் பெரும் ஆலிம்களுக்கும் கூட பொருள் தெரிவதில்லை. அதனால் தான் மிக நீண்ட காலமாக நாஸிக், மன்ஸுக் (மாற்றிய, மற்றும் மாற்றப்பட்ட வசனம்) என்ற விவகாரம் இருந்து கொண்டிருக்கின்றது. இப்போதும் கூட சில வசனங்களின் பொருள்கள் இவர்களுக்கு தெரிவதில்லை. அவற்றில் ஹஸ்ரத் ஈஸா (அலை)அவர்களுடைய மரணம் தொடர்பான விஷயமும் ஒன்று.

எவ்வாறிருப்பினும், அதன் பொருளைக் குறித்து அவர்கள் அறியாமல் உள்ளனர். அது குறித்து ஓர் எச்சரிக்கையூட்டும் ஹதீஸ் உள்ளது.

ஹஸ்ரத் அப்பாஸ் பின் அப்துல் முத்தலிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒரு காலம் வர உள்ளது. திருக்குர்ஆனை திலாவத் செய்யக் கூடியவர்களுள் எம்மை விட சிறந்த காரி யார்? என்று வாதாடுபவர்கள் உருவாகுவார்கள். எம்மை விட பெரிய ஆலிம் யார்? என்று மார்த்தட்டுவார்கள். பிறகு, அத்தகையவர்களிடம் நீங்கள் ஏதாவது நல்ல விஷயத்தைக் காட்ட இயலுமா? என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஸஹாபிகளிடம் கேட்டார்கள். ஒருபோதும் இல்லை என்று ஸஹாபிகள் கூறினர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அத்தகைய மக்கள் இதே சமுதாயத்தில் இருந்து தோன்றுவார்கள். ஆனால், அவர்கள் நரக நெருப்பின் விறகாக இருப்பார்கள்.

ஆகவே, அல்லாஹ்வின் அருளுக்கு வாரிசாகக் கூடிய இறை நெருக்கத்தை பெற்றுத் தருகின்ற நரக நெருப்பிலிருந்து காப்பாற்றுகின்ற அசல் விஷயம் பணிவுடன் திருக்குர்ஆனின் போதனையைப் புரிந்து அதன்படி அமல் செய்வதுதான். அதனை தொழிலாக்குவதல்ல. மாறாக, அதன் மீது அன்பு கொள்ள வேண்டும். இன்று அஹ்மதிகளாகிய நமது ஒவ்வொருவரின் கவனமும் அதன் மீது இருப்பது கடமையாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள். கிஷ்தி நூஹ் எனும் நூலில் அன்னார் கூறுகின்றார்கள்.

எச்சரிக்கையாக இருங்கள். இறைவனது போதனையான திருக்குர்ஆனின் வழிகாட்டலுக்கு எதிராக ஓர் அடி கூட வைக்காதீர்கள். நான் உங்களிடம் உண்மையாகவே கூறுகின்றேன். எவர் திருக்குர்ஆனின் 700 கட்டளைகளில் ஒரு சிறு கட்டளையைக் கூட விட்டு விடுவாரோ அவர் ஈடேற்றத்தின் வாசலை தனது கைகளாலேயே அடைத்துக் கொள்கிறார். உண்மையான இரட்சிப்பின் வழியை திருக்குர்ஆனே திறந்தது. மற்ற அனைத்தும் அதன் நிழலே. எனவே நீங்கள் திருக்குர்ஆனைச் சிந்தித்துப் படியுங்கள். அதன் மீது மிகவும் அன்பு கொள்ளுங்கள். எதன் மீதும் கொள்ளாத அன்பு கொள்ளுங்கள். ஏனெனில்,. எல்லா வகையான நன்மைகளும் திருக்குர்ஆனில் உள்ளன என்று இறைவன் என்னை விளித்துக் கூறினான்.இதுவே உண்மையாகும். அம்மக்களின் மீது பரிதாபம்! அவர்கள் மற்றவற்றிற்கு அதனை விட முன்னுரிமை கொடுக்கின்றனர். உங்களது அனைத்து வெற்றிகளும், ஈடேற்றத்தின் தலையூற்றும் திருக்குர்ஆனில் தான் உள்ளது. திருக்குர்ஆனில் இல்லாத எந்த மார்க்கமும் உங்களுக்குத் தேவையில்லை. உங்களது ஈமானை கியாமத்து நாளில் உண்மைப்படுத்தக் கூடியதும், பொய்ப்பிக்கக் கூடியதும் திருக்குர்ஆனே ஆகும். திருக்குர்ஆனைத் தவிர வானத்தின் கீழ் உங்களுக்கு நேரடியாக நேர்வழி காட்டக் கூடிய எந்த வேதமும் இல்லை. திருக்குர்ஆனாகிய ஒரு வேதத்தை உங்களுக்கு அருளியதன் மூலம் இறைவன் உங்கள் மீது கருணை காட்டியுள்ளான்.

நான் உண்மையாகக் கூறுகின்றேன். உங்களிடம் படித்துக் காட்டப்பட்ட இந்த வேதம் கிறிஸ்தவர்களிடம் இறக்கப்பட்டிருந்தால் அவர்கள் அழிந்து போயிருக்க மாட்டார்கள். தவ்ராத்திற்குப் பதில் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த வேதம் யூதர்களுக்கு வழங்கப்பட்டிருந்தால் அவர்களுள் சில பிரிவினர் கியாமத்தை மறுத்திருக்க மாட்டார்கள். ஆகவே, உங்களுக்கு தரப்பட்ட இந்த அருட்கொடைக்கு கண்ணியம் அளியுங்கள். இது மிகவும் அன்பிற்குரிய அருட்கொடை ஆகும். இது பெரும் செல்வமாகும். திருக்குர்ஆன் வராவிட்டால் இவ்வுலகம் ஒரு அசுத்தமான பொருள் போன்று ஆகியிருக்கும். திருக்குர்ஆனுக்கு எதிரில் எல்லா வழிகாட்டல்களும் ஒன்றுமற்றவை ஆகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

உங்களுக்கு ஒரு முக்கிய போதனையாவது திருக்குகுர்ஆனை கைவிடப்பட்ட ஒன்றைப் போன்று விட்டு விடாதீர்கள். அதிலேயே உங்கள் வாழ்வு உள்ளது. எவர் திருக்குர்ஆனிற்கு கண்ணியம் அளிப்பாரோ அவர் வானத்தில் கண்ணியம் பெறுவார். எவர் ஹதீஸ் மற்றும் ஒவ்வொரு கூற்றையும் விட திருக்குர்ஆனுக்கு முதன்மை வழங்குவாரோ அவருக்கு வானத்தில் முதன்மை வழங்கப்படும். திருக்குர்ஆனைத் தவிர மனித குலத்திற்கு எந்த வேதமும் இல்லை. ஆதமின் மக்கள் அனைவருக்கும் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைத் தவிர ஒரு தூதரும் இல்லை ; பரிந்துரை செய்பவரும் இல்லை. எனவே இந்த கம்பீரமிக்க நபியின் மீது உண்மையான அன்பு கொள்ள முயற்சி செய்யுங்கள். வேறு எவருக்கும் அவரை விட சிறப்பு வழங்காதீர்கள். அதன் மூலமே நீங்கள் வானத்தில் ஈடேற்றம் பெற்றவராக எழுதப்படுவீர்கள்.

நினைவிற் கொள்ளுங்கள். ஈடேற்றம் என்பது மரணத்திற்குப் பிறகு வெளிப்படும் ஒன்றல்ல. உண்மையான ஈடேற்றம் இவ்வுலகிலேயே அதன் வெளிச்சத்தைக் காட்டும். ஈடேற்றம் பெற்றவர் யார்? அவர், இறைவன் உண்மை என்று உறுதி கொண்டு ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் எல்லா படைப்பினங்களுக்கும் இறைவனுக்கும் இடையில் பரிந்துரைப்பவர் ஆவார் என்றும் உறுதி கொள்பவர்; வானத்தின் கீழ் அவருக்கு சமமான ஒரு தூதர் இல்லை. மேலும், திருக்குர்ஆனுக்கு சமமான ஒரு வேதமும் இல்லை. எவரும் நிரந்தரமாக உயிருடன் இருக்க வேண்டும் என்று இறைவன் விரும்பவில்லை. ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த ரஸூல் நிரந்தரமாக உயிருடன் இருப்பவர் ஆவார். அவர் நிரந்தரமாக உயிருடன் இருப்பதற்காக இறைவன் ஓர் அடிப்படையை நிறுவினான். அதாவது அவரது ஷரீஅத்தையும் கியாமத் வரை தொடரச் செய்வான். அவரது ஷரீஅத்தும் ஆன்மிகமும் கியாமத் வரை நிலைத்திருக்கும்.

இறுதியில் அவரது இரண்டாவது ஆன்மிக அருளாக இந்த மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை உலகில் அனுப்பினான். அவர் வருவது இஸ்லாமிய கட்டடத்தை முழுமைப்படுத்துவதற்கு மிகவும் அவசியமாக இருந்தது. ஏனெனில், மூஸாவின் தொடரில் தரப்பட்டது போன்று முஹம்மதிய்ய தொடருக்காகவும் ஆன்மிகமான முறையில் ஒரு மஸீஹ் தோன்றும் வரை இந்த உலகம் அழியமால் இருப்பது அவசியமாக இருந்தது. இதனையே اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡهِمۡ

என்ற இந்த வசனம் சுட்டிக் காட்டுகிறது. நாமும் நமது சந்ததிகளும், வரக்கூடிய சந்ததிகளும், கியாமத் வரை வரக் கூடிய சந்ததிகளும், எவர்கள் முஹம்மதிய்ய மஸீஹை ஒப்புக் கொண்டுள்ளார்களோ அவர்கள் அனைவரும் திருக்குர்ஆன் மீது உண்மையான முறையில் அன்பு கொண்டவாறு அதன் போதனையை தங்களிடம் செயல்படுத்திக் கொள்பவர்களாக திகழ அல்லாஹ் அருள் செய்வானாக! அதன் அருட்களில் இருந்து ஒவ்வொரு நொடியும் பலனைடந்து கொண்டே செல்லட்டுமாக!

* * * *

**5-ம் பக்கத் தொடர்ச்சி.....**
**திருக்குர்ஆனின் அந்தஸ்து தொடர்பாக கலீஃபாக்களின் மேற்கோள்கள்**

நேரத்திலும் அவருக்கு அறிவித்துக் கொடுத்து சென்று விடுகின்றது. மேலும், அந்த அபாயங்களிலிருந்து தப்பிப்பதற்கான வழிகளையும் கற்றுக் கொடுத்துக் கொண்டே செல்கின்றது. புதிய தைரியத்தையும் வழங்கிக் கொண்டே செல்கின்றது. சுருக்கமாக, நேர்வழியில் செல்லக் கூடியவரை ஒரு நொடி கூட கைவிட்டு விடுவது கிடையாது.

நாம் இந்த அம்சத்தின் அடிப்படையில் திருக்குர்ஆனை சீர்தூக்கிப் பார்க்கும்போது

حَسۡبُنَا كِتَابُ اللّٰهِ

என்பதன் பொருள் புரிய வருகின்றது. உண்மை என்னவெனில்,எவர்கள் இந்த வேதத்திலிருந்து வழிகாட்டல் பெற விரும்புகின்றார்களோ அவர்களுக்குரியதாகும். மேலும் நாங்கள் இந்த வேதம் கூறியுள்ள வழிகளில் நடப்போம் என்று அவர்கள் கூறுகின்றனர்.

مُخۡلِصِیۡنَ لَهُ الدِّیۡنَ

என்ற அதுபோன்ற மக்களுக்கு இந்த வேதம் எல்லா வகையிலும் போதுமானதாகும். மேலும் இதன் பிறகு அவர்களுக்கு வேறெந்த விஷயத்திற்கும் தேவை இருக்காது. (குத்பாத்தே தாஹிர், தொகுதி 2, பக்கம் 579)

**திருக்குர்ஆன் என்பது அனைத்து வகையான போதனைகள் மற்றும் வாழ்க்கைச் சட்டங்களின் தொகுப்பாகும்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆனின் போதனையோ எல்லா வகையான போதனைகள் மற்றும் வாழ்க்கைச் சட்டத்தின் தொகுப்பாக உள்ளது. ஆன்மிகத்தின் உயர் தரங்களை அடைவதற்கான போதனையை இது வழங்குகின்றது. நல்லொழுக்கத்தின் உயர் தரங்களுக்கான போதனையை வழங்குகின்றது. சாதாரண அறிவு படைத்த ஒவ்வொருவருக்கும், உயர்ந்த அறிவும், புரிதலும் கொண்டவருக்கும் இதில் போதனை வழங்கப்பட்டுள்ளது. ஆக, இதில் ஒரு விஷயம் இதுவும் ஆகும். அதாவது, உங்களுக்கு புரியவில்லை என்றால் பின்னர் ஆட்சேபனை செய்வதற்கு பகரமாக உங்களது அறிவுகளின் மீது அழுத்தம் கொடுக்க வேண்டும். அதை தவிர்த்து ஆட்சேபனை செய்தல் கூடாது. திருக்குர்ஆனின் போதனை என்பதோ முற்றிலும் மனித இயல்பிற்கு பொருத்தமானதாகவே இருக்கின்றது. ஆனால், அதனை புரிந்து கொள்வதற்கு உள்ளம் பரிசுத்தமாக இருப்பது அவசியம் ஆகும். இன்று, அஹ்மதிய்யா ஜமாஅத் அதன் ஞானத்தைப் பெற்று பின்னர் மற்றவர்களுக்கு எட்ட வைக்கின்றது. வாருங்கள்! அதன் மூலம் இந்த அறிவையும், புரிதலையும் பெற்றுக் கொள்ளுங்கள். அல்லாஹ் அந்த மக்களுக்கு அறிவை வழங்குவானாக. மேலும், எந்த முடிவைக் குறித்து இறைவன் எச்சரிக்கை செய்துள்ளானோ அந்த முடிவிலிருந்து பாதுகாப்பானாக.

(குத்பாத்தே மஸ்ரூர், தொகுதி 6, பக்கம் 96)

* * * * *

## தலையங்கம்
## 2-ம் பக்கத் தொடர்ச்சி....
## திருக்குர்ஆன் கூறும் ஏகத்துவம்

அடங்கும்.

ஒவ்வொரு பொருளுக்கும் அவன் நிச்சயமாக மரணத்தை நிர்ணயித்துள்ளான். (சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானி கஸாயீன், தொகுதி 23, பக்கம் 165)

திருக்குர்ஆன் ஏகத்துவத்தின் கருத்தால் நிறைந்திருக்கின்றது. எவ்வாறு என்றால், ஓரிடத்தில் அது கூறுகின்றது:

இரவும், பகலும் சூரியனும், சந்திரனும் அவனது அடையாளங்களைச் சார்ந்தவையே. சூரியனுக்கோ, சந்திரனுக்கோ சிரம் பணியாதீர்கள். நீங்கள் அ(வ்விறை)வனையே வணங்குகிறீர்கள் என்றால், அவற்றைப் படைத்த அல்லாஹ்வுக்கே சிரம் பணியுங்கள்.
(திருக்குர்ஆன்: 41: 38)

அல்லாஹ்வைத் தவிர வேறு எவரையும் வணங்கக் கூடாது என்று தான் அனைத்து நபிமார்களும் தத்தமது சமுதாயத்திற்கு முதன்மையான போதனையாக வழங்கினார்கள். அவனை விட்டு விட்டு வேறு ஒன்றை அல்லது வேறு எவரையாவது வணங்கும் விஷயத்தை அல்லாஹ் மிகவும் வியப்புடனும், பரிதாபத்துடனும் கூறியிருக்கின்றான்.

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தம்முடைய சமுதாயத்திடம் கூறினார்கள்.

உங்களுக்கு எந்த நன்மையோ தீமையோ செய்ய முடியாத ஒன்றையா நீங்கள் அல்லாஹ்வை விட்டு விட்டு வணங்குகின்றீர்கள்?

உங்கள் மீது அந்தோ பரிதாபம்! அல்லாஹ்வையன்றி நீங்கள் எதனை வணங்குகின்றீர்களோ அவற்றின் மீதும் பரிதாபம்!நீங்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லையா?(திருக்குர்ஆன் 21: 67 -68)

அடுத்து, ஸூரா அஸ்ஸாஃபாத்தில் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள், தமது சமுதாயத்திடம் இவ்வாறு கூறுகின்றார்கள்: நீங்கள் உங்கள் கைகளால் உருவாக்கியவற்றை நீங்கள் வணங்குகின்றீர்களா? என்று கூறுகின்றார்கள். இணை வைப்பாளரின் இந்த செயல் மிகவும் நகைப்பிற்குரியதும், பரிதாபத்திற்குரியதும் ஆகும். அதாவது அவர்கள் தங்களது கைகளால் தாமே உருவாக்குகின்றனர். பின்னர் அதன் முன்னால் சிரம் பணிகின்றனர். பின்னர் அதனை எடுத்துச் சென்று நீரில் மூழ்கடிக்கின்றனர்.

அடுத்து, ஸூரா மர்யமில் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தன்னுடைய தந்தையிடம் கூறுகின்றார்கள்: என்னுடைய தந்தையையே! நீங்கள் ஏன் அதை வணங்குகின்றீர்கள்? அதனால் கேட்கவோ பார்க்கவோ முடியாது. மேலும், உங்களுக்கு எந்த பயனையும் தராது.

ஆகையால் ஓர் இணை வைப்பாளர் அல்லாஹ்வை விட்டு விட்டு வேறு எதை அழைத்தாலும் மேலும் எவ்வளவு அழைத்தாலும் அந்த அழைப்பு என்பது அவருக்கு எந்தப் பயனையும் தருவதில்லை. அவர் எதை அழைக்கின்றாரோ அதனால் பார்க்க முடியாது;கேட்க முடியாது; எந்த பலனையும் தர முடியாது. எனவே இணை வைப்பாளர்களின் அழைப்பும், அனைத்து இறை வணக்கமும் மேலும் அனைத்து வேண்டுதல்களும் வீணாகி விடுகின்றன.(ரூஹானீ கஸாயீன், தொகுதி 5, பக்கம் 223)

### நெருக்கத்தை பெறுவதன் அடிப்படையில் ஏகத்துவத்தின் மூன்று படித்தரங்கள்

முதல் படித்தரம், பொது மக்களுக்கானதாகும். அதாவது இறைவனுடைய கோபத்திலிருந்து தங்களை காத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கின்ற அந்த மக்களுக்குரியது ஆகும். இரண்டாவது படித்தரம் சிறப்பானவர்களுக்கானதாகும். அதாவது அதிகமாக இறை நெருக்கத்தை சிறப்பாக உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்று நினைக்கின்ற அந்த மக்களுக்கானது ஆகும்.

மேலும், மூன்றாவது படித்தரம் மிகச் சிறப்பானவர்களுக்காக ஆகும். அதாவது நெருக்கத்தின் உச்சம் வரை செல்ல வேண்டும் என்று விரும்புவார்கள். ஏகத்துவத்தின் முதல் படித்தரம் அல்லாஹ்வை அன்றி வேறொன்றை வணங்காமல் இருப்பது ஆகும். (கிதாபுல் பரிய்யா, ரூஹானீ கஸாயீன், தொகுதி 13, பக்கம் 83)

தற்போது நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஏகத்துவம் தொடர்பாக மாற்று மதத்தினர் முன்பு வைத்த வல்லமை மிக்க சவால்கள் பற்றி கூறுவேன். திருக்குர்ஆன் எந்த அளவிற்கு அல்லாஹ்வின் ஏகத்துவத்தை கூறியிருக்கின்றது மேலும் அவனை குறைகளிலிருந்து தூய்மையானவன் என்று கூறியிருக்கின்றது என்றால் இவ்வாறான கூற்று வேறு எந்த மார்க்க நூலிலும் கூறப்படவில்லை . என்று அன்னார் (அலை) மாற்று மதத்தினர் முன்பு சவால் விடுத்தார்கள். எந்த அளவிற்கு திருக்குர்ஆன் ஏகத்துவத்தின் கூற்றுகளால் நிறைந்து இருக்கின்றது என்றால், வேறு எந்த வேதமும் ஏகத்துவம் தொடர்பாக இவ்வாறான கூற்றுகளை முன் வைக்கவில்லை. மாறாக, அதனுடைய ஆயிரம், லட்சத்தில் ஒரு பங்கு கூட முன் வைக்கவில்லை.

ஸூரா இக்லாஸின் ஒரு வரியில் எந்த அளவிற்கு ஏகத்துவத்தின் கருத்து நிறைந்திருக்கின்றது என்றால் அது முழு தவ்ராத்திலும் மாறாக, முழு பைபிளிலும் தென்படுவதில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் சூரா ஃபாத்திஹா தொடர்பாக ஒரு மிகவும் அற்புதமான மேலும் கவரக் கூடிய சவலை கிறிஸ்தவ உலகத்திற்கு முன்பு தம்முடைய பராஹீனே அஹ்மதிய்யா எனும் நூலில் கூறியிருக்கின்றார்கள். அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஸூரா இக்லாஸின் ஒரு வரியில் எந்த அளவிற்கு ஏகத்துவத்தின் கருத்து நிறைந்திருக்கின்றது என்றால் அது முழு தவ்ராத்திலும் மாறாக, முழு பைபிளிலும் தென்படுவதில்லை. அவ்வாறு இருக்கின்றது என்றால் யாராவது ஒரு கிறிஸ்தவர் நமக்கு அதை காட்ட வேண்டும்.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: மஸீஹின் கூற்றின் மீது உங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றால், மேலும் அதாவது இஞ்சிலுக்கும் திருக்குர்ஆனுக்கும் போட்டி வைத்துக் கொள்ளலாம் என்று நீங்கள் சுயமே விரும்புகிறீர் என்றால் பின்னர் வாருங்கள். பிஸ்மில்லாஹ்! இந்த வேதமாகிய திருக்குர்ஆன் தொடர்பாக நாம் நிரூபித்த அந்த அற்புதங்களை இன்ஜீலில் இருந்து நீங்கள் எடுத்துக் காட்டுங்கள். இதன் மூலம் நடுநிலையான மக்கள் புரிந்து கொள்ளட்டும். அதாவது இறைவனை அறிந்து கொள்வதற்கான வழிவகைகள் திருக்குர்ஆனில் இருக்கின்றனவா அல்லது இஞ்சிலில் இருக்கின்றனவா? என்பதை நடுநிலையான மக்கள் அறிந்து கொள்வார்கள். இந்த நிலையிலேயே நாம் இந்த தீர்ப்பிற்காக , அதாவது இஞ்சீல் மற்றும் திருக்குர்ஆன் தொடர்பாக வித்தியாசத்தை தெரிந்து கொள்வதற்காக 10000 ரூபாய்க்கான பிரசுரத்தையும் என்னுடைய நூலில் நான் இணைத்து இருக்கின்றேன். அவ்வாறு இருக்கையில், பிறகு நீங்கள் எதுவரை நல்லடியாரைப் போன்று இனி எம்முடைய புத்தகத்திற்கு எதிராக உங்களுடைய இஞ்சீலின் மகத்துவத்தை காண்பிக்க மாட்டீர்களோ அது வரை எந்தவொரு அறிவுள்ள கிறிஸ்தவரும் உங்களுடைய கூற்று சரியானது என்று தனது உள்ளத்தில் புரிய மாட்டார்.

(பராஹீனே அஹ்மதிய்யா, பாகம் 3, ரூஹானீ கஸாயீன் தொகுதி 1, பக்கம் 301, அடிக்குறிப்பு எண்: 2)

அடுத்து அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆனில் கூறப்பட்டது போன்று இறையிருப்பு மற்றும் மறுமை தொடர்பாக தவ்ராத்தில விவரங்கள் கூறப்பட்டிருந்தால் கிறிஸ்தவர்கள் மற்றும் யூதர்களுக்கு இடையில் இவ்வளவு சண்டைகள் ஏன்? உண்மைகள் என்னவென்றால், எந்த அளவிற்கு ஸூரா இக்லாஸின் ஒரு வரியில் ஏகத்துவத்தின் கருத்தால் நிறைந்திருக்கின்றது என்றால் அது முழு தவ்ராத்திலும் மாறாக முழு பைபிளிலும் நமக்கு தென்படுவதில்லை. மேலும், அவ்வாறு இருக்குமேயானால் யாராவது ஒரு கிறிஸ்தவர் நமக்கு முன்னால் அதை காண்பிக்கட்டும். (பராஹீனே அஹ்மதிய்யா, பாகம் 3, ரூஹானீ கஸாயீன் தொகுதி 1, பக்கம் 301, அடிக்குறிப்பு எண்: 2)

திருக்குர்ஆனில் இருந்து ஏகத்துவத்தின் நுட்பமான ஞானம் கதிர் வீசும் சூரியனைப் போன்று வெளிப்படுகின்றது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மற்றுமொரு சிறந்த சவால் இருக்கின்றது. அது அன்னார் (அலை) சனாதன மார்க்கம் குறிப்பாக ஆரியர்கள் முன்பு வைத்த சவால் ஆகும். அதை நான் முன் வைக்கின்றேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஆரம்பம் முதல் இறுதி வரை படைப்பினங்களை வணங்குவது பற்றி மட்டும் பேசும் வேதம் ஒரு வகை வியப்பில் ஆழ்த்துகிறது. பண்டிதர் தியானந்த் விளக்கம் தர மிகவும் முயற்சி செய்துள்ளார். ஆனால் வளைந்ததை நேராக உள்ளது என்று கூறுவதற்கு எவ்வளவோ முயற்சித்தார். ஆனால் இறுதியில் ஒன்றும் நடக்கவில்லை. வேதத்தின் போதனைகளில் படைப்பினத்தை வணங்க ஓரிடத்தில் சொல்லப்பட்டால் மறைத்து விடலாம். ஆனால், அதுவோ இந்த சிந்தனையால் நிறைந்து இருக்கின்றது. முழு உலகையும் சுற்றிப் பாருங்கள். அனைத்து சமுதாயத்துடனும் கேட்டுப் பாருங்கள். அதாவது வேதத்தை படித்து அதில் ஏகத்துவத்தின் போதனை இருக்கின்றது என்று கூறக் கூடிய எந்த சமுதாயத்தையும் பார்க்க முடியாது. நான் உண்மையாகவே கூறுகிறேன். நான் நிறைய வார்த்தைகளால் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. திருக்குர்ஆனின் பத்து பக்கத்தில் இருந்து ஏகத்துவத்தின் நுட்பமான ஞானம் ஒளி வீசும் சூரியனைப் போன்று வெளிப்படுகின்றது என்றால் அதை வேதத்தின் ஆயிரம் பக்கங்களிலிருந்துதாவது எவராவது காண்பித்தால் பின்னர் நாம் ஒப்புக் கொள்வோம். வேதத்தில் ஏகத்துவம் பேசப்பட்டுள்ளது. மேலும் எவராவது விரும்பினால் சக்திக்கு ஏற்ப நிபந்தனையாக நம்மிடம் நிர்ணயம் செய்து கொள்ளலாம். நாம் சத்தியமாக கூறுகின்றோம். மேலும், நான் ஏக இறைவனின் மீது சத்தியம் செய்து கூறுகின்றேன். விதிக்கப்பட்ட நிபந்தனையை நிறைவேற்ற எவ்வாறான வழியாக இருந்தாலும் நான் அதற்கு தயாராக உள்ளேன். (ஸுர்ம் சஷ்ம ஆர்யா, ரூஹானீ கஸாயீன், தொகுதி 2, பக்கம் 215)

திருக்குர்ஆனின் ஏகத்துவம் ஐரோப்பாவில் சலசலப்பை ஏற்படுத்தியது. பிரபலமான ஆங்கிலேயர்கள் திருக்குர்ஆனின் மகத்துவம் மற்றும் அது கூறும் ஏகத்துவம் ஆகியவற்றை குறித்து தங்களுடைய சான்றை தந்துள்ளனர். ஏகத்துவத்தின் கருத்தின் அடிப்படையில் ஃபுர்கான் எனும் திருக்குர்ஆனிற்கு நிகரான வேதம் இல்லை.

இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி மற்றும் பிரான்ஸில் வேதத்தின் மொழிபெயர்ப்பு ஆயிரம் அல்ல. லட்சக்கணக்கான மக்களின் பார்வையில் வந்துள்ளது. ஆனால், எவருக்கும் வேதத்தில் ஏகத்துவம் உள்ளது என்ற செய்தி கிடைக்கவில்லை. அதே ஆங்கிலேயர்கள் திருக்குர்ஆனை மொழி பெயர்ப்பு செய்ததும், ஐரோப்பிய நாடுகளில் திருக்குர்ஆனின் ஏகத்துவம் அங்கு சலசலப்பை ஏற்படுத்தியது. எந்த அளவிற்கு என்றால் லாயல் ஸாஹிப் மற்றும் ஜான் டியூன் போர்ட் போன்ற பிரபலமான ஆங்கிலேயர்களின் இஸ்லாத்திற்கு ஆதவான நூல்கள் அச்சிடப்பட்டு இந்தியாவிலும் வெளிவந்து விட்டது அதில் திருக்குர்ஆனின் மகத்துவம் மற்றும் அதன் தூய ஏகத்துவம் குறித்து எப்படிப்பட்ட சாட்சியங்களை அவர்கள் பகர்ந்துள்ளனர் என்றால் பல்வேறு காழ்ப்புணர்ச்சிகள் அவர்களுக்கு இருந்தபோதிலும் அவர்களுக்கு இவ்வாறு கூற நேரிட்டுள்ளது: அதாவது திருக்குர்ஆன் ஏகத்துவ கருத்தின் அடிப்படையிலும், குறைகளிலிருந்து தூய்மையானதுமாக இருப்பதன் அடிப்படையிலும் அது நிகரற்ற வேதம் ஆகும். அதன் கொள்கைகள் அறிவுக்கு ஏற்றவாறு உள்ளது. மேலும், ஒரு ஞானமிக்கவனின் மார்க்கமாக இருக்கலாம் என்று கூறியுள்ளனர்.

இதேபோன்று ஒரு பிரபலமான ஆங்கிலேயே அறிஞர் பின்லட் என்பவர் தற்போது இஸ்லாம் தொடர்பாக ஒரு நூலை எழுதியுள்ளார். இஸ்லாத்தின் தூதர் தான் மறுபடியும் ஏகத்துவத்தை உலகில் நிலை நிறுத்தினார்கள் என்றும், அவர்கள் இறைவனின் ஏகத்துவத்தை சிறப்பாக பரப்பினார்கள். அதனால் ஏகத்துவத்தின் நறுமணம் அரபு நாட்டின் பாலைவனத்தில் இன்றும் வீசுகின்றது என்றும் அவர் அதில் ஒப்புக் கொள்கின்றார்.

(ஷஹனாயே ஹக், ரூஹானி கஸாயீன், தொகுதி 2, பக்கம் 403)

இறைவனின் இருப்பு மற்றும் ஏகத்துவம் ஆகியவற்றின் ஆதாரம் திருக்குர்ஆனில் கூறப்பட்டவை வேறு புத்தகத்திலும் இல்லை.

திருக்குர்ஆன் எந்த அளவிற்கு தீய கொள்கைகள் மற்றும் தீய செயல்களின் நிலைகளை கூறியுள்ளதோ அல்லது திருக்குர்ஆனில் சொல்லப்பட்ட கொள்கைகள் வேதத்தின் அடிப்படையில் அது தீய கொள்கைகள் ஆகும் என்றும் அவ்வாறே உலகத்தின் பல்வேறு பகுதிகளில் காணப்படும் தீய செயல்கள் தொடர்பாக திருக்குர்ஆன் விரிவாக பேசியுள்ளதை ஆரியர்கள் வேதத்தில் இருந்து நமக்கு காண்பித்தார்கள் என்றால் அதை மற்ற பிரிவினர்கள் திருக்குர்ஆனை படித்ததன் பிறகு இந்த அனைத்து விஷயங்களும் இதில் கூறப்பட்டுள்ளவையாகும். வேதம் தொடர்பாகவும் இதே சான்று பகர்ந்தால் மேலும், திருக்குர்ஆனில் எழுதப்பட்டுள்ள இறைவனின் இருப்பு மற்றும் ஏகத்துவத்தின் ஆதாரங்களை எதிர் தரப்பினர் ஒப்புக் கொண்ட அனைத்தையும் ஆரியர்கள் வேதத்தில் இருந்து காண்பித்தார்கள் என்றால் நாம் ஆயிரம் ரூபாய் ரொக்கம் அவர்களுக்கு தர தயாராக உள்ளோம்.

(சஷ்மயே மஃரிஃபத் ரூஹானி கஸாயீன், தொகுதி 22, பக்கம் 143)

அல்லாஹ் நம் அனைவரையும் மறைவானவற்றிலும் மறைவான இணை வைத்தலில் இருந்தும் கூட பாதுகாத்தவாறு உண்மையான ஏகத்துவத்தை பின்பற்றும் நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக. ஆமீன்.

தமிழாக்கம்
மவ்லவி ஷஹாபுதீன்

* * * * *

*திருக்குர்ஆனிலிருந்து...*

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

*திருக்குர்ஆனிலிருந்து...*

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

4-ம் பக்கத்தின் தொடர்ச்சி

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மேற்கோள்.........**

கூறவில்லை. மாறாக, எவரும் உங்களுக்கு தனிப்பட்ட நிலையில் பகைவராக இருக்கலாகாது. உங்கள் அனுதாபம் ஒவ்வொருவர் மீதும் பொதுவானதாக இருக்க வேண்டும். ஆனால், எவர் உமது இறைவனுக்கும், திருத்தூதருக்கும், இறைவனது வேதத்திற்கும் பகைவராக காணப்படுவாரோ அவரே உங்களுக்கும் பகைவராக இருக்கின்றார். எனவே நீங்கள் அப்படிப்பட்டவர்களுக்காக அறிவுரை செய்வதிலிருந்தும், துஆ செய்வதிலிருந்தும் அவர்களை வெறுத்தொதுக்கி விட வேண்டாம். நீங்கள் அவர்களின் செயல்கள் மீதே பகைமை பாராட்ட வேண்டுமேயன்றி அவர்கள் மீது அல்ல. மேலும், அவர்கள் சீர்திருத்தம் அடைவதற்காக முயற்சி செய்ய வேண்டும். இதைப் பற்றி இறைவன் இவ்வாறு கூறுகின்றான்.

اِنَّ اللّٰهَ يَاۡمُرُ بِالۡعَدۡلِ
وَالۡاِحۡسَانِ وَاِيۡتَآئِ ذِى الۡقُرۡبٰى
اِيۡتَاءِ ذِى الۡقُرۡبٰى

இறைவன் உங்களிடம் என்ன நாடுகின்றான்? நீங்கள் எல்லா மனிதர்களுடனும் நீதியுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதேயாகும். மேலும், இதை விட மேலாக எவர்கள் உங்களுக்கு நன்மை செய்யவில்லையோ அவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்ய வேண்டும். எவ்வாறு தாய்மார்கள் தங்களின் குழந்தைகளுடன் நடந்து கொள்கிறாரோ அவ்வாறு நீங்கள் இறைவனுடைய படைப்பினங்களோடு அவர்களின் உண்மையான உறவினர்களைப் போன்று அனுதாபத்துடன் நடந்து கொள்ளுங்கள்.

ஏனெனில், உதவி செய்வதில் தன்னை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும் என்ற உணர்ச்சியும் அந்தரங்கமாக உள்ளது. மேலும் உதவி புரிபவர், தான் புரியும் உதவியைச் சிலநேரம் வெளிப்படுத்தியும் விடுகின்றார். ஆனால் எவர் தாயைப் போன்று இயல்பான உணர்ச்சியுடன் நன்மை புரிவாரோ அவர் ஒருபோதும் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள மாட்டார். எனவே தாயைப் போன்று இயல்பான உணர்ச்சியே நன்மைகளின் மிகவும் மேலான நிலையாகும்.

இந்த வசனம் படைப்பினங்களுடன் மட்டும் சம்பந்தப்பட்டதன்று. மாறாக, இறைவனோடும் சம்பந்தப்பட்டதாகும். இறைவனுடன் நீதியுடன் நடந்து கொள்ளுதல் என்றால் அவனது நன்கொடைகளை நினைவுகூர்ந்து அவனுக்குக் கீழ்படிதலாகும். இறைவனோடு இஹ்ஸான் (நன்மை) செய்தல் என்றால் அவனைப் பார்த்துக் கொண்டிருப்பது போன்று அவனது உள்ளமையில் நிச்சய உறுதி கொள்ள வேண்டும் என்பதாகும். இறைவனுடன்

اِيۡتَاءِ ذِى الۡقُرۡبٰى

என்ற உறவு என்னவென்றால், அவனை வணங்குவது சொர்க்கத்தின் மீதுள்ள ஆசையாகவோ நரகத்தின் மீதான அச்சத்தினாலோ இருக்கக் கூடாது. சொர்க்கமும், நரகமும் இல்லை என்று வைத்துக் கொண்டாலும் அப்போதும் அவன் மீது கொண்டுள்ள நேச உணர்ச்சியாலும் அவனுக்குக் கீழ்ப்படிவதிலும் எவ்வித வேறுபாடும் காணப்படக் கூடாது என்பதாகும்.

மேலும், எவர்கள் உங்கள் மீது சாபமிடுவார்களோ அவர்களுக்காக அருளை விரும்புங்கள் என்று புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருக்கின்றது. ஆனால், நீங்கள் சுயமாக எதையும் செய்யாதீர்கள்; இறைவனுடைய தோற்றங்களுக்கெல்லாம் இருப்பிடமாகிய உங்களுடைய உள்ளத்திடம் அத்தகைய மனிதனோடு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என தீர்ப்பு கேளுங்கள் என்று திருக்குர்ஆன் கூறுகின்றது. எனவே சாபமிடுபவன் கருணை காட்டுவதற்கு தகுதியுள்ளவன் என்றும், வானத்தில் அவன் மீது எவ்வித சாபமும் இல்லை என்றும் உங்களது உள்ளத்தில் போட்டால் நீங்கள் இறைவனுக்கு எதிரானவர்களாய் ஆகாமலிருக்க அவர் மீது நீங்களும் சாபம் இடாதீர்கள். இதற்கு மாறாக உங்களது மனசாட்சியானது அவனை ஒரு நிரபராதியாக ஏற்றுக் கொள்ளாவிட்டாலோ மேலும் வானத்தில் அம்மனிதன் மீது சாபம் உண்டு என உங்கள் உள்ளத்தில் போடப்பட்டாலோ நீங்கள் அம்மனிதனுக்காக அருளை நாடாதீர்கள்.

ஏனெனில் ஷைத்தானுக்காக எந்த நபியும் அருளை நாடவில்லை. மேலும், எந்த நபியும் சாபம் இடுவதிலிருந்தும் ஷைத்தானை விட்டு வைக்கவில்லை. ஆயினும் எவர் மீதும் நீங்கள் சாபமிடுவதில் அவசரப்படாதீர்கள். ஏனெனில், பெரும்பாலான யூகங்கள் பொய்யானவையாகும். பெரும்பாலான சாபங்கள் தங்கள் மீதே விழுகின்றன. எனவே மிக கவனமாக செயல்படுங்கள். எந்தப் பணியாக இருந்தாலும் நன்றாக ஆராய்ந்த பின்னர் செய்யத் துணியுங்கள். ஏனெனில், நீங்கள் குருடர்களாயிருப்பதால் நீதிமான்களை அநீதிக்காரர்களாகவும், உண்மையானவர்களை பொய்யர்களாகவும் எண்ணி விடலாகாது. இவ்வாறு நீங்கள் உங்கள் இறைவனை வெறுப்படையச் செய்வீர்கள். உங்களது நல்ல காரியங்கள், செயல்கள் வீணாகிப் போய் விடலாம்.

* * * * *

**National Watch Company**

Sales & Service

B. Mohamed Adil

93632 06679
99433 38000




196, Trichy Road, Sulur - 641 402

Somanur, Anuparpalayam, Karumathampatti

# திருக்குர்ஆனின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை

(முரப்பி லயீக் அஹ்மத் நாயிக் சாஹிப்)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையை எந்த அம்சத்தின் அடிப்படையில் பார்த்தாலும் அது எல்லையற்ற அழகால் நிறைந்திருக்கின்றது. ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் மகத்துவ மிக்க அந்தஸ்து தொடர்பாக

لَقَدْ كَانَ لَكُمْ فِيْ رَسُوْلِ اللّٰهِ اُسْوَةٌ حَسَنَةٌ

என்று அல்லாஹ் அறிவித்துள்ளான்.

உங்களுக்கு அல்லாஹ்வின் தூதரிடத்தில் மேலான முன்மாதிரி உள்ளது. (அல் அஹ்ஸாப்: 22)

அன்னாரின் அருளுக்குரிய வாழ்க்கை முழுமையான மனித அழகுகள் மற்றும் சிறப்புகளின் தொகுப்பாகவும், மேலும் எல்லா வகையிலும் நிகரற்றதாகவும், தனித்துவம் வாய்ந்ததாகவும் இருக்கின்றது. அன்னாரின் வாழ்க்கை தொடர்பாக. وَاِنَّكَ لَعَلٰى خُلُقٍ عَظِيْمٍ

என்ற திருக்குர்ஆனின் மகத்துவ மிக்க சாட்சியம் இருக்கின்றது. அதாவது, அன்னார் (ஸல்) அவர்கள் மகத்துவ மிக்க நல்லொழுக்கத்தில் நிலை பெற்றிருந்தார்கள். (சூரா அல்கலம்: 05)

அன்னாருடைய உயர் நல்லொழுக்கம் மற்றும் முழுமையான வாழ்க்கையின் படத்தொகுப்பிற்கு இந்த விண்ணின் சாட்சியத்தை விட சிறந்த சாட்சியம் வேறு எந்த மனிதனுக்கும் சாத்தியமில்லை. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் வாழ்க்கை துணையவியார் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் சாட்சியமும் இதுவே ஆகும். அல்லாஹ்வின் திருப்தியின் கீழ் அன்னாருடைய அனைத்து பணிகளும் நடைபெற்று வந்தன. மேலும் எந்த பணியினால் இறைவன் அதிருப்தி அடைவானோ அதிலிருந்து அன்னார் தொலைவில் விலகி இருந்து வந்தார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நல்லொழுக்கம் திருக்குர்ஆனாக இருந்தது என்பது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் கண்கண்ட சாட்சியமாகும். இதன் பொருள் இவ்வாறாகும்: அதாவது, ஒன்று, திருக்குர்ஆனில் எடுத்துரைக்கப்பட்டுள்ள அனைத்து ஒழுக்கங்கள் மற்றும் நம்பிக்கையாளர்களின் அனைத்து பண்புகளின் சித்திரமுமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை இருந்தது. எனவே திருக்குர்ஆனுடைய நல்லொழுக்கப் போதனைகளின்படி அமல் செய்து அன்னார் (ஸல்) எப்படிப்பட்ட சிறந்த முன்மாதிரியை நிலைநாட்டினார்கள் என்றால் அதனை திருக்குர்ஆன் அழகிய முன்மாதிரியாக குறிப்பிட்டுள்ளது.

இரண்டு, திருக்குர்ஆன் என்ன கட்டளை வழங்கியுள்ளதோ அவை அனைத்தையும் அன்னார் (ஸல்) நிறைவேற்றிக் காட்டினார்கள். ஒருவகையில் அன்னார் (ஸல்) நடமாடும் திருக்குர்ஆனாக திகழ்ந்தார்கள்.

ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் வாழ்வின் பல்வேறு அம்சங்கள் திருக்குர்ஆனின் பல்வேறு இடங்களில் மிகவும் அழகிய வடிவில் நற்குறிப்பு கிடைக்கின்றது. அவற்றில் அன்னாருடைய அருளுக்குரிய நற்பண்புகள், தூய பழக்கவழக்கங்கள் மற்றும் நடைமுறைகள், மேலும் சிறந்த சமூக வாழ்க்கை போன்ற எண்ணற்ற விஷயங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அடியார்களுக்குரிய உரிமைகளை செலுத்துதல் என்ற முக்கியமான கடமைகளாக இருக்கட்டும். அன்னாருடைய அன்றாட செயல்பாடுகள் அல்லது நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட விஷயங்களாக இருக்கட்டும்; இறை வணக்கங்களாக இருக்கட்டும் அல்லது தப்லீஃக் கடமைகளை நிறைவேற்றுகின்ற வழிமுறைகளாக இருக்கட்டும்; அல்லது அன்னாருடைய தூய நற்பண்புகளாக இருக்கட்டும். சுருக்கமாக, அன்னாரின் ஒளிமயமான வாழ்வின் அம்சங்களை சுருக்கமாகவும் அதேநேரம் விளக்கமாகவும் திருக்குர்ஆன் எடுத்துரைத்து விட்டது. மேலும், முஹம்மதிய்ய சமுதாயத்திற்கு ஒரு முழுமையான முன்மாதிரியை வழங்கிவிட்டார்கள்.

மனிதனின் வாழ்க்கை இரண்டு பகுதிகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஒன்று, அல்லாஹ்விற்குரிய உரிமைகளை வழங்குதல் மற்றொன்று அடியார்களுக்குரிய உரிமைகளை வழங்குதல் ஆகும். இந்த இரண்டு கடமைகளும் எந்த அளவிற்கு அழகுடனும், சிறப்புடனும் நிறைவேற்றப்படுமோ அதற்கேற்பவே மனிதனின் வாழ்க்கையும் முழுமையானதாகவும், வெற்றிக்கரமானதாகவும் நிரூபணமாகும். வாருங்கள் ! திருக்குர்ஆனின் அடிப்படையில் ஸய்யிதுனா காத்தமுல் அன்பியா ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கை சீர்தூக்கிப் பார்ப்போம்!

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

لَقَدْ جَآءَكُمْ رَسُوْلٌ مِّنْ اَنْفُسِكُمْ عَزِيْزٌ عَلَيْهِ مَا عَنِتُّمْ
حَرِيْصٌ عَلَيْكُمْ بِالْمُؤْمِنِيْنَ رَءُوْفٌ رَّحِيْمٌ

(அத் தவ்பா: 128)

பொருள்: (நம்பிக்கை கொண்டவர்களே) உங்களிடம் உங்களிலிருந்தே ஒருவர் தூதராக வந்துள்ளார். உங்களுக்கேற்படும் துன்பம் அவருக்கு மிகுந்த வேதனையைக் கொடுக்கின்றது. அவர் உங்கள் நலனில் மிகுந்த ஆர்வங்கொண்டவராகவும், நம்பிக்கை கொண்டவர்களை நேசிப்பவராகவும், அவர்களுக்கு மிக்க கருணை காட்டுபவராயுமிருக்கின்றார். (அத் தவ்பா: 128)

நாம் அறிந்ததுபோன்று அல்லாஹ் தனது இருப்பை தனது பண்புகளின் மூலம் நம் மீது வெளிப்படுத்துகின்றான். மேலும், எனது பண்புகளை மேற்கொள்ளுங்கள்; அப்போதுதான் நீங்கள் என்னுடைய உண்மையான அடியார்கள் என்றழைக்கப்படுவீர்கள் என்று அல்லாஹ் நம்பிக்கையாளர்களிடம் கூறுகின்றான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தவிர்த்து வேறு எந்த நபரிடமும் அல்லாஹ்வின் இந்த வழிகாட்டலுக்கான உயர்ந்த முன்மாதிரி காணப்பட முடியாது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஏனெனில், அல்லாஹ்வின் எத்தகைய நேசராக அன்னார் (ஸல்) இருந்தார்கள் என்றால் அன்னாரின் ஒளியிலிருந்து ஓர் உலகமே பயனடைந்தது; பயனடைந்து வருகின்றது; இன்ஷா அல்லாஹ் இந்த அருள் தொடர்ந்து கொண்டே இருக்கும். மக்கள் தம்மை படைத்தவனை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும் என்பதற்காக இந்த பயன் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இருப்பு மற்றும் அருட்களைக் குறித்த சித்திரத்தை வரைந்தவாறு கூறுகின்றார்கள்:

அந்த மனிதர் தமது இருப்பாலும், தமது பண்புகளாலும், தமது நடத்தைகளாலும், தமது செயல்களாலும், தமது ஆன்மிக மற்றும் பௌதீக ஆற்றல்கள் எனும் வலுவான நதியாலும் நிறைவான முழுமையான முன்மாதிரியை செயல் ரீதியாகவும், உண்மையின் மூலமாகவும், உறுதிப்பாட்டாலும் வெளிப்படுத்தினார். மேலும் அவர் முழுமையான மனிதர் என்றழைக்கப்பட்டார்.........

அந்த மனிதர் எல்லாரையும் விட முழுமையானவராகவும், முழுமையான மனிதராகவும்

இருந்தார். மேலும் முழுமையான நபியாக இருந்தார். மேலும், அவர் முழுமையான அருட்களுடன் தோன்றினார். அதன் மூலம் ஆன்மிகத் தோற்றம் மற்றும் ஒன்றுகூட்டலின் காரணமாக உலகின் முதல் கியாமத் வெளிப்பட்டது. மேலும், அவரது வருகையின் மூலமாக மரணித்திருந்த ஓர் உலகமே உயிர்த்தெழுந்தது. அந்த கியாமத் என்பது என்னவாக இருந்தது? அது மரணித்தவர்களை உயிர்த்தெழச் செய்யக் கூடியதாக இருந்தது. அந்த அருளுக்குரிய நபி ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா, இமாமுல் அஸ்ஃபியா, கத்தமுல் முர்ஸலீன் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள். அன்பிற்குரிய இறைவா! உலகம் தோன்றி நாள் முதல் இதுவரை நீ எவர் மீது செய்திராத அந்த அருளையும், கருணையையும் இந்த அன்பிற்குரிய நபியின் மீது பொழிவாயாக!

اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَيْهِ وَاٰلِهٖ وَاَصْحَابِهٖ اَجْمَعِيْنَ

(இத்திமாமே ஹுஜ்ஜத், ரூஹானீ கஸாயீன்,தொகுதி 8, பக்கம் 308)

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நல்லவர்கள் மீதும், நல்லடியார்கள் மீதும் நேசம் கொள்ளுங்கள்; மேலும், தீயவர்கள் மற்றும் நிராகரிப்பாளர்கள் மீது கருணை காட்டுங்கள் என்று திருக்குர்ஆன் போதனை நமக்கு கற்பிக்கின்றது.

عَزِيْزٌ عَلَيْهِ مَا عَنِتُّمْ حَرِيْصٌ عَلَيْكُمْ

என்று அல்லாஹ் கூறுகின்றான். நம்பிக்கையாளர்களே! இந்த நபி எந்த அளவிற்கு பரிவு மிக்கவர் என்றால் உங்களின் துன்பங்களை இவரால் காண முடியாது. மேலும், நீங்கள் இந்த துன்பங்களிலிருந்து இரட்சிப்பு பெற்று விட வேண்டும் என்று மிகவும் அதிகமாக இவர் விருப்பம் கொள்கின்றார். (நூருல்குர்ஆன் எண்:2, ரூஹானீ கஸாயீன், தொகுதி 9, பக்கம் 433)

அல்லாஹ்வின் அடியார்களுக்குரிய உரிமைகளை வழங்குதல்:

அன்னாருடைய ஆன்மிக வாழ்வின் மீது பார்வை செலுத்தினால் பின்னர் இந்த அம்சத்தின் அடிப்படையில் அன்னாருடைய வாழ்க்கை தன்னிகரற்றதாக இருக்கின்றது என்பது தெரிய வரும். குறிப்பாக, அல்லாஹ்விற்குரிய உரிமைகளை நிறைவேற்றுதலின் கடமையைக் குறிப்பிட்டால் பின்னர் திருக்குர்ஆன் இந்த அம்சத்தின் அடிப்படையில் அன்னாருடைய அருளுக்குரிய வாழ்க்கையை அன்னாருடைய வார்த்தையின் மூலமாகவே மிகவும் அருமையான சித்திரத்தை வரைந்துள்ளது.

திருக்குர்ஆன் கூறுகின்றது:

اِنَّ صَلَاتِيْ وَنُسُكِيْ وَمَحْيَايَ وَمَمَاتِيْ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ

நீர் கூறுவீராக! எனது தொழுகையும், எனது தியாகங்களும், எனது வாழ்வும், எனது மரணமும் அனைத்து உலகங்களுக்கும் இறைவனாகிய அல்லாஹ்விற்கே உரியதாகும். (அல்அன்ஆம்: 163)

மற்றோர் இடத்தில் திருக்குர்ஆனில் வருகின்றது:

اِنَّ رَبَّكَ يَعْلَمُ اَنَّكَ تَقُوْمُ اَدْنٰى مِنْ
ثُلُثَيِ الَّيْلِ وَنِصْفَهٗ وَثُلُثَهٗ

முஹம்மதே! நீர் இரவில் சற்றேறக் குறைய, மூன்றில் இரண்டு பகுதி நேரமோ. (சிலவேளைகளில்) அதில் ஒரு பாதி நேரமோ, மூன்றில் ஒரு பகுதி நேரமோ (தொழுது கொண்டு) நிற்பதை நிச்சயமாக உமது இறைவன் அறிகிறான். (73:21)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறைத் தூதர் (ஸல்) அவர்களின் முழு வாழ்க்கையும் இறை நேசத்தால் நிறைந்திருப்பதை காண முடிகின்றது. மாபெரும் ஜமாஅத் பொறுப்புகளுக்கு மத்தியிலும் பகலும், இரவும் அன்னார் (ஸல்) இறை வணக்கத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். பாதி இரவு கழிந்த உடன் அன்னார் (ஸல்) இறைவனை வணங்குவதற்காக எழுந்து நின்று விடுவார்கள். மேலும், காலை வரை இறை வணக்கம் செய்து கொண்டிருப்பார்கள். எந்த அளவுக்கு என்றால், சிலமுறை அன்னாரின் பாதங்கள் வீங்கிப் போய்விடும். மேலும், பார்ப்பவர்களுக்கு அன்னாரின் நிலையின் மீது கருணை ஏற்பட்டு வந்தது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒருமுறை இதேபோன்ற ஒரு சந்தர்ப்பத்தில் நான் கூறினேன்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்களோ இறைவனுக்கு ஏற்கனவே நெருக்கமானவராக இருக்கின்றீர்கள். அவ்வாறிருக்க தாங்கள் ஏன் தங்களது ஆன்மாவை துன்பத்தில் ஆழ்த்திக் கொள்கின்றீர்கள்?

அன்னார் (ஸல்) கூறினார்கள்: ஆயிஷாவே!

اَفَلَا اَكُوْنُ عَبْدًا شَكُوْرًا

நான் இறைவனுக்கு நெருக்கமானவன் என்ற இந்த விஷயம் உண்மையென்றால் மேலும், இறைவன் தனது அருளால் எனக்கு தனது நெருக்கத்தை வழங்கியிருக்கும்போது பின்னர் எந்த அளவிற்கு என்னால் முடியுமோ அந்த அளவிற்கு நான் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துவது எனது கடமை இல்லையா? ஏனெனில் நன்றி என்பது நன்மையின் விளைவாலேயே நிகழ்கின்றது. (தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம், தொகுதி 20, பக்கம் 382)

**இறை நேசம்**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வின் ஒவ்வொரு கணமும் இறை நேசத்தால் நிறைந்திருப்பதை காண முடிகின்றது. அன்னாரின் இந்த நேசத்தை அல்லாஹ் இவ்வாறு ஒப்புக் கொண்டான். அதாவது, எதிர்காலத்தில் அல்லாஹ்வின் நேசத்தை பெறுவதற்கான வழிமுறையாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை பின்பற்றுவதை ஆக்கிவிட்டான்.

அல்லாஹ் கூறுகின்றான்:

قُلْ اِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللّٰهُ

நீர் கூறுவீராக! நீங்கள் அல்லாஹ்வின் மீது நேசம் கொள்கின்றீர்கள் என்றால் பின்னர் என்னைப் பின்பற்றுங்கள். அந்நிலையில் அவனும் உங்களை நேசிப்பான். (ஆலிஇம்ரான்: 33)

இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு கீழ்படிந்து நடப்பவர்களுக்கு திருக்குர்ஆனில் நபிமார்கள், ஸித்தீக்குகள் மற்றும் நல்லடியார்களுக்கு சமமான அந்தஸ்து கிடைப்பதற்கான நற்செய்தி வழங்கப்பட்டுள்ளது. மேலும், சில நபிமொழிகளில் பனீ இஸ்ராயீலின் நபிமார்களைப் போன்றவர்கள் என்றும், முஜத்தித், மஸீஹ் மற்றும் மஹ்தி என்றும் பெயர் வழங்கப்பட்டுள்ளது. எனவே இறைத் தூதர் (ஸல்) அவர்களின் முழுமையான கட்டுப்படுதலுக்கான வழிகளை மேற்கொண்டு உம்மத்தீ நபி என்ற பெயரை பெறக் கூடிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முழுமையான தொண்டர் மற்றும் உண்மை பேரன்பர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இன்று இறை நேசத்திற்கான அந்த விளக்கை மீண்டும் ஒளியூட்டியுள்ளார்கள். மேலும், இறைவனுடனான அந்த நேசத்தை இவ்வாறு பொதுமையாக்க விரும்பினார்கள்.

அன்னார் (ஸல்) கூறினார்கள்:

உயிரை துறப்பதால் இந்த செல்வம் கிடைக்கும் என்றாலும் கூட அது பெறக் தக்கத்தாகும். முழு இருப்பையும் அர்ப்பணிப்பதால் அந்த மாணிக்கம் கிடைக்கும் என்றால் கூட அது வாங்குவதற்கு உரியதாகும். (கிஷ்தி, நூஹ்: ரூஹானீ கஸாயீன், தொகுதி 19, பக்கம் 21)

**அல்லாஹ்வின் பால் மக்களை அழைத்தல் என்ற அம்சம்**

நபிமார்களின் முக்கியமான பொறுப்புகளில் ஒன்று அல்லாஹ்வின்

பால் அழைத்தல் மற்றும் ஏகத்துவத்தை நிலைநாட்டுதல் என்ற பொறுப்பு ஆகும். உலகில் எவ்வளவு நபிமார்கள் வந்துள்ளனரோ அவர்கள் அனைவரும் மனிதர்களை ஏக இறைவனின் பக்கமே அழைத்துள்ளனர். மேலும், அவனை வணங்குங்கள்; மேலும் அவனது அனைத்துப் பண்புகளின் மீதும் ஈமான் கொள்ளுங்கள் என்று கூறியுள்ளனர்.

கண்ணியத்திற்குரிய வாசகர்களே! நமது எஜமானரும் தலைவருமான ஸய்யிதுனா ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எந்த அழகிய வழிமுறையில் அல்லாஹ்வின் பால் அழைக்கும் பணியை மேற்கொண்டார்களோ அது தன்னிகரற்றதாகும். அன்னாரின் வருகைக்கு முன்னால் உலகில் நிலவிய சூழல்கள் என்பது திருக்குர்ஆன் வரைந்துள்ள சித்திரத்தின் படி

ظَهَرَ الْفَسَادُ فِي الْبَرِّ وَالْبَحْرِ

என்பதாக இருந்தன. எங்கு மக்களிடத்தில் எண்ணற்ற தீமைகள் காணப்பட்டனவோ அங்கு இருந்த மாபெரும் சீர்கேடு என்னவாக இருந்தது என்றால், அவர்கள் நூற்றுக்கணக்கான பொய் தெய்வங்களை வணங்கி வந்தனர். அதுபோன்ற நிலைமைகளை கண்டு திருக்குர்ஆனிற்கேற்ப

وَوَجَدَكَ ضَالًّا فَهَدَىٰ

என்பது அன்னாரின் நிலையாக இருந்தது. தமது சமுதாயத்தின் மீதான நேசத்தால் நிறைந்திருந்த அந்த வேதனை மிக்க உள்ளம் துடித்தது. இறைவன் அவரை சமுதாயத்தின் சீர்திருத்தவாதியாக ஆக்கினான்.

கண்ணிய மிக்க வாசகர்களே! ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுடைய உண்மையின் பால் மக்களை அழைக்கும் பணியில் அன்னாருக்கு ஏற்பட்ட துன்பங்கள் மற்றும் வேதனைகளின் சம்பவங்கள் எவரிடமிருந்தும் மறைவாக இல்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனின் வழிகாட்டுதலுக்கேற்ப தமது தப்லீஃக் நடவடிக்கைகளை வேகப்படுத்திக் கொண்டு சென்றபோது எதிர்ப்பின் நெருப்பு மேலும் கிளர்ந்தெழுந்தது. அதன் விளைவாக அன்னார் (ஸல்) மற்றும் அன்னாருடைய முழு குடும்பமும் மூன்று ஆண்டுகள் வரை ஷுஅப் அபீ தாலிப் பள்ளத்தாக்கில் முற்றுகையிடப்பட்டனர். ஒரு நீண்ட காலத்திற்கு பிறகு பத்தாம் நபித்துவ ஆண்டில் இந்த முற்றுகைக்கான வேதனை மிக்க காலம் முடிவடைந்த போது அன்னார் (ஸல்) மக்காவிற்கு வெளியே தப்லீஃக் நோக்கத்துடன் தாயிஃப் நகரத்திற்கு பயணம் மேற்கொண்டார்கள். தாயிஃப் நகரத்தில் இறைத் தூதர் (ஸல்) அவர்களுடன் எதிரிகள் மேற்கொண்ட மோசமான நடைமுறையை எந்த முஸ்லிம் தான் அறியமாட்டார்! எதிரிகளின் இந்த நடத்தையும் கூட அன்னாரை உயர்தரமான உறுதிப்பாட்டிலிருந்து விலக்க முடியவில்லை.

சுருக்கமாக, எப்படியாவது இஸ்லாத்திற்கு அல்லது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தி விட வேண்டும் என்று மக்கத்து காஃபிர்கள் முழு மூச்சாக முயன்று பார்த்து விட்டனர். ஆனால், இறை நியதியானது அவர்களின் எல்லாத் திட்டங்களையும் தோல்வியுறச் செய்தது. மேலும், இஸ்லாத்தின் எந்த நீரூற்றின் வேகத்தை எதிரிகள் தடுப்பதற்காக தங்களால் இயன்ற முயற்சிகளை செய்து கொண்டிருந்தனரோ அது யஸ்ரப் நகரத்தின் பக்கம் பாய்ந்தோடியது. மேலும், இவ்வாறு இஸ்லாத்தின் கம்பீரத்திற்கான புதிய அத்தியாயம் எழுதப்பட்டது. மகத்துவ மிக்க பிரச்சாரகர் 13-ம் ஆண்டில் மக்காவில் முழு முயற்சியுடன் உண்மையான ஏகத்துவத்திற்கான அறிவிப்பை செய்தார்கள். மேலும், யஸ்ரபில் அமைதியுடனும், நிம்மதியுடனும் மார்க்கத்தின் தூதுச் செய்தியை மக்களுக்கு கொண்டு சேர்க்க வேண்டும் என்று அன்னார் (ஸல்) விரும்பினார்கள். ஆக, இந்த விஷயத்தையும் கூட எதிரிகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. மதீனா ஹிஜ்ரத்திலிருந்து ஹுதைபிய்யா உடன்படிக்கை வரை பல முறை போர்களையும், சண்டைகளையும் அன்னாருக்கு எதிர் கொள்ள நேரிட்டது. மேலும், ஏக இறைவனை வணங்கக் கூடியவர்களை பூமியிலிருந்து அழித்து விட வேண்டும் என்று எதிரிகள் எல்லா வகையான முயற்சிகளையும் செய்தனர். ஆனால், அவர்களால் சூடாக்கப்பட்ட செயற்களத்தை இறைவன் ஏகத்துவம் மற்றும் ஏகத்துவத்தின் கொடியை ஏந்தி நின்றவர்களுக்காக மகத்துவ மிக்க அடையாளமாக்கி விட்டான். ஆனால், இந்த அனைத்திற்கு பிறகும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தூய்மை நிறைந்த உள்ளத்தின் நிலை திருக்குர்ஆனின் கூற்றுப்படி இவ்வாறாக இருந்தது.

لَعَلَّكَ بَاخِعٌ نَّفْسَكَ أَلَّا يَكُونُوا مُؤْمِنِينَ

(அஷ்ஷுஅரா: 4)

அவர்கள் நம்பிக்கை கொள்வதில்லை என்பதற்காக நீர் உமது உயிரை மாய்த்துக் கொள்வீரா? அதாவது, உமது பரிசுத்தமான உள்ளத்தால் நிராகரிப்பாளர்கள் உண்மையை மறுப்பததை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. மேலும், அவர்களும் நேர்வழி பெற்று விட வேண்டும் என்று விரும்புகின்றது.

### திருக்குர்ஆன் மீதான நேசம்

திருக்குர்ஆன் அன்னார் (ஸல்) குறித்து இவ்வாறு கூறுகின்றது:

رَسُولٌ مِّنَ اللَّهِ يَتْلُوا صُحُفًا مُّطَهَّرَةً

(98:3)

அதாவது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) தூய்மையான வேதங்களை படித்துக் காட்டக் கூடியவராக இருந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் திலாவத்தின் மகத்துவம் மற்றும் பொலிவு குறித்து திருக்குர்ஆனே இவ்வாறு சான்று பகர்கின்றது:

الَّذِينَ آتَيْنَاهُمُ الْكِتَابَ

يَتْلُونَهُ حَقَّ تِلَاوَتِهِ

(2:122)

அதாவது எவர்களுக்கு நாம் வேதம் வழங்கியுள்ளோமோ அவர்கள் அதனைப் ஓத வேண்டிய முறைப்படியே ஓதுகின்றனர்.

அன்னார் (ஸல்) இறைக் கட்டளைக்கேற்ப அழகிய குரலிலும், முறைப்படியும் எவ்வாறு திலாவத் செய்து வந்தார்கள் என்றால் அதன் மூலம் திலாவத்திற்குரிய உரிமை நிறைவேற்றப்பட்டு வந்தது.

இறைத் தூதர் (ஸல்) அவர்களின் திலாவத் எவ்வாறு இருந்தது? என்று ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு, அன்னார் (ஸல்) நீண்ட சூராக்களை திலாவத் செய்து வந்தார்கள் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். பின்னர் அன்னார் பிஸ்மில்லாஹ் ஓதி காட்டினார்கள். அதனை நீட்டித்தார்கள். பின்னர் அர்ரஹ்மானை நீட்டித்து ஓதிக் காட்டி பின்னர் அர் ரஹீம் என்று ஓதினார்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எந்த அளவிற்கு கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்களின் திருக்குர்ஆன் திலாவத்தை அல்லாஹ் கேட்கின்றானோ அந்த அளவிற்கு வேறு எந்த விஷயத்தையும் காது கொடுத்து கவனத்துடன் கேட்பதில்லை. அவர் அழகிய குரலிலும் உருக்கத்துடனும் உரத்த குரலில் திலாவத் செய்யும் போது அல்லாஹ் அதனை செவியேற்கின்றான் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நாள் முழுவதும் தொடர்ச்சியாகவும், குறிப்பாக தொழுகைகளில் இறங்கக் கூடிய புத்தம் புதிய திருக்குர்ஆன் வஹீகளை மீண்டும், மீண்டும் ஓதுதவதற்கான ஏற்பாடு இருந்து வந்தது. பொதுவாக,

இரவிலும் நாவில் திருக்குர்ஆனே இருந்து வந்தது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இரவில் திடீரென கண்விழித்தால் நாவில் அல்லாஹ்வின் மகத்துவத்திற்கான இந்த வசனங்கள் உச்சரிக்கப்பட்டு வந்தன. وَمَا مِنْ اِلٰهٍ اِلَّا اللّٰهُ الْوَاحِدُ الْقَهَّارُ رَبُّ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَمَا بَيْنَهُمَا الْعَزِيْزُ الْغَفَّارُ

தனித்தவனும், முழுமையான அதிகாரத்தைக் கொண்டவனுமாகிய அல்லாஹ்வைத் தவிர வேறெவனும் வணக்கத்திற்குரியவன் இல்லை. வானங்களுக்கும், பூமிக்கும், அவ்விரண்டிற்குமிடையிலுள்ளவை அனைத்திற்கும் உரிய இறைவன், வல்லமையுள்ளவனும், மிக்க மன்னிப்பவனுமாவான்.(38: 66 -67)

சுருக்கமாக, ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் வாழ்வின் ஒவ்வோர் அம்சமும் திருக்குர்ஆன் போதனைகளின் வெளிப்பாடாகும். அன்னாரின் வாழ்க்கை எல்லா வகையிலும் முன்னுதாரணமாகவும், பின்பற்றத் தக்கதும் ஆகும். அன்னாரின் வாழ்க்கையை பின்பற்றுவதன் மூலமே அல்லாஹ்வின் நேசத்தை பெற முடியும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வின் அழகு, சிறப்பு, மேலும், அதன் உயர்ந்த அந்தஸ்துகளை சில பக்கங்களில் எடுத்துரைப்பது சாத்தியமற்ற விஷயம் ஆகும். எனவே இறுதியில் ஸலவாத்தை ஓதியவாறு இந்தக் கட்டுரையை நான் நிறைவு செய்கின்றேன்.

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ سَيِّدِنَا مُحَمَّدٍ اَكْثَرَ مَا صَلَّيْتَ عَلٰى اَحَدٍ مِّنْ اَنْبِيَآئِكَ وَبَارِكْ وَسَلِّمْ

* * * * * *




28-ம் பக்கத் தொடர்ச்சி...

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஷரீஅத்தும், நபித்துவமும் நிறைவு பெற்றது. இப்போது எந்த ஷரீஅத்தும் வர முடியாது. திருக்குர்ஆன் இறைமறைகளில் இறுதியானது. அதில் இப்போது ஒரு புள்ளியோ சூழியோ கூடவோ குறையவோ முடியாது. எனினும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பரக்கத்துகள், அருள்கள் மற்றும் திருக்குர்ஆனின் போதனைகள், வழிகாட்டல்கள் ஆகியவற்றின் கனிகள் முடிவு பெற்றுவிடவில்லை. அவை எல்லாக் காலத்திலும் புத்தம் புதிதாக உள்ளன.

அந்த அருட்கள் மற்றும் பரக்கத்துகளுக்கு சான்றளிப்பதற்காகவே இறைவன் என்னை நிறுத்தினான். அதாவது, திருக்குர்ஆனின் போதனைகளை ஒவ்வொருவராலும் புரிய முடியாது. சில விஷயங்கள் விளக்க வேண்டியவை ஆகும். விரிவுரையை நாடுகின்றன. அவற்றை எடுத்துரைப்பதற்காக அல்லாஹ் இந்த இறுதி காலத்தில் என்னை அனுப்பியுள்ளான் என்று அன்னார் (அலை) கூறுகின்றார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 8, பக்கம் 245, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

பிறகு, அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆனைப் போன்ற ஓர் அற்புதம் இதற்கு முன்னும் இருந்ததில்லை ; இனிமேலும் வரவப்போவதில்லை. முன்னரும் அதற்கு நிகர் ஏதுமில்லை; பின்னரும் கிடைக்க முடியாது. அதன் அருளும், வளமும் என்றென்றும் நீடித்திருக்கக் கூடியவை. அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் இருந்தது போன்றே எந்தக் காலத்திலும், தெளிவாகவும் பசுமையாகவும் இருக்கக் கூடியதாகும்.

இது மட்டுமின்றி, இன்னும் ஒன்றை நினைவிற் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரின் கூற்றும் அவரது தகுதிக்கேற்பவே இருக்கும். அவரது துணிவு, உறுதி மற்றும் உயர்வான குறிக்கோள் இருக்கும் அளவுக்கு ஏற்ப அதே தரத்தில் அந்தக் கூற்றும் இருக்கும். இறை அறிவிப்பிலும் இதே நிலைதான் இருக்கின்றது. எவ்வாறு சாதாரண மனிதனின் அறிவுக்கு ஏற்ப உரையாடுகிறானோ அதேபோன்று இறையறிவிப்பிற்கும் ஓர் அந்தஸ்து உள்ளது. எந்த நபருக்கு அவனது வஹீ இறங்குகிறதோ அவர் கொண்டிருக்கும் உயர் தகுதிக்கு ஏற்பவே அதே தரத்திலான இறையறிவிப்பு அவருக்குக் கிடைக்கிறது.ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) மும் நிறைவு பெற்றது. இப்போது எந்த ஷரீஅத்தும் வர முடியாது. திருக்குர்ஆன் இறைமறைகளில் இறுதியானது. அதில் இப்போது ஒரு புள்ளியோ சூழியோ கூடவோ குறையவோ முடியாது. எனினும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பரக்கத்துகள், அருள்கள் மற்றும் திருக்குர்ஆனின் போதனைகள், வழிகாட்டல்கள் ஆகியவற்றின் கனிகள் முடிவு பெற்றுவிடவில்லை. அவை எல்லாக் காலத்திலும் புத்தம் புதிதாக உள்ளன.

பிறகு, கூறினார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தகுதி, திறன் மற்றும் உறுதிப்பாடு ஆகியவற்றின் வட்டம் மிகவும் விசாலனமானதாக இருந்தது. எனவே அன்னாருக்குக் கிடைத்த இறையறிவிப்பும் எந்த அளவு அந்தஸ்தும் தகுதியும் உடையது என்றால், அந்தத் தகுதியும் துணிவும் உடையவர் ஒருவர் இனிமேல் பிறக்க மாட்டார்.

(மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 57, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

இங்கும் இதை நினைவில் கொள்ள வேண்டும். வஹீக்கும் படித்தரங்கள் உள்ளன. அல்லாஹ்வின் தூதுச் செய்திக்கும் படித்தரங்கள் உள்ளன. பிறகு, கூறினார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தகுதி, திறன் மற்றும் உறுதிப்பாடு ஆகியவற்றின் வட்டம் மிகவும் விசாலனமானதாக இருந்தது. எனவே அன்னாருக்குக் கிடைத்த இறையறிவிப்பும் எந்த அளவு அந்தஸ்தும் தகுதியும் உடையது என்றால், அந்தத் தகுதியும் துணிவும் உடைய ஒருவர் இனிமேல் பிறக்க மாட்டார்.

(குத்பா பேருரை 18.05.2023- ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ் அவர்கள்)

* * * * * *

27-ம் பக்கத் தொடர்ச்சி...
திருக்குர்ஆன் கூறும் மதநல்லிணக்கம்...

اَلَيْسَتْ نَفْسًا

இவர் மனிதர் இல்லையா என்ன? என்று கேட்டார்கள்.

நமது அன்பிற்குரிய இமாம் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மார்ச் 10,2006-ம் ஆண்டு ஆற்றிய ஜுமுஆ சொற்பொழிவில் இந்த சம்பவத்தை கூறிய பிறகு கூறுகிறார்கள்:

எனவே மற்ற மார்க்கத்தைச் சேர்ந்தவருக்கும், மனித நேயத்திற்கும் இதுவே மதிப்பளித்தல் ஆகும். இதுவே பாராபட்சமற்ற தன்மையுடைய மார்க்கத்தின் சூழலை உருவாக்க வெளிப்படையான மற்றும் நல்ல முன்மாதிரியாகும். இந்த வெளிப்படை தான் ஒருவர் மற்றவருக்கான மென்மையான உணர்வை உருவாக்க மற்றும் இந்த உணர்வு தான் அன்பு, நேசம் மற்றும் அமைதியின் சூழலை உருவாக்குகிறது. இது இன்று இருக்கக் கூடிய உலகவாதிகளை போன்றல்ல. அதாவது வெறுப்பின் சூழலை உருவாக்குவதை தவிர வேறொன்றும் செய்வதில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) கூறுகின்றார்கள்:

எனவே அப்போது வேதமுடையவர்கள் மற்றும் இணை வைக்கக் கூடிய அரபிகள் மிகவும் கீழ்த்தரமாக நடந்து கொண்டிருந்தார்கள். அதாவது பாவத்தை செய்து விட்டு நாம் நன்மைக்கான வேலை செய்து விட்டோம் என்று அவர்கள் கருதினார்கள். மேலும் அந்த பாவத்திலிருந்து விலகவுமில்லை. மேலும் பொது அமைதியை சீர்குலைத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது இறைவன் தன்னுடைய நபியை அனுப்பி அவருடைய கையில் அரசாங்கத்தின் அதிகாரத்தை தந்து அவரின் கரத்தால் ஏழைகளை காப்பாற்ற நினைத்தான். ஏனெனில், அரபு நாடே கட்டுப்பாடில்லாமல் இருந்தது. மேலும் அந்த மக்கள் எந்தவொரு அரசன் அல்லது அரசாங்கத்தின் கீழும் இருக்கவில்லை. இதன் காரணமாக ஒவ்வொரு கோத்திரமும் கட்டுப்பாடில்லாமலும் துணிவுடனும் வாழ்க்கையை கழித்துக் கொண்டிருந்தார்கள். ஏனெனில்.அவர்களுக்கு எந்த ஒரு தண்டனையும் சட்டமும் இல்லாமல் இருந்தது. இதனால் மக்கள் நாளுக்கு நாள் பாவத்தில் முன்னேறி சென்று கொண்டிருந்தார்கள். எனவே இறைவன் அந்த நாட்டின் மீது கருணை புரிந்தான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அந்த நாட்டிற்கு ரஸுலாக (தூதராக) மட்டும் அனுப்பப்படவில்லை. மாறாக அந்த நாட்டின் அரசாாகவும் திகழ்ந்தார்கள். மேலும், அல்லாஹ் திருக்குர்ஆனை எப்படிப்பட்ட ஒரு சட்ட நூலாக முழுமையாக்கினான் என்றால் அதில் சிவில், குற்றவியல், மற்றும் நிதி ஆகிய இந்த அனைத்து விவகாரங்களுக்குமான வழிமுறைகள் இருந்தன. எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஓர் அரசாராக அனைத்து பிரிவினரின் நீதிபதியாக இருந்தார்கள். மேலும் ஒவ்வொரு மதத்தின் மக்களும் தங்களுடைய வழக்குகளின் தீர்ப்பை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள். திருக்குர்ஆனின் மூலமாக நிரூபணம் ஆகின்றது. அதாவது ஒருமுறை ஒரு முஸ்லிம் மற்றும் ஓர் யூதர் பரஸ்பரம் நீதிமன்றத்தில் வழக்கை எடுத்துக் கொண்டு வந்தனர். அப்போது அன்னார் (ஸல்) நன்கு விசாரித்த பிறகு யூதரை உண்மையாளராகவும் முஸ்லிமின் மீது அவர் பாதித்ததற்கான தீர்ப்பை வழங்கினார்கள். எனவே சில அறியாத எதிரிகள் எவர் திருக்குர்ஆனை ஆழ்ந்து ஓதுவதில்லையோ அவர் ஒவ்வோர் இடத்திலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய தூதுச் செய்தியை தாழ்த்தி விடுவார்கள். ஆனால் இப்படிப்பட்ட தண்டனைகள் கிலாஃபத் அதாவது அரசர் என்ற முறையில் கொடுக்கப்படும்.

பனீ இஸ்ராயீலில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்குப் பிறகு நபியும் தனியாக இருந்தார். அரசர் தனியாக இருந்தார். அரசர் அரசாங்கத்தின் மூலமாக சமாதானத்தை நிலைநாட்டினார். ஆனால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் இவ்விரண்டு பதவிகளும் அல்லாஹ் அன்னாருக்கு வழங்கியிருந்தான். குற்றம் புரியும் மக்களை தனியாக வைத்து விட்டு எஞ்சிய மக்களிடம் எப்படி நடந்து கொள்ளப்பட்டது என்று கீழ்கண்ட வசனத்தின் மூலமாக வெளிப்படுகிறது.

அதாவது அல்லாஹ் கூறுகின்றான்:

வேதம் வழங்கப்பட்டவர்களிடமும், கல்லாதவர்களிடமும் (உம்மீயின்களிடமும்) நீங்கள் அல்லாஹ்வுக்கு அடிபணிந்து விட்டீர்களா? என்று கேட்பீராக. அவர்கள் அடிபணிந்து விட்டால் அவர்கள் நேர்வழி பெற்றவர்களாவர். அவர்கள் புறக்கணித்து விட்டால் உம்முடைய கடமை தூதுச் செய்தியை எடுத்துரைப்பதேயாகும். (திருக்குர்ஆன் 3: 21) அதாவது நீங்கள் அவர்களிடம் போர் செய்வதும் உங்களுடைய வேலைதான் என்று இந்த வசனத்தில் ஒன்றும் எழுதப்படவில்லை. இதிலிருந்து நமக்கு வெளிப்படையாக தெரிகிறது. அதாவது முஸ்லிம்களை கொலை செய்வது அல்லது பொது அமைதியை சீர்குலைப்பது மற்றும் திருட்டு, வழிப்பறியில் ஈடுபடுவது போன்ற குற்றம் புரியும் மக்களுடன் போர் புரிவதற்கான கட்டளையாக இருந்தது.. மேலும் இந்த போர் கூட நபி என்ற முறையில் அல்லாமல் அரசர் என்ற முறையில் தான் இருந்தது. உதாரணமாக இவ்வாறு அல்லாஹ் கூறுகின்றான்:

மேலும் உங்களிடம் போர் செய்வோருடன் நீங்களும் அல்லாஹ்வின் வழியில் போர் புரியுங்கள். ஆனால், வரம்பு மீறாதீர்கள். வரம்பு மீறுபவர்களை அல்லாஹ் ஒருபோதும் நேசிப்பதில்லை. (திருக்குர்ஆன் 2: 191)

சுருக்கமாக கூறினால், திருக்குர்ஆன் மதநல்லிணக்கத்திற்கான மார்க்க போதனை மற்றம் வழிமுறையை எடுத்துரைத்துள்ளது. அது இவ்வுலகில் அமைதியை நிலைநாட்ட போதுமானதும் முழுமையானதும் ஆகும். இது மட்டும் அல்ல. இந்த திருக்குர்ஆனின் போதனையை செயல் ரீதியாகவும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நிலைநாட்டியுள்ளார்கள். மதநல்லிணக்கம் மற்றும் அழகிய முறையில் நடந்து கொள்வதற்கான உயர்தரமான முன்மாதிரியை நிலைநாட்டினார்கள். அதுவும் இவ்வுலக வரலாற்றில் எண்ணிலடங்கா கருவூலம் ஆகும். இது மனிதநேயத்திற்காக ஆரோக்கியமான சான்றாக இவ்வுலகில் இருக்கின்றது.

அல்லாஹ் நமக்கு திருக்குர்ஆனின் இந்த போதனையை மிகச் சிறந்த முறையில் செயல்படுத்துவதற்கும் இவ்வுலகை சொர்க்கமாக மாற்றுவதற்கான நல்வாய்ப்பையும் வழங்குவானாக. ஆமீன்.

தமிழாக்கம்
மவ்லவி இர்ஃபான் அஹ்மத்

* * * * * *

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த *TOLL FREE* எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

## திருக்குர்ஆனில் உலக அமைதிக்கான போதனைகள்- குறிப்பாக நீதியை நிலைநாட்டுவது குறித்த போதனைகள்:

(எழுத்து: ஜாவீத் அஹ்மத் லோன் ஸாஹிப், நாஸிர் தீவான், காதியான்)

கண்ணியத்திற்குரிய வாசகர்களே! எந்தவொரு சமூகத்திலும் உலகியல் உயர்வு மற்றும் நற்பண்புகள் உறுதியடைவதற்கான அடிப்படை உண்மையான நீதி நிலைநாட்டப்படுவதைக் கொண்டே அமையும் என்பதை நாம் அறிவோம். அமைதி நிலைநாட்டப்பட்டால் தான் பொதுமக்களிடம் பாதுகாப்பு உணர்வும் நிலைபெற்றிருக்கும். மேலும், அவர்கள் கவனத்துடன் ஒவ்வொரு களத்திலும் முன்னேற்றத்தையும் வெளிப்படுத்துவார்கள்.

அமைதி நிலைபெற்றால் தான் வாழ்வாதாரம் மற்றும் வியாபாரத்தின் சக்கரம் எளிதாக நகர இயலும். ஆராய்ச்சியின் புதிய பாதைகளும் அமைதி நிலைபெறுவதைக் கொண்டே பிணைந்துள்ளது. புதிய தலைமுறைகளின் அறிவு சார்ந்த வளர்ச்சியின் முன்னேற்றத்தையும் அமைதி நிறைந்த சமூகத்தால் தான் கொடுக்க இயலும். அமைதியற்ற சமூகம் வாழ்வாதாரம் மட்டுமல்லாது குடும்ப மற்றும் நல்லொழுக்க ரீதியாகவும் வீணாகிவிடுகின்றன. இன்னும்கூறப்போனால், ஆன்மிக வீழ்ச்சியிலும் தனக்கு நிகர் தானே என்ற விளைவுக்குள்ளாகின்றது. எனவே நமது சுற்றுச் சூழலில் ஒவ்வொரு மட்டத்திலும் குழப்பங்களை அகற்றுவதற்கும் உண்மையான அமைதியை நிலைநாட்டுவதற்கும் ஒவ்வொரு சாத்தியமான முயற்சியும் செய்தாக வேண்டும் என்பது மிகவும் அவசியம் ஆகும்.

உலகம் இன்று எவ்வாறான நீதியையும், நியாயத்தையும் தேடுகின்றதோ அது எவ்வாறு கிடைக்கும்? இது ஒரு முக்கியமான மற்றும் கடினமான கேள்வியாகும். இதற்கான எளிய பதில் என்னவென்றால், எவ்வாறு ஒரு பசியுடையவரின் பசி ரொட்டி அல்லது சாப்பாடு என கூறிக் கொண்டிருப்பதால் மட்டும் நீங்கி விடாதோ அதேபோன்று நீதி குறித்த வெற்று முழக்கங்களாலும், ஐ.நா சபை அலுவலகங்களை அமைப்பதைக் கொண்டு மட்டுமே நீதியை நிலைநாட்டி விட முடியாது. ஆனால், பாரபட்சமின்றி நீதி மற்றும் நியாயம் பற்றிய சட்டத்திட்டங்களும், அவற்றை செயல்படுத்துவதற்கான உறுதி வாய்ந்த திட்டங்களின் விளைவால் மட்டுமே உலக அளவில் அமைதி நிலைபெறுவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. இதற்கான மகத்தான முன்மாதிரிகளை இன்றிலிருந்து 1400 ஆண்டுகளுக்கு முன்பு ஹஸ்ரத் மாநபி (ஸல்) அவர்கள் உலகின் முன் வைத்தார்கள். இறை நியதிக்கேற்ப ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அரபு நாட்டில் பிறந்தார்கள். அங்கு எல்லா வகையான அநியாயங்களும், கொடுமைகளும், அநீதிகளும் நிகழ்ந்து வந்தன. அன்னார் (ஸல்) அக்கிரமங்களும், கொடுமைகளும் நிரம்பியிருந்த இந்த அரபுத் தீவை நீதி-நேர்மையின் பிறப்பிடமாக்கி உலகின் முன் இஸ்லாமிய ஆட்சியின் ஓர் அழகிய முன்மாதிரியை முன் வைத்தார்கள்.

இதில் ஒருபுறம் அநீதி இழைக்கப்பட்ட பெண்களை கொடுமைகளிலிருந்து விடுவித்து இருக்கும் அதேவேளையில் மறுபுறம் அடிமைகளின் உரிமைகளை கிடைக்கச் செய்ததும் அடங்கும். நீதியின் துவக்கத்தை குடும்பத்தின் ஆரம்ப மட்டத்திலிருந்து செய்தார்கள். அதன் பின் வட்டாரம், நகரம், நாடு மற்றும் உலக அளவில் நீதியை நிலைநாட்டிக் காண்பித்தார்கள்.

குடும்ப அளவில் அன்னார் (ஸல்) பெற்றோர், குழந்தைகள், உறவினர்கள், குழந்தைகள், பெண்கள், முதியவர்கள், அண்டை அயலார் ஆகியோரின் உரிமையை நிலைநாட்டிய அதேவேளையில் சமூகத்தில் நிற, இன, மத பேதங்களையும் வேற்றுமைகளையும் அகற்றி குடும்பம், வாழ்வாதாரம், மார்க்கம் என ஒவ்வொரு கோணத்திலும் நீதி, நேர்மையை நிலைநாட்டிக் காண்பித்தார்கள். நீதியை பரப்பிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு அறிவித்தார்கள்:

أُمِرْتُ لِاَعْدِلَ بَيْنَكُمُ

(அஷ்ஷூரா: 16)

பொருள்: மக்களே! நான் உங்கள் மத்தியில் நீதியை நிலைநாட்டவே அனுப்பப்பட்டுள்ளேன்.

உலக அமைதிக்காக மிக முக்கியமான மற்றும் அவசியமான கட்டளையாக அல்லாஹ் இவ்வாறு கூறியுள்ளான்:

اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ

وَاِيْتَآئِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ ۚ

يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ

(அந்நஹ்ல்: 91)

பொருள்: நிச்சயமாக அல்லாஹ் நீதி, கருணை மற்றும் உறவினர்களுக்கு (கொடுப்பதைப் போல)க் கொடுக்கவும் கட்டளை பிறப்பித்துள்ளான். மேலும், வெட்கக்கேடு மற்றும் விரும்பத்தகாத விஷயங்கள், கிளர்ச்சி செய்தலை தடுக்கின்றான். நீங்கள் படிப்பினை பெறுவதற்காக அவன் உங்களுக்கு அறிவுரை கூறுகின்றான்.

எனவே இஸ்லாம் எவ்வாறான மார்க்கம் எனில் இதனை அல்லாஹ் உலகிலுள்ள எல்லப் படைப்பினத்திடலும் நீதி, நேர்மையுடன் செயல்படுவதற்காக தோற்றிவித்துள்ளான். அல்லாஹ் திருக்குர்ஆனில் குடும்பம், வாழ்வாதாரம், மார்க்கம் என ஒவ்வொரு கோணத்திலும் மற்றும் ஒவ்வொரு மட்டத்திலும் நீதியை நிலைநாட்டும் அடிப்படையை கூறியுள்ளான்.

**முதல் அடிப்படை**: மனிதனின் அடிப்படை உரிமைகள் சார்ந்ததாகும். அல்லாஹ் கூறுகின்றான்:

كَتَبْنَا عَلٰى بَنِيْٓ اِسْرَآءِيْلَ اَنَّهٗ مَنْ قَتَلَ نَفْسًا بِغَيْرِ نَفْسٍ اَوْ فَسَادٍ فِى
الْاَرْضِ فَكَاَنَّمَا قَتَلَ النَّاسَ جَمِيْعًا ؕ وَمَنْ اَحْيَاهَا فَكَاَنَّمَآ اَحْيَا النَّاسَ جَمِيْعًا ؕ

பொருள்: பிறரை கொல்லாத ஒருவரை எவர் கொல்கின்றாரோ அல்லது பூமியில் குழப்பம் விளைவிக்கின்றாரோ அவர் முழு மனித குலத்தையும் கொன்றவரைப் போல ஆவார். மேலும், எவர் அவரை உயிருடன் வைப்பாரோ அவர் முழு மனித குலத்தையும் உயிர்ப்பித்தவரைப் போல ஆவார்.(அல்மாயிதா: 33)

இந்த வசனத்தின் ஒளியில் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: எனவே உலகில் அமைதியை நிலைநாட்ட ஒவ்வொரு மட்டத்திலும், உலகின் ஒவ்வொரு நாட்டிலும் நீதியின் சரியான தரத்தை நிலைநாட்ட வேண்டும் என்பது அவசியமாகும். ஓர் அப்பாவி மனிதனை கொல்வது முழு மனித குலத்தையும் கொல்வதற்கு ஒப்பானதாகும் என திருக்குர்ஆன் எடுத்துரைக்கின்றது. எனவே நான் ஒரு முஸ்லிம் என்கிற அடிப்படையில் மீண்டும் ஒருமுறை இந்த விஷயத்தை விளக்க விரும்புகின்றேன். இஸ்லாம் எந்தவொரு தன்மையிலும், வடிவத்திலும் அல்லது விதத்திலும் செய்யப்படும் அநீதி மற்றும் கொடுமைக்கு ஒருபோதும் அனுமதி வழங்கவில்லை. இஸ்லாத்தின் இந்தக் கட்டளை முற்றிலும் ஐயமற்றதாகும்.

மேலும் இதில் எந்தவொரு விதிவிலக்கும் இல்லை. திருக்குர்ஆன் இது பற்றி மேலும் கூறுகிறது: உங்களை எதிர்க்கக் கூடிய எந்தவொரு நாடோ அல்லது சமுதாயமோ, அவர்களுடைய விவகாரத்திலும் முழுமையான நீதி, நேர்மையை கையாளுங்கள். அவர்களுடனான பகைமை மற்றும், வெறுப்பின் காரணத்தாலும் அவர்களை பழிவாங்குவதற்கு நீங்கள் அநீதியின் பக்கம் சென்றுவிடக் கூடாது. (எனவும் திருக்குர்ஆன் கூறுகிறது).

முக்கிய வழிகாட்டல்

என்னவெனில், பிறரின் செல்வங்கள், வசதி வாய்ப்புகளின் பக்கம் பொறாமை மற்றும் பேராசையின் பார்வையுடன் பார்க்காதீர்கள். நான் சில கட்டளைகளையே உங்கள் முன் வைத்துள்ளேன். எனினும் இவை மிக முக்கியமானதாகும். ஏனெனில், இவையே சமூகத்திலும், உலகிலும் அமைதி மற்றும், நீதி நிலைபெறுவதற்கு அடிப்படை காரணியாகின்றன.

உலகம் இந்த முக்கிய விவகாரங்களின் பக்கம் கவனம் செலுத்த நான் துஆ செய்கின்றேன். அப்போது தான் எந்த அழிவின் பக்கம் கொடுமை செய்பவர்களும், பொய்யர்களும் நம்மை கொண்டு செல்கின்றனரோ அதிலிருந்து நாம் பாதுகாக்கப்படுவோம். (ஒன்பதாவது லண்டன் அமைதி மாநாட்டில் ஆற்றப்பட்ட சொற்பொழிவு, மார்ச், 2012- நூல் உலக நெருக்கடியும், அமைதிக்கான தீர்வும்- பக்கம் 49)

இவ்வாறே அல்லாஹ் கூறுகின்றான்: ஒவ்வொரு மனிதனின் அடிப்படை உரிமைகளான உணவு, உடை, இருப்பிடம் போன்றவை அவர்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும்.

இது பற்றி அவன் கூறியுள்ளான்:

إِنَّ لَكَ أَلَّا تَجُوعَ فِيهَا وَلَا تَعْرَىٰ ۝

وَأَنَّكَ لَا تَظْمَؤُا فِيهَا وَلَا تَضْحَىٰ ۝

பொருள்: நீர் பசியுடனோ அல்லது ஆடையின்றியோ இருக்கலாகாது (என்பது உமக்கு விதிக்கப்பட்டுள்ளது). மேலும் தாகமுடையவராகவும், வெயிலில் காய்பவராகவோ இருக்கலாகாது. (ஸூரா தாஹா: 119 - 120)

சமூகநீதியின் அடிப்படை தேட்டம் குடும்ப அளவில் நீதி நிலைபெறுதல் ஆகும். பெற்றோரிடம் கருணை காட்டுதல் என்பதில் பிள்ளைகள் அவர்களிடம் மென்மை, அன்பு மற்றும் கருணையின் நன்நடத்தையை மேற்கொள்வதுடன் அவர்களுக்கு (இறைவன்) கருணை காட்ட துஆ செய்ய வேண்டும்.

உதாரணமாக, அல்லாஹ் கூறியுள்ளான்.

قُلْ تَعَالَوْا أَتْلُ مَا حَرَّمَ رَبُّكُمْ عَلَيْكُمْ
أَلَّا تُشْرِكُوا بِهِ شَيْئًا ۖ وَبِالْوَالِدَيْنِ إِحْسَانًا ۖ
وَلَا تَقْتُلُوا أَوْلَادَكُم مِّنْ إِمْلَاقٍ ۖ
نَّحْنُ نَرْزُقُكُمْ وَإِيَّاهُمْ ۖ
وَلَا تَقْرَبُوا الْفَوَاحِشَ مَا ظَهَرَ مِنْهَا
وَمَا بَطَنَ ۖ وَلَا تَقْتُلُوا النَّفْسَ الَّتِي حَرَّمَ اللَّهُ إِلَّا بِالْحَقِّ
ذَٰلِكُمْ وَصَّاكُم بِهِ لَعَلَّكُمْ تَعْقِلُونَ

பொருள்: நீர் (அவர்களிடம்) கூறுவீராக! உங்கள் இறைவன் உங்களுக்குத் தடுத்தவற்றை நான் உங்களுக்குப் படித்துக் காட்டுகின்றேன். நீங்கள் எப்பொருளையும் அவனுக்கு இணையாக்காதீர்கள். மேலும், பெற்றோரிடத்தில் மிக்க நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். மேலும் வறுமைக்கு அஞ்சி உங்கள் குழந்தைகளை கொலை செய்யாதீர்கள். நாமே உங்களுக்கும், அவர்களுக்கும் உணவளிக்கின்றோம். தீமைகள் வெளிப்படையாயிருப்பினும், மறைமுகமாயிருப்பினும் அவற்றின் பால் நெருங்காதீர்கள். அல்லாஹ் தடுத்துள்ள உயிரை (சட்ட) அனுமதியின்றிக் கொலை செய்யாதீர்கள். நீங்கள் விளங்கிக் கொள்வதற்காக அல்லாஹ் உங்களுக்கு இது குறித்துக் கட்டளை விடுகின்றான். (அல்அன்ஆம்: 152)

குடும்ப வாழ்வில் நீதி என்பது கணவன், மனைவி இருவரும் பகிரங்கமான தீமைகளிலிருந்தும், வெட்கக்கேடுகளிலிருந்தும் தவிர்ந்து கொள்ள வேண்டும். மேலும் அவற்றிற்கு அருகில் கூட செல்லக் கூடாது. (அல் அன்ஆம்: 152)

அல்லாஹ் கூறுகின்றான்:

وَلَا تَقْتُلُوا أَوْلَادَكُمْ خَشْيَةَ إِمْلَاقٍ ۖ
نَّحْنُ نَرْزُقُهُمْ وَإِيَّاكُمْ ۚ إِنَّ قَتْلَهُمْ كَانَ خِطْئًا
كَبِيرًا ۝ وَلَا تَقْرَبُوا الزِّنَىٰ ۖ إِنَّهُ كَانَ فَاحِشَةً ۖ
وَسَاءَ سَبِيلًا

நீங்கள் வறுமைக்கு அஞ்சி உங்கள் குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள். நாமே உங்களுக்கும் உணவளிக்கின்றோம். அவர்களைக் கொலை செய்வது நிச்சயமாக (மா) பெரும் குற்றமாகும். (சூரா பனீ இஸ்ராயீல்: 32 - 33)

சமூகத்தின் ஒட்டுமொத்த அங்கத்தினர்களும் உறவினர்கள், அனாதைகள், அருகிலும் தொலைவிலும் இருக்கும் ஏழைகள், அண்டை அயலார்கள், நண்பர்கள், பயணிகள் ஆகிய அனைவருடனும் நீதியுடன் நடப்பது மட்டுமல்ல மாறாக அழகிய முறையில் நடப்பதும் கடமையாகும்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: இஸ்லாம் அண்டை அயலாரின் உரிமைகளையும் நிர்ணயித்துள்ளது. அண்டை அயலார் யார்? அவர்களின் உரிமைகள் என்ன? என்று திருக்குர்ஆன் விளக்கமாக வழிகாட்டுகின்றது. எவர் உங்களுடன் அமர்ந்திருப்பாரோ அவரும் (உங்கள்) அக்கம் பக்கத்தவர் ஆவார். நீங்கள் தெரிந்த (அல்லது) தெரியாத பக்கத்து வீட்டினரும் (அண்டை அயலாரே)

உண்மையில் அண்டை அயலாரின் வட்டம் நாற்பது வீடுகள் வரை அடங்கும். உங்களுடன் இணைந்து பயணிப்பவரும் அண்டை அயலார் தான். அவர்கள் மீது அக்கறை காட்ட வேண்டும் என்ற கட்டளை உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. (பைத்துர் ரஷீத் பள்ளிவாசல் ஹம்பர்க், ஜெர்மனி 2012-ல் ஆற்றிய சொற்பொழிவு- நூல் உலக நெருக்கடியும் அமைதிக்கான வழிமுறையும் பக்கம்- 111)

குடும்ப அளவில் நீதி நிலைபெற பலவீனமான மக்கள், அனாதைகள், விதவைகளின் செல்வங்களை பாதுகாத்தல், வறியவர்கள் மற்றும் அடிமைகளின் உரிமைகளை செலுத்துதல் மிகவும் அவசியமாகும்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

இஸ்லாத்தின் மற்றொரு மகத்தான போதனை ஏழைகள் மற்றும் ஆதரவற்றவர்களின் உரிமைகளை செலுத்துவது தொடர்பானதாகும். இதில் நமக்கு இவ்வாறான வாய்ப்புகளை தேடும் போதனை உள்ளது. குறிப்பாக ஆதரவற்றவர்களுக்கு ஒப்பற்ற முறையில் உதவி செய்ய வேண்டும். மேலும், அவர்களிடமிருந்து எவ்விதத்திலும் வேறு எதனையும் பெறக் கூடாது. துரதிஷ்டவசமாக இன்றைய சூழலில் வெளிப்படையாக உதவுகின்றவாறு திட்டங்களும், வாய்ப்புகளும் தோற்றுவிக்கப்படுகின்றன. எனினும், அவை Credit system- ஐ அடிப்படையாக கொண்டுள்ளதுடன் (தொகை) திருப்பி செலுத்தும்போது வட்டியுடன் வசூல் செய்யப்படுகின்றது.

இஸ்லாத்தின் மீது அடிக்கடி செய்யப்படும் ஆட்சேபனை பெண்களுக்கு சரிசமமான உரிமைகளை இஸ்லாம் கொடுக்கவில்லை என்பதாகும். இந்த ஆட்சேபனை முற்றிலும் அடிப்படையற்றதாகும். இஸ்லாம் பெண்களுக்கு மதிப்பும், மரியாதையும் வழங்கியுள்ளது. நான் ஓரிரு உதாரணங்களை தருகின்றேன்:

பெண் என்பவள் அடிமையாகவும், வியாபாரப் பொருளாகவும் கருதப்பட்டு வந்த காலத்திலேயே, தனது மோசமான கணவரிடமிருந்து விவகாரத்து பெறும் உரிமையை இஸ்லாம் ஒரு பெண்ணிற்கு வழங்கியுள்ளது. ஆனால், பெண்ணின் இந்த உரிமையை பொருத்தமான வழிமுறைப்படி கிடைக்கச் செய்ய வேண்டும் என வளர்ந்த நாடுகள் கடந்த நூற்றாண்டில் தான் ஒப்புக் கொள்ள ஆரம்பித்துள்ளன. இது மட்டுமின்றி, பெண்ணிற்கு எந்தவொரு அந்தஸ்தும், முக்கியத்துவம் கிடையாது என்று கருதப்பட்டு வந்த காலகட்டத்தில் வாரிசுரிமையை இஸ்லாம் பெற்றுக் கொடுத்துள்ளது. ஐரோப்பாவில் இந்த

உரிமை நிகழ்காலத்தில் தான் கிடைத்துள்ளது.

(பைத்துர் ரஷீத் பள்ளிவாசல், ஹம்பர்க், ஜெர்மனி 2012-ல் ஆற்றிய சொற்பொழிவு- நூல் உலக நெருக்கடியும், அமைதிக்கான வழிமுறையும் பக்கம் 110-111)

சமூகத்தில் அமைதி நிலைபெற உரையாடும்போதும் நீதியுடன் சரியான சொற்களை பேசவேண்டும் என்ற கட்டளை உள்ளது.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَقُولُوا قَوْلًا سَدِيدًا

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சி சரியான(தும் உண்மையானதுமான) வார்த்தையைக் கூறுங்கள்.

(அல் அஹ்ஸாப் : 71)

நீதி நிலைபெறுவதற்கும் உண்மையான சாட்சி செல்வதும் அடிப்படையானதாகும். ஒருவேளை அந்த உண்மை தமது பெற்றோர் மற்றும் நெருங்கிய உறவினர்களுக்கு எதிராகவே இருந்தாலும் சரியே!

அல்லாஹ் கூறுகின்றான்:

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُونُوا قَوَّامِينَ بِالْقِسْطِ شُهَدَاءَ لِلَّهِ
وَلَوْ عَلَىٰ أَنْفُسِكُمْ أَوِ الْوَالِدَيْنِ وَالْأَقْرَبِينَ ۚ
إِنْ يَكُنْ غَنِيًّا أَوْ فَقِيرًا فَاللَّهُ أَوْلَىٰ بِهِمَا ۖ
فَلَا تَتَّبِعُوا الْهَوَىٰ أَنْ تَعْدِلُوا ۚ وَإِنْ تَلْوُوا
أَوْ تُعْرِضُوا فَإِنَّ اللَّهَ كَانَ بِمَا تَعْمَلُونَ خَبِيرًا

நம்பிக்கையாளர்களே! நீங்கள் நீதியை நிலைநாட்டுவதில் நிலைத்திருங்கள். உங்கள் சாட்சியம் உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ நெருங்கிய உறவினர்களுக்கோ எதிராக இருப்பினும் அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுபவர்களாயிருங்கள். (யாருக்காக சாட்சி கூறப்பட்டதோ) அவர் செல்வராயினும், ஏழையாயினும் சரி. அல்லாஹ் அவ்விருவருக்கும் (உங்களை விட) அதிக அளவில் நன்மையை விரும்பக்கூடியவனாவான். நீங்கள் நேர்மையுடன் செயல்படும் பொருட்டு அற்ப ஆசைகளைப் பின்பற்றாதீர்கள். நீங்கள் (உண்மையை) மறைக்கவோ, தட்டிக் கழித்தாலோ நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கு அறிகின்றான்(என்பதை நினைவில் கொள்ளுங்கள்).

(அந்நிஸா: 136)

இந்த வசனத்தின் ஒளியில் ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறியுள்ளார்கள்:

நாம் இந்த அடிப்படையை முழுமையாக ஆராய்ந்தோம் என்றால் நேர்மையற்ற தீர்மானங்களை ஒப்புக் கொள்ளச் செய்வதற்கான வழிமுறைகள் செல்வத்தாலும், படை பலத்தாலும் மேற்கொள்ளப்படுகின்றன; மேலும் அவற்றை தவிர்க்க வேண்டும் என்ற உணர்வு நமக்கு உண்டாகும். இதற்குப் பகரமாக ஒவ்வொரு நாட்டின் பிரதிநிதிகள் மற்றும் தலைவர்கள் களங்கமற்ற மனத் தூய்மையுடன், நேர்மையுடன் சகோதரத்துவ உடன்படிக்கையின் ஆவலுடன் முன்வர வேண்டும். நாம் எல்லா வகையான பாரபட்சங்களையும், வேறுபாடுகளையும் முற்றிலும் களைய வேண்டும். ஏனெனில், அமைதி நிலைபெற இதுவே ஒரே வழியாகும்.

ஒருவேளை நாம் ஐ.நாவின் பொது சபை அல்லது பீஸ் கவுன்சில் போன்றவற்றை ஆராய்ந்தால் அங்கு செய்யப்படும் சொற்பொழிவுகளும், தீர்மானங்களும் மிகவும் புகழவும், பாராட்டவும்படுகின்றன. எனினும், இந்த அங்கீகாரங்கள் அர்த்தமற்றவையாகும். அசல் தீர்ப்புகள் முன்கூட்டியே தீர்மானிக்கப்படுகின்றன.

எனவே எங்கு தீர்ப்புகள் வல்லரசுகளின் அழுத்தம் மற்றும் நிர்ப்பந்தத்தின் காரணத்தாலும் நீதி, நேர்மை மற்றும் உண்மைக்கு எதிராகவும் செய்யப்படுமோ அங்கு அவ்வாறான சொற்பொழிவுகள் வீணானதும், அர்த்தமற்றதும் ஆகும். மேலும் உலகை ஏமாற்றும் வேலை மட்டுமே ஆகும். எனினும், அயர்வடைந்து நாம் நமது முயற்சிகளை விட்டு விட வேண்டும் என்பதும் ஒருபோதும் எனது கருத்து கிடையாது.

இதற்கு மாற்றமாக நாம் நாட்டின் சட்டத் திட்டங்களுக்கு கட்டுப்பட்டவாறு நமது குறிக்கோள் என்னவாக இருக்க வேண்டுமெனில் சூழ்நிலைகளை நாம் எவ்வாறு கையாள வேண்டுமென நாம் அரசாங்கத்திற்கு (பொருத்தமான முறைப்படி) நினைவூட்டியவாறு இருக்க வேண்டும். மேலும், சுயநலவாதிகளுக்கும் நாம் அறிவுறுத்தியவாறு இருக்க வேண்டும். அப்போதுதான் உலக அளவில் அமைதி நிலைபெறும். இந்நிலையில் மட்டுமே அமைதி மற்றும் சமாதானத்தின் பிறப்பிடமாக உலகை நாம் ஆக்க இயலும். இதுவே நம் அனைவரின் விருப்பமும் கூட!

(ஒன்பதாவது அமைதி கருத்தரங்கம், லண்டன், மார்ச்ச 24, 2012, சொற்பொழிவு - உலக நெருக்கடியும் அமைதிக்கான வழிமுறையும் பக்கம் 42)

வியாபாரத்தில் அமைதி நிலைபெற முழுமையாக அளக்க வேண்டும்; அதில் நேர்மையுடன் செயல்பட வேண்டும்.

وَلَا تَقْرَبُوا مَالَ الْيَتِيمِ إِلَّا بِالَّتِي هِيَ أَحْسَنُ
حَتَّىٰ يَبْلُغَ أَشُدَّهُ ۖ وَأَوْفُوا الْكَيْلَ
وَالْمِيزَانَ بِالْقِسْطِ ۖ لَا نُكَلِّفُ نَفْسًا إِلَّا وُسْعَهَا ۖ
وَإِذَا قُلْتُمْ فَاعْدِلُوا وَلَوْ كَانَ ذَا قُرْبَىٰ ۖ وَبِعَهْدِ
اللَّهِ أَوْفُوا ۚ ذَٰلِكُمْ وَصَّاكُمْ بِهِ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ

நீங்கள் அனாதையின் உடைமையை அவர் தமது வாலிபப் பருவத்தை அடையும் வரை முறையின்றி நெருங்காதீர்கள். மேலும் அளவையையும், நிறுவையையும் முழுமையாகக் கொடுப்பதில் நேர்மையாக நடந்து கொள்ளுங்கள். நாம் தகுதிக்கு அப்பாற்பட்ட சுமையை எவர்க்கும் வழங்குவதில்லை. நீங்கள் பேசும் பொழுது அது உறவினர் (குறித்து) ஆக இருப்பினும் நேர்மையைக் கடைபிடியுங்கள். மேலும், அல்லாஹ்விடம் செய்த உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். நீங்கள் கவனத்தில் கொள்ளும் பொருட்டு அவன் உங்களுக்கு இதனை வலியுறுத்திக் கூறுகின்றான்.

(அல் அன்ஆம்: 153)

அல்லாஹ் திருக்குர்ஆனில் எதிரிகளுடனும் நேர்மையுடன் நடந்து கொள்ள கட்டளையிட்டுள்ளான். நீதி, நேர்மை பற்றி எவ்வளவு ஒப்பற்ற உதாரணம் எனில் வேறு எந்தவொரு புத்தகமும் இதற்கு நிகராக கூற இயலாது.

அல்லாஹ் கூறுகின்றான்:

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُونُوا قَوَّامِينَ لِلَّهِ شُهَدَاءَ بِالْقِسْطِ ۖ
وَلَا يَجْرِمَنَّكُمْ شَنَآنُ قَوْمٍ عَلَىٰ أَلَّا تَعْدِلُوا ۚ
اعْدِلُوا هُوَ أَقْرَبُ لِلتَّقْوَىٰ ۖ
وَاتَّقُوا اللَّهَ ۚ إِنَّ اللَّهَ خَبِيرٌ بِمَا تَعْمَلُونَ

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்காக நீங்கள் நேர்மையான சாட்சி கூறுபவர்களாக நிலைத்து நில்லுங்கள். ஒரு சமுதாயத்தின் பகைமை உங்களை நீதியுடன் நடக்காதவாறு தூண்ட வேண்டாம். நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இதுதான் இறையச்சத்திற்கு மிக நெருங்கியது. அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிகிறான்.

( அல்மாயிதா: 9)

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறுகின்றார்கள்:

இதுவே சுற்றுச் சூழலில் அமைதியை நிலைநாட்டுவதற்கான போதனையாகும். உங்கள் எதிரியின் விவகாரங்களில் கூட நீதியை கைவிடாதீர்கள் என (இறைவன்) கூறியுள்ளான். இந்தப் போதனையின்படி செயல் அமைந்திருந்தது என்று இஸ்லாத்தின் ஆரம்ப வரலாறு கூறுகின்றது. மேலும், நீதி நேர்மையின் அத்தனை அம்சங்களும் நிறைவேற்றப்பட்டன. மக்கா வெற்றிக்குப் பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமக்கு கொடும்

வேதனையளித்தவர்களிடம் கூட பழிவாங்கவில்லை என்ற உண்மைக்கு வரலாறு சாட்சி பகர்கின்றது!

அன்னார் (ஸல்) அந்த எதிரிகளை மன்னித்தது மட்டுமல்லாமல் நீங்கள் உங்கள் மார்க்கத்திலேயே நிலைத்திருக்கலாம் என்ற அனுமதியும் வழங்கினார்கள். (பிரிட்டிஷ் பாராளுமன்றம், ஹவுஸ் ஆஃப் காமர்ஸ் என்ற இடத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு, அக்டோபர் 22, 2008, நூல் - உலக நெருக்கடியும் அமைதிக்கான வழிமுறையும் பக்கம் 14)

இஸ்லாத்தில் ஆட்சியாளர்கள் பொதுமக்களிடம் நீதியுடன் நடக்க வேண்டும் என்ற கட்டளை உள்ளது. மேலும், ஆட்சியாளர்களுக்குரிய அமானிதத்தை பொதுமக்கள் தகுதியானவர்களிடம் மட்டுமே ஒப்படைக்க வேண்டும் எனவும், அவர்கள் தமது ஆட்சியாளர்களின் நல்ல கட்டளைகளுக்கு கீழ்படிய வேண்டும் எனவும் இஸ்லாம் கூறுகின்றது.

அல்லாஹ் கூறுகின்றான்:

اِنَّ اللّٰهَ يَاْمُرُكُمْ اَنْ تُؤَدُّوا الْاَمٰنٰتِ اِلٰٓى اَهْلِهَا ۙ
وَاِذَا حَكَمْتُمْ بَيْنَ النَّاسِ اَنْ تَحْكُمُوْا بِالْعَدْلِ ۗ
اِنَّ اللّٰهَ نِعِمَّا يَعِظُكُمْ بِهٖ ۗ اِنَّ اللّٰهَ كَانَ سَمِيْعًۢا بَصِيْرًا

நீங்கள் அமானிதங்களை (நம்பி ஒப்படைக்கப்பட்டவற்றை) அவற்றிற்குத் தகுதியானவர்களிடமே ஒப்படையுங்கள். நீங்கள் மக்களுக்கிடையில் தீர்ப்பு வழங்கும்போது நீதியுடன் தீர்ப்பு வழங்க வேண்டுமென்றும், நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகின்றான். அல்லாஹ் உங்களுக்கு அறிவுரை கூறுகின்றது எதுவோ நிச்சயமாக அதுவே மிகவும் சிறந்தது. நிச்சயமாக அல்லாஹ் நன்கு கேட்பவனும், பார்ப்பவனுமாவான்.

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اَطِيْعُوا اللّٰهَ وَاَطِيْعُوا الرَّسُوْلَ
وَاُولِي الْاَمْرِ مِنْكُمْ ۚ فَاِنْ تَنَازَعْتُمْ فِيْ شَيْءٍ
فَرُدُّوْهُ اِلَى اللّٰهِ وَالرَّسُوْلِ اِنْ كُنْتُمْ تُؤْمِنُوْنَ
بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ ۗ ذٰلِكَ خَيْرٌ وَّاَحْسَنُ
تَاْوِيْلًا

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு நடவுங்கள். இத்தூதருக்கும், உங்களுடைய அதிகாரிகளுக்கும் கட்டுப்பட்டு நடங்கள். பின்னர் உங்களுக்குள் ஏதாவது ஒன்றில் தர்க்கம் ஏற்பட்டால் நீங்கள் அல்லாஹ்விடத்தும், அவனது தூதரிடத்தும் இறுதி நாளிடத்தும் நம்பிக்கை கொண்டவர்களாயின் அதனை அல்லாஹ்விடமும், இத்தூதரிடமும் கொண்டு செல்லுங்கள்.இது சிறந்ததும், மிக்க நல்ல முடிவைத் தருகின்றதுமாக இருக்கும். (அந்நிஸா: 59 - 60)

மார்க்கங்களுக்கிடையே நீதியை நிலைநாட்ட அடிப்படையான வழிமுறை என்னவெனில், . மார்க்கத்தில் எந்தவொரு பலவந்தமும் இல்லை என்பதாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்:

لَآ اِكْرَاهَ فِى الدِّيْنِ ۙ قَدْ تَّبَيَّنَ الرُّشْدُ مِنَ الْغَيِّ ۚ
فَمَنْ يَّكْفُرْ بِالطَّاغُوْتِ وَيُؤْمِنْۢ بِاللّٰهِ فَقَدِ
اسْتَمْسَكَ بِالْعُرْوَةِ الْوُثْقٰى ۗ
لَا انْفِصَامَ لَهَا ۗ وَاللّٰهُ سَمِيْعٌ عَلِيْمٌ

மார்க்கத்தில் எவ்வித கட்டாயமுமில்லை. (ஏனெனில்) நிச்சயமாக நேர்வழிக்கும், தவறான வழிக்கும் இடையிலுள்ள வேறுபாடு மிகத் தெளிவாகி விட்டது. எனவே நன்மைகளைச் செய்ய விடாது தடுக்கக் கூடியவனை நிராகரித்து அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறவர் அறுந்து விடாத மிகவும் உறுதியுள்ள நம்பத் தகுதந்த ஒன்றை வலுவாகப் பற்றிக் கொண்டார். அல்லாஹ் நன்கு செவியேற்றபவனும் நன்கு அறிபவனுமாவான். (அல்பக்ரா :257)

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: இஸ்லாம் வாளின் வலுவால் பரவியது என்ற ஆட்சேபனையை மட்டும் இந்த வசனம் மறுக்கவில்லை. மாறாக, ஈமான் கொள்வது அடியாருக்கும் அவரது இறைவனுக்கும் இடைப்பட்ட விஷயமாகும். இதில் எவரும் தலையிட முடியாது என்று முஸ்லிம்களுக்கு கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு மனிதனுக்கும் தமது மார்க்கத்திற்கேற்ப வாழ்க்கையை அமைக்கவும், இறை வணக்கம் செய்யவும் அனுமதியுள்ளது. எனினும், ஒருவேளை மத ரீதியிலான செயல்கள் பிறருக்கு இடையூறு விளைவித்தாலோ நாட்டின் சட்டங்களுக்கு புறம்பானாலோ சட்டத் திருத்தம் செய்பவர்கள் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கலாம். ஏனெனில், மத ரீதியாக ஏதேனும் கொடுமை செய்யப்பட்டால் அவை இறைத் தூதர்கள் கொண்டு வந்த போதனையாக ஒருபோதும் இருக்காது. வட்டார மற்றும் உலக அளவில் அமைதி நிலைபெறுவதற்கு இவையோர் அடிப்படைக் கட்டளையாகும். ஒருவேளை ஏதாவதொரு சமுதாயம், பிரிவு அல்லது அரசு இன்று உங்களுடைய மார்க்கக் கடமைகளை நிறைவேற்றுவதில் தடையாகிவிட்டால் பின்னர் வருங்காலத்தில் நிலைமைகள் உங்கள் உரிமையில் மாறிவிடும்போது அவர்கள் மீது உங்கள் உள்ளத்தில் பகையோ வெறுப்போ வைக்க வேண்டாம் என இஸ்லாம் நமக்கு போதிக்கின்றது. உங்களுக்கு ஒருபோதும் பழிவாங்கும் எண்ணம் வரக் கூடாது. மாறாக, நீதி நேர்மையை நிலைநாட்டுவதே உங்கள் கடமையாகும். (வரலாற்று சிறப்பு மிக்க சொற்பொழிவு 22, அக்டோபர் 2008,பிரிட்டிஷ் பாராளுமன்றம், ஹவுஸ் ஆஃப் காமர்ஸ், நூல் - உலக நெருக்கடியும், அமைதிக்கான வழிமுறையும் பக்கம் 14)

திருக்குர்ஆனில் நாடுகளுக்கு மத்தியில் அமைதி நிலைபெறுவதற்கு உலகளாவிய நீதி, நேர்மை குறித்து இவ்வாறு கட்டளை உள்ளது.

وَاِنْ طَآىِٕفَتٰنِ مِنَ الْمُؤْمِنِيْنَ اقْتَتَلُوْا فَاَصْلِحُوْا بَيْنَهُمَا ۚ
فَاِنْۢ بَغَتْ اِحْدٰىهُمَا عَلَى الْاُخْرٰى فَقَاتِلُوا
الَّتِيْ تَبْغِيْ حَتّٰى تَفِيْٓءَ اِلٰٓى اَمْرِ اللّٰهِ ۚ
فَاِنْ فَاۤءَتْ فَاَصْلِحُوْا بَيْنَهُمَا بِالْعَدْلِ وَاَقْسِطُوْا ۗ
اِنَّ اللّٰهَ يُحِبُّ الْمُقْسِطِيْنَ

நம்பிக்கையாளர்களுள் இரு பிரிவினர்கள் தங்களுக்குள் போர் செய்தால் அவ்விரண்டு பிரிவினர்களுக்கிடையே சமாதானம் செய்து வையுங்கள். இதன் பின்னர் அவற்றுள் ஒன்று மற்றொன்றிற்கு எதிராக வரம்பு மீறினால், வரம்பு மீறுகின்ற பிரிவினர், அல்லாஹ்வின் கட்டளையின்பால் திரும்பி வரும் வரை நீங்கள் அவர்களை எதிர்த்துப் போர் செய்யுங்கள். பின்னர் அவர்கள் திரும்பி வந்து விட்டால் அவர்களுக்கிடையே நியாயத்துடன் சமாதானம் செய்து நீதமாக நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீதமாக நடந்து கொள்பவர்களை நேசிக்கின்றான். (அல் ஹுஜ்ராத்: 10)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள்: இந்த போதனை முஸ்லிம்களுக்கு உரியதாக இருப்பினும் இதை பேணுவதால் உலக அமைதிக்கான அடித்தளமிட முடியும். அமைதியை நிலைநாட்டுவதற்கு நீதியை நிலைநாட்டுவது மிகவும் அவசியமாகும் என ஆரம்பத்திலேயே விளக்கமாக கூறப்பட்டது. மேலும், நீதியை நிலைநாட்டிய பிறகும் அமைதியை நிலைநாட்டும் முயற்சிகள் தோல்வியடைந்தால் அநீதி இழைக்கும் எதிர் தரப்பினருடன் அனைவரும் சேர்ந்து போரிட வேண்டும். அநீதி இழைப்பவர்கள் அமைதியை நிலைநாட்ட பாடுபடாத வரை இந்தப் போர் தொடரும். எனினும், அநீதி இழைப்பவர்கள் கொடுமையை நிறுத்தி விட்டால் பிறகு பழிவாங்குவதற்கு சாக்குபோக்குகளை தேடக் கூடாது என்பது நீதியின் எதிர்பார்ப்பாகும்.

மேலும், விதவிதமான கட்டுப்பாடுகளை விதிக்கக் கூடாது. அநீதி இழைப்பவர்கள் மீது பார்வை வைப்பதுடன் அவர்களின் நிலைமைகளை சிறப்பாக்குவதற்காகவும் முயற்சி செய்ய வேண்டும்.

இன்று சில உலக நாடுகளில் நிலவும் இந்த அமைதியற்ற நிலையை முடிவுக்கு கொண்டு வருவதற்காக, மேலும், துரதிஷ்டவசமாக அவற்றில் சில முஸ்லிம் நாடுகளில் இந்த நிலை தெளிவாக இருக்கின்றது; எனவே வீட்டோ அதிகாரம் பெற்றிருக்கின்ற அந்த நாடுகள் சரியான முறையில் நீதி நிலைநாட்டப்படுகின்றதா?என்று குறிப்பாக ஆய்வு செய்ய வேண்டும். உதவி தேவைப்படும்போது பலம் படைத்த நாடுகளே உதவிக்கு அழைக்கப்படுகின்றன. ( சொற்பொழிவு அக்டோபர் 22, 2008, பாராளுமன்றம் ஹவுஸ் ஆஃப் காமர்ஸ், நூல் -உலக நெருக்கடியும், அமைதிக்கான வழிமுறையும் - பக்கம் 17)

**உலக நாடுகளுக்கு மத்தியில் அமைதி மற்றும் நீதி**

இந்த முக்கியமான கட்டளையை மேலும் விளக்கியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த வசனத்தில் உலக நாடுகளுக்கு மத்தியில் சமாதானம் நிலைபெறுவதற்கு பின்வரும் நுட்பமான வழிமுறை கூறப்பட்டுள்ளது: முதன் முதலில் இரு சமுதாயங்களுக்கிடையில் சண்டை, குழப்பங்களின் அறிகுறிகள் தென்பட்டால் உடனே இன்னொரு சமுதாயம் ஒரு தரப்பிற்கு ஆதரவாக செயல்படுவதற்குப் பகரமாக இரு சமுதாயங்களுமே அவர்களுக்கிடையில் சண்டைக்கான தீர்வு காண்பதற்கு அறிவுறுத்த வேண்டும். ஒருவேளை அவர்கள் ஒப்புக் கொண்டால் சண்டை தீர்ந்து விடும்.எனினும், ஒருவேளை ஒரு தரப்பினர் ஒப்புக் கொள்ளவில்லையென்றால் பிறகு இரண்டாவது நடவடிக்கையாக இதனை எடுக்க வேண்டும். அதாவது, எஞ்சிய அனைத்து சமுதாயங்களும் சேர்ந்து அவர்களுடன் போரிட வேண்டும். எல்லா சமுதாயத்தையும் ஒரு சமுதாயத்தால் எதிர் கொள்ள முடியாது என்பது வெளிப்படை ஆகும். எனவே அவர்கள் விழிப்படைந்து, சமாதானத்திற்கு விரைவில் தயாராக வாய்ப்புள்ளது. எனவே அவர்கள் சமாதானத்திற்கு தயாராகிவிட்டால் மூன்றாவது நடவடிக்கையாக இதனை எடுக்க வேண்டும். அதாவது எந்த இரண்டு சமுதாயங்களுக்கிடையிலான சண்டையின் காரணமாக போர் ஆரம்பித்ததோ அவர்களுக்கிடையே சமாதானம் செய்து வைக்க வேண்டும். அதாவது அப்போது தம்மையே எதிர் தரப்பாக்கி தாமே உடன்படிக்கைகள் செய்யக் கூடாது. மாறாக, தமது பழைய உடன்படிக்கைகளுடன் தான் இருக்க வேண்டும். எந்தக் காரணத்தால் போர் மூண்டதோ அந்தச் சண்டையை மட்டுமே தீர்க்க வேண்டும். அந்தப் போரைக் கொண்டு புதிய நிபந்தனைகளை வைத்து என்றென்றும் குழப்பம் ஏற்பட அடித்தளம் அமைக்கக் கூடாது.

நான்காவதாக, இந்த விஷயத்தை கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது உடன்படிக்கை நீதியை அடிப்படையாக கொண்டிருக்க வேண்டும். ஒரு பிரிவு எதிர்த்ததால் அதற்கு எதிராக தீர்ப்பளித்து விடக் கூடாது. மாறாக, போர் என்ற போதிலும் கூட உங்களை நீங்கள் நடுவர் தரப்பு வரிசையிலேயே வைக்க வேண்டும். எதிரிகளாக ஆக்கிக் கொள்ளக் கூடாது. (அஹ்மதிய்யத், அதாவது ஹக்கீகி இஸ்லாம், அன்வாருல் உலூம், தொகுதி 8, பக்கம் 314)

தமிழாக்கம்
முஅல்லிம் J.நாஸிர் அஹ்மத்

## திருக்குர்ஆனின் சிறப்புகள்

திருக்குர்ஆனின் ஒவ்வொரு கட்டளையும் நோக்கங்களால் நிரம்பியது என்று திருக்குர்ஆனின் சிறப்புகளை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆனில் இந்த சிறப்பு உள்ளது; அதன் ஒவ்வொரு கட்டளையும் நோக்கங்களாலும், சீர்திருத்தத்தாலும் ததும்பியுள்ளது. அதாவது, நோக்கங்களாலும் ,சீர்திருத்தத்தாலும் நிறைந்துள்ளது. அதற்கு ஒரு நோக்கம் இருக்கிறது. எனவே, திருக்குர்ஆனில் ஆங்காங்கே அறிவுடனும், புரிதலுடனும், புத்திசாலித்தனமாக சிந்தித்தும் ஈமானுடன் செயல்படுங்கள் என்று வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. ஃபகாஹத் புத்திசாலித்தனமாக சிந்தித்து செயல்படுங்கள் என்பதாகும். மேலும், ஈமானுடன் செயல்படுங்கள் என்று உள்ளது. ஈமானும் அவசியமானது.

திருக்குர்ஆனுக்கும் மற்ற வேதங்களுக்கும் இதுதான் வித்தியாசம் ஆகும். வேறு எந்த வேதமும் தனது போதனையை அறிவு மற்றும் ஆழ்ந்து சிந்தித்தல் எனும் நுணுக்கமான சுதந்திரமான ஆராய்ந்து பார்த்தலுக்கு முன்னால் இடுவதற்கு துணியவில்லை.

எவர் அதைப் புரிவாரோ அதன்படி செயல்படுவாரோ அவர் அல்லாஹ்வின் அருட்களைப் பெறவும் செய்வார். ஆனால், இதை நினைவிற் கொள்ள வேண்டும்! அதன் இரகசியங்களும் அதன் ஆழங்களும் தூய மக்களுக்கே திறக்கின்றன. மேலும், அதற்காக தூய மக்களுடன் இருக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே அந்த நபர் ஆவார்கள். அல்லாஹ் வழங்கிய ஞானத்தால் பலன் பெற்று, அன்னார் அடுத்தவர்களுக்கு எடுத்துரைத்தவற்றை நாம் பார்க்க வேண்டும். ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். அதே விளக்கவுரைகள் தான் பின்னர் அடுத்தும், அன்னார் வழங்கிய ஞானத்திற்கு ஏற்ப, அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இலக்கியங்களில் எடுத்துரைக்கப்படுகின்றன.

திருக்குர்ஆனுக்கு திக்ர் என்று ஏன் பெயர் வைக்கப்பட்டுள்ளது? என்பது பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆனுக்கு திக்ர் என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. எதனால் என்றால், அது மனிதனின் உட்புற ஷரீஅத்தை நினைவூட்டுகிறது.

பிறகு அன்னார் (அலை) கூறினார்கள்: திருக்குர்ஆன் புதிய போதனையை ஒன்றும் கொண்டு வரவில்லை. மாறாக, பல்வேறு ஆற்றல்கள் வடிவில் மனிதனுக்குள் வைக்கப்பட்டுள்ள அந்த உட்புற ஷரீஅத்தை நினைவூட்டுகிறது. இரக்கம், தியாகம், வீரம், நிர்பந்தம், கோபம், சிக்கனம் முதலியவை. சுருக்கமாக மனித இயல்பின் சீர்திருத்தத்திற்கு தேவையான போனையை திருக்குர்ஆன் வழங்கியுள்ளது.

(குத்பா பேருரை 18.05.2023- ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள்)

* * * * *

# முஸ்லிம் அல்லாதவர்களுடன் சகிப்புத் தன்மை மற்றும் சிறந்த முறையில் நடந்து கொள்வது தொடர்பாக திருக்குர்ஆன் வழங்கும் போதனைகள்

(முரப்பி ஸலீக் அஹ்மத் நாயிக், நஸாரத் உலியா, காதியான்)

அல்லாஹ் மிகவும் தெளிவான வார்த்தைகளில் கருத்துச் சுதந்திரம் மற்றும் மார்க்க சுதந்திரத்தை அறிவித்துள்ளான். மேலும் இந்த அறிவிப்பின் மூலமாக உலகம் இருக்கும் வரை சகிப்புத் தன்மைக்கான எப்படிப்பட்ட ஓர் உதாரணத்தை இறைவன் நிலைநாட்டியுள்ளான் என்றால் இதன் பிறகு எந்த ஒரு சந்தேகத்திற்கும் இடமில்லை. அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

لَكُمْ دِيْنُكُمْ وَلِيَ دِيْنِ

(ஏனெனில்) உங்கள் மார்க்கம் உங்களுக்கு (ஒரு வழிமுறையினையும்) என் மார்க்கம் எனக்கு (ஒரு வழிமுறையினையும்) (ஏற்படுத்தி) உள்ளது. (திருக்குர்ஆன் 109: 7)

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்:

لَآ اِكْرَاهَ فِي الدِّيْنِ

மார்க்கத்தில் எவ்வித கட்டாயமும் (ஆகுமானதும்) இல்லை. (திருக்குர்ஆன் 2:257)

ஹஸ்ரத் மஸீஹே மவ்வூத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

மார்க்க விவகாரங்களில் சுதந்திரம் இருக்க வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான்:

لَآ اِكْرَاهَ فِي الدِّيْنِ

அதாவது மார்க்கத்தில் எவ்வித பலவந்தமும் இல்லை. இந்த மாதிரியான சொற்கள் இன்ஜீலில் எங்குமே கிடைக்கப் பெறாது. போருக்கான ஆணிவேர் என்னவாக இருந்தது? இதனை புரிவதில் அவர்கள் தவறிழைத்து விட்டார்கள். போருக்கான கட்டளையாக இருந்திருந்தால் பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் 13 வருட காலம் வீணாகியிருக்குமே. (நவூதுபில்லாஹ்). அன்னார் (ஸல்) மக்காவில் வாளை ஏந்தவில்லையே! உண்மை என்னவென்றால் போர் புரிபவர்களுடன் மட்டுமே போரிட வேண்டும் என்பதே கட்டளையாகும். போரை ஆரம்பித்தல் என்பது இஸ்லாத்தின் கொள்கையாக எப்போதுமே இருந்ததில்லை. போருக்கான காரணம் என்ன? என்பதை ظُلِمُوا என்று இறைவனே கூறியுள்ளான். அதாவது அநீதி இழைக்கப்பட்டதன் விளைவாக இருந்தது.

இறைவனின் பார்வையில் இந்த மக்கள் அநீதிக்கு ஆளாகியிருந்தார்கள். எனவே அவர்களுக்கு போர் புரிவதற்கான அனுமதியை வழங்கினான். இப்பொழுது வாளை ஏந்துவதற்கான நேரம். எனவே மக்களை கட்டாயப்படுத்தி வாளின் மூலமாக முஸ்லிம்களாக ஆக்குங்கள் என்று இப்படிப்பட்ட கட்டளையை அவன் ஒருபோதும் தந்ததில்லை. மாறாக, இவ்வாறு கூறினான்: அதாவது நீங்கள் அநீதி இழைக்கப்பட்டு உள்ளீர்கள். இப்பொழுது எதிர்த்து நில்லுங்கள். அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு உயிரை பாதுகாத்துக் கொள்வதற்கும், தற்காத்து கொள்வதற்கும் அனைத்து சட்டங்களும் அனுமதி அளிக்கிறன.

நாம் வரலாற்றை சற்று உற்று நோக்கிப் பார்க்கும்போது நமக்கு தெரிய வருவது என்னவென்றால், இது வெறும் திருக்குர்ஆனின் வார்த்தையாக அறிவிக்கப்படவில்லை. மேலும், இஸ்லாம் போதனையை மட்டும் முன் வைக்கவில்லை. மாறாக, இதனை செயல்படுத்த அரசாங்கங்களுக்கு நிரந்தர சட்டமாக சேர்ப்பதற்கு வழிகாட்டியுள்ளது. இஸ்லாமிய அரசாங்கத்தின் கீழ் முஸ்லிம் அல்லாதவர்கள் சிறுபான்மையாகவும் அல்லது பெரும்பான்மையாகவும் இருந்தாலும் கூட அவர்கள் அனைவரின் கண்ணியத்திற்கு உத்திரவாதம் மற்றும் அவர்களின் உயிர் மற்றும் செல்வத்தின் பாதுகாப்பும் இஸ்லாமிய அரசாங்கத்தின் அடிப்படை கடமையாக ஆக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமிய அரசின் கீழ் வசிக்கக் கூடிய அனைத்து குடிமக்களுக்கும் அவர் எந்த ஒரு மார்க்கத்தை பின்பற்றக் கூடியவராகவும் இருந்தாலும் கூட எந்தவொரு பாகுபாடும் இன்றி அவர் தன்னுடைய மதத்தின் கொள்கையை முழுமையாக பின்பற்ற சுதந்திரம் அளிக்கப்படுவார். மேலும், அவர்கள் மதத்தின் விவகாரங்களில் எந்தவொரு பலவந்தத்திற்கும் உள்ளாக்கப்பட மாட்டார்கள். பின்னர், மார்க்க விஷயத்தில் அனைத்து குடிமக்களுக்கும் எந்தவொரு மத ரீதியிலான பாகுபாடும் இன்றி முழுமையான சுதந்திரம் அளிக்கப்படுகின்றது.

அல்லாஹ் திருக்குர்ஆனில் மற்றோர் இடத்தில் இவ்வாறு கூறினான்:

وَقُلِ الْحَقُّ مِنْ رَّبِّكُمْ فَمَنْ شَآءَ فَلْيُؤْمِنْ وَّمَنْ شَآءَ فَلْيَكْفُرْ

பொருள்: நீர் கூறுவீராக. இந்த உண்மை உங்கள் இறைவனிடமிருந்து உள்ளதாகும். எனவே எவர் விரும்புகிறாரோ அவர் ஏற்றுக் கொள்ளட்டும். எவர் விரும்புகின்றாரோ அவர் நிராகரித்துக் கொள்ளட்டும். (திருக்குர்ஆன் 18:30)

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: மார்க்க சுதந்திரத்தைப் பற்றி இப்பொழுது நான் இரண்டு வசனங்களின் விளக்கத்தை கூறுவேன். முதலாவதாக சூரா அல்கஹ்ஃப் உடைய வசனம் ஆகும். இதனைப் பற்றி சுருக்கமாக நான் ஏற்கனவே கூறிவிட்டேன். இப்பொழுது இரண்டாவது வசனத்தை எடுத்துக் கொள்கின்றேன். அது சூரா யூனுஸ் உடைய வசனம் ஆகும்.

قُلْ يٰۤاَيُّهَا النَّاسُ قَدْ جَآءَكُمُ الْحَقُّ مِنْ رَّبِّكُمْ

فَمَنِ اهْتَدٰى فَاِنَّمَا يَهْتَدِيْ لِنَفْسِهٖ وَمَنْ ضَلَّ

فَاِنَّمَا يَضِلُّ عَلَيْهَا وَمَاۤ اَنَا عَلَيْكُمْ بِوَكِيْلٍ

பொருள்: தூதரே! நீர் (அவர்களிடம்)கூறுவவீராக)மக்களே! உங்களிடம் உங்கள் இறைவனிடமிருந்து உண்மை வந்து விட்டது.(திருக்குர்ஆன் 10:109)

ஏனெனில், முதலில் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை நோக்கி தான் கூறப்படுகிறது. பிறகுதான் அன்னாரை பின்பற்றுபவர்களுக்கு கூறப்படுகின்றது. ஏனெனில், திருக்குர்ஆனின் போதனைகள் கியாமத்து வரைக்கும் உள்ளது. எனவேதான் இந்தக் கட்டளை அன்னார் (ஸல்) வாயிலாக அன்னாரை பின்பற்றுபவர்களுக்கும் மற்றும் பிறகு அனைத்து மனிதர்களுக்கும் கியாமத் வரைக்கும் கிடைத்துள்ளது.

கூறினான்: قَدْ جَآءَكُمُ الْحَقُّ مِنْ رَّبِّكُمْ .

உங்கள் இறைவனிடமிருந்து ஒரு முழுமையான உண்மை இறக்கப்பட்டுள்ளது.

فَمَنِ اهْتَدٰى

இப்பொழுது எவர் தன்னுடைய விருப்பத்திற்கு இணங்க அவன் கூறிய விஷயத்தை தேர்ந்தெடுக்கின்றாரோ

فَاِنَّمَا يَهْتَدِيْ لِنَفْسِهٖ

அவர் தன்னுடைய உயிரின் பயனுக்காகவே நேர்வழியினை தேர்ந்தெடுத்துள்ளார். எனவே தான் மனிதனுக்கு இந்த விஷயத்தில்

சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. அதாவது தன்னுடைய விருப்பத்திற்கு இணங்க நேர்வழியினை அவன் தேர்ந்தெடுக்கின்றான். ஒருவேளை அவன் தேர்ந்தெடுக்கவில்லை என்றால் அவன் மீது இறைவன் மற்றும் அவனது தூதர் புறமிருந்து எந்த ஒரு பலவந்தத்திற்கும் ஆளாக்கப்பட மாட்டார். மாறாக,

وَمَنْ ضَلَّ فَاِنَّمَا يَضِلُّ عَلَيْهَا

எவர் இதிலிருந்து வழிதவறி விடுகிறாரோ அவரின் வழிதவறுதலின் விளைவு அவரது வாழ்க்கை மீது உண்டாகும். எனவேதான் அனைத்து மனிதனின் கடமையாகும். அதாவது அவன் நன்கு சிந்தித்த பிறகு ஏதேனும் முடிவெடுக்க வேண்டும்.

எனவேதான் மக்களே! உங்களுக்கு மார்க்க விஷயத்தில் சுதந்திரம் அளிக்கப்படுகின்றது என்ற இந்த அறிவிப்பை இறைவன் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் நாவின் மூலமாகவே செய்திருக்கின்றான். நேர்வழியின் பக்கம் செல்ல வேண்டுமா அல்லது வழிதவறியவர்களின் பக்கம் செல்ல வேண்டுமா? என்று உங்களுடைய முடிவை நீங்கள் தான் எடுக்க வேண்டும். நான் உங்களுடைய பொறுப்பாளர் அல்ல. என் மீது உங்களுடைய எந்தவொரு பொறுப்பையும் சுமத்தவில்லை.

மேலும், திருக்குர்ஆனில் அல்லாஹ் இறைத் தூதர் (ஸல்) அவர்களை நோக்கி அனைத்து முஸ்லிம்களையும் எச்சரிக்கை செய்துள்ளான்:

وَلَوْ شَآءَ رَبُّكَ لَاٰمَنَ مَنْ فِي الْاَرْضِ كُلُّهُمْ جَمِيْعًا ؕ

اَفَاَنْتَ تُكْرِهُ النَّاسَ حَتّٰى يَكُوْنُوْا مُؤْمِنِيْنَ

உமது இறைவன் (கட்டாயமாக) விரும்பியிருந்தால் பூமியிலுள்ளவர்கள் எல்லாருமே ஒன்றாக நம்பிக்கை கொண்டிருப்பர். (எனவே இறைவனே கட்டாயப்படுத்தாதிருக்கும்போது) மக்கள் நம்பிக்கை கொள்வதற்காக நீர் அவர்களைக் கட்டாயப்படுத்துவீரா? (திருக்குர்ஆன் 10: 100)

எனவே திருக்குர்ஆன் பலவந்தம் மற்றும் மார்க்க கொடுங்கோன்மைக்கு முழுமையாக முற்றுப் புள்ளி வைத்துள்ளது. மேலும், மார்க்க சுதந்திரம் பாராபாட்சமற்ற தன்மை மற்றும் சுய சுதந்திரத்தின் அறிவை உயர்த்தி கூறியுள்ளது. மேலும் தன்னுடைய முன்உதாரணத்திலிருந்து இதனை நிரூபித்துக் காட்டியுள்ளது. அதாவது ஒவ்வொரு நபருக்கும் தன்னுடைய மார்க்க விஷயங்களில் முழுமையான சுதந்திரம் உள்ளது என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் ஷரீஅத்தின் அடிப்படையில் அநீதிகளுக்கு பகரமாக மன்னிப்பிற்கு முன்னுரிமை வழங்கினார்கள். மேலும், நீதியை நிலைநாட்ட பகைமையை கொண்டு வர வேண்டாம் என்று கூறியுள்ளார்கள்.

திருக்குர்ஆன் மார்க்க சுதந்திரம் மற்றும் தனக்கான சுதந்திரத்தை தெளிவான சொற்களில் நேர்வழி காட்டியுள்ளது. மேலும் பிறிதோர் இடத்தில் அனைத்து விதமான மார்க்க வன்முறை மற்றும் கட்டாயப்படுத்துதல் மற்றும் அநீதியை விரும்பவில்லை. இதற்கான செயல் ரீதியிலான வடிவத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும் இஸ்லாமிய ஷரீஅத்தின் போதனைக்கு ஏற்றவாறும் எந்நேரமும் அநீதிக்கான பதிலடி மன்னிப்பு என்ற உயர்ந்த உதாரணத்தை அன்னார் (ஸல்) நிலைநாட்டியுள்ளார்கள்.

திருக்குர்ஆன் மீண்டும் மீண்டும் அநீதி மற்றும் கொடுமைகளிலிருந்து தவிர்ந்திருப்பதற்கான அறிவுரை வழங்குகின்றது. அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

وَلَا يَجْرِمَنَّكُمْ شَنَاٰنُ قَوْمٍ اَنْ صَدُّوْكُمْ

عَنِ الْمَسْجِدِ الْحَرَامِ اَنْ تَعْتَدُوْا ۘ

وَتَعَاوَنُوْا عَلَى الْبِرِّ وَالتَّقْوٰى ۖ

وَلَا تَعَاوَنُوْا عَلَى الْاِثْمِ وَالْعُدْوَانِ ۖ

وَاتَّقُوا اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ شَدِيْدُ الْعِقَابِ

ஒரு சமுதாயத்தினர் உங்களை புனிதப் பள்ளிக்குச் செல்ல விடாது தடுத்தார்கள் என்ற பகைமையினால் வரம்பு மீறாதீர்கள். நேர்மையிலும், இறையச்சத்திலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவுங்கள். பாவம், வரம்பு மீறுதல் ஆகியவற்றில் ஒருவருக்கொருவர் உதவாதீர்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ்வின் தண்டனை கடினமானது. (திருக்குர்ஆன் 5: 3)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வே திருக்குர்ஆனில் கட்டளையிடுகின்றான். அதாவது உலகில் சமாதானத்திற்கான கருவூலம் நீதி என்பதாகும். மேலும் நீதியின் தரம் உங்களிடம் எவ்வளவு இருக்க வேண்டும் என்று அல்லாஹ் கூறுகின்றான்:

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُوْنُوْا قَوّٰمِيْنَ لِلّٰهِ شُهَدَآءَ بِالْقِسْطِ

وَلَا يَجْرِمَنَّكُمْ شَنَاٰنُ قَوْمٍ عَلٰۤى اَلَّا تَعْدِلُوْا ؕ

اِعْدِلُوْا ۗ هُوَ اَقْرَبُ لِلتَّقْوٰى

وَاتَّقُوا اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ خَبِيْرٌۢ بِمَا تَعْمَلُوْنَ

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்விற்காக நேர்மையான சாட்சி கூறுபவர்களாக நிலைத்து நில்லுங்கள். ஒரு சமுதாயத்தின் மீதான பகைமை உங்களை நீதியுடன் நடக்காதவாறு தூண்ட வேண்டாம். நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இதுதான் இறையச்சத்திற்கு மிக நெருங்கியது. அல்லாஹ்விற்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிகின்றான். (திருக்குர்ஆன் 5:9)

திருக்குர்ஆன் அமைதி, சமாதானம் மற்றும் பாராபட்சமற்ற தன்மைக்கான போதனையில் எந்த அளவுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளது என்றால் அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மூலமாக இணை வைப்பவர்களுக்கும் அமைதியாக வசிப்பதற்கான உரிமையை வழங்கியுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான்:

وَاِنْ اَحَدٌ مِّنَ الْمُشْرِكِيْنَ اسْتَجَارَكَ فَاَجِرْهُ

حَتّٰى يَسْمَعَ كَلٰمَ اللّٰهِ ثُمَّ اَبْلِغْهُ مَاْمَنَهٗ ؕ

ذٰلِكَ بِاَنَّهُمْ قَوْمٌ لَّا يَعْلَمُوْنَ

இணை வைப்பர்களுள் எவராவது உம்மிடம் அடைக்கலம் கோரினால் அவர் அல்லாஹ்வின் வசனத்தைக் கேட்கும் வரை அவருக்கு அடைக்கலம் வழங்குவீராக! பின்னர் அவரை அவருடைய பாதுகாப்பான இடத்தில் சேர்த்து விடுங்கள். ஏனெனில், அவர்கள் (உண்மையினை) அறியாதவர்களாக இருக்கின்றனர். (திருக்குர்ஆன் 9: 6)

இதனையும் மார்க்கத்தின் பாராபட்சமற்றத் தன்மையின் காரணமாகவே திருக்குர்ஆன் மற்ற மார்க்கங்களில் காணப்படும் பண்புகளை குறித்து கூறுகின்றது:

وَمِنْ اَهْلِ الْكِتٰبِ مَنْ اِنْ تَاْمَنْهُ بِقِنْطَارٍ

يُّؤَدِّهٖۤ اِلَيْكَ ۚ وَمِنْهُمْ مَّنْ اِنْ تَاْمَنْهُ بِدِيْنَارٍ

لَّا يُؤَدِّهٖۤ اِلَيْكَ اِلَّا مَا دُمْتَ عَلَيْهِ قَآئِمًا ؕ

ذٰلِكَ بِاَنَّهُمْ قَالُوْا لَيْسَ عَلَيْنَا

فِي الْاُمِّيّٖنَ سَبِيْلٌ ۚ وَيَقُوْلُوْنَ

عَلَى اللّٰهِ الْكَذِبَ وَهُمْ يَعْلَمُوْنَ

வேதத்தையுடையவர்களுள் சிலரிடம் நீர் பொருட் குவியல் ஒன்றினை நம்பி ஒப்படைத்தாலும் அதனை உம்மிடம் திருப்பிக் கொடுப்பவர் இருக்கின்றனர். இன்னும் அவர்களுள் நீர் ஒரு தீனார் (நாணயம்) ஒன்றினை நம்பி ஒப்படைத்தாலும் நீர் அவன் (தலை) மேல் நிற்காத வரை அதனை உம்மிடம் திருப்பித் தராதவனும் இருக்கின்றான். எழுதப்படிக்கத் தெரியாவர்களைப் பொறுத்த வரை எங்களுக்கு எவ்வழியுமில்லை என்று அவர்கள் சொல்வதுதான் இதற்கு காரணம். அவர்கள் அறிந்து கொண்டே அல்லாஹ்விற்கு எதிராக பொய் கூறுகின்றனர். (திருக்குர்ஆன் 3: 76)

ஒருமுறை ஹஸ்ரத் அஸ்மா பின்த் அபூபக்ர் (ரலி) அவர்களின் தாயார் (இணை வைப்பாளர்) மிகவும் துக்கத்தோடு அவரை பார்க்க மதீனாவிற்கு வந்தார்கள். எனக்கு

அன்னாருக்கு தொண்டு செய்யவும், அன்னாரிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளவும் அனுமதி இருக்கின்றதா? என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் வினவினார்கள். அதற்கு, ஆம்! : அவர் உங்களுடைய தாயார் ஆவார் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இப்னு ஈனியா கூறுகிறார்கள்: இதனைப் பற்றி இவவாறு வசனம் உள்ளது. அதாவது எவர்கள் உங்களிடம் மார்க்க விஷயத்தில் போர் புரிவதில்லையோ அவர்களிடம் இருந்து அல்லாஹ் தடுக்கவில்லை.

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மார்க்க சகிப்புத் தன்மையின் சிறப்பான வெளிப்படுத்துதலின் காரணமாக முஸ்லிம் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு இடையிலான வேறுபாட்டை அகற்றி விட்டார்கள். மாறாக, முஸ்லிம்களோடு ஒப்பிடுகையில் முஸ்லிம் அல்லாதவர்களிடம் மிகவும் அதிகமாக மென்மையாக நடந்து கொண்டார்கள். எனவே தான் முஸ்லிம்களின் ஸக்காத் மற்றும் அஷ்ர் போன்ற வரிக்கு பதிலாக ஜிஸ்யா எனப்படும் சிறிதளவிலான வரியை விதித்தார்கள். இதேபோன்று கல்வி பயின்று கொடுக்கச் செய்து அடிமைகளின் விடுதலைக்கான ஏற்பாட்டை செய்தார்கள். அதனை செயல் ரீதியாக வெளிப்படுத்தும் விதமாக ஹுனைன் போரின் போது ஆயிரக்கணக்கான முஸ்லிம் அல்லாத அடிமைகளை விடுவித்து காட்டினார்கள்.

திருக்குர்ஆன் வேதமுடையவர்களிலில் ஒரு கூட்டத்தினரின் பண்பை கூறியவாறு மதநல்லிணக்கத்திற்கான அடித்தளத்தை இவ்வாறு நிலைநாட்டியுள்ளது:

لَيْسُوْا سَوَآءً ؕ مِنْ اَهْلِ الْكِتٰبِ اُمَّةٌ قَآئِمَةٌ
يَّتْلُوْنَ اٰيٰتِ اللّٰهِ اٰنَآءَ الَّيْلِ وَهُمْ يَسْجُدُوْنَ

அவர்கள் எல்லாரும் ஒன்று போலில்லை. வேதத்தையுடையவர்களுள்(ளேயே தங்களின் உடன்படிக்கையில்) நேர்மையான கூட்டமும் இருக்கின்றது. அவர்கள் இரவுப் பொழுதுகளில் அல்லாஹ்வின் வசனங்களை ஓதுகின்றனர். சிரம் பணிந்து வணங்கவும் செய்கின்றனர். (திருக்குர்ஆன் 3:114)

இறைத் தூதர் (ஸல்) அவர்களின் பாராபட்சமற்றத் தன்மையான மார்க்கத்தின் மற்றோர் உயரிய உதாரணமாக மதீனாவின் உடன்படிக்கை இருக்கின்றது. மதீனா சென்றடைந்த உடன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மதீனத்து யூதர்களுடன் அமைதிக்கான ஒப்பந்தத்தை நிலை நாட்டினார்கள். அதன் காரணமாக முஸ்லிம்கள் மற்றும் யூதர்கள் ஒரே சமுதாயமாக நிறுவப்பட்டார்கள். மேலும் யூதர்களுக்கு மதீனாவில் முழுமையான மார்க்க சுதந்திரத்தை வழங்கினார்கள். மேலும் அவர்களுக்கான தீர்ப்பை அவர்களின் ஷரீஅத்தின் அடிப்படையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் யூதர்களின் கல்வி பயிலும் இடத்திற்கு சென்று சொற்பொழிவு ஆற்றினார்கள். இதேபோன்று மதீனத்து யூதர்களும் மஸ்ஜித் நபவியில் கேள்விகளைக் கேட்டு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமிருந்து விடைகளைப் பெற்றார்கள். இதேபோன்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் யூதர்களின் விருந்துக்கான அழைப்பையும் ஏற்றுக் கொண்டார்கள். எனவே ஒருமுறை ஓர் யூதரின் விருந்திற்கான அழைப்பை ஏற்றுக் கொண்டார்கள். அதில் அவர் வாற்கோதுமை மற்றும் கொழுப்பை முன் வைத்தார்.

அடுத்து, திருக்குர்ஆன் பல்வேறு மதங்களின் தோற்றுனர்களுக்கு கண்ணியம் மற்றும் மரியாதையை வழங்குமாறும் மேலும் மற்ற மதங்களின் கண்ணியத்திற்குரிய நபர்களை அவமதிப்பதிலிருந்து தவிர்ந்திருக்குமாறும், தகாத வார்த்தையினால் ஏசி பேசுதலில் இருந்து தவிர்ந்து கொள்ளுமாறும் அறிவுறுத்துகிறது.

எனவே திருக்குர்ஆன் கூறுகின்றது:

وَلَا تَسُبُّوا الَّذِيْنَ يَدْعُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ
فَيَسُبُّوا اللّٰهَ عَدْوًاۢ بِغَيْرِ عِلْمٍ ؕ
كَذٰلِكَ زَيَّنَّا لِكُلِّ اُمَّةٍ عَمَلَهُمْ ۖ
ثُمَّ اِلٰى رَبِّهِمْ مَّرْجِعُهُمْ
فَيُنَبِّئُهُمْ بِمَا كَانُوْا يَعْمَلُوْنَ

அல்லாஹ்வையன்றி அவர்கள் அழைப்பவற்றை நீங்கள் ஏசாதீர்கள். இல்லையாயின், அவர்கள் அறியாமையினால் அல்லாஹ்வை ஏசுவார்கள். இவ்வாறு நாம் ஒவ்வொரு சமுதாயத்தினருக்கும் அவர்களின் செயலை அழகு வாய்ந்ததாக்கிக் காட்டியுள்ளோம் பின்னர் அவர்கள் தங்கள் இறைவனிடமே திரும்பிச் செல்ல வேண்டியவராய் உள்ளனர். அப்போது அவர்கள் செய்ததைக் குறித்து அவர்களுக்கு அறிவிப்பான். (திருக்குர்ஆன்: 6:109)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பாராபட்சமற்றத் தன்மை உடைய மார்க்கத்தின் முன்மாதிரியாக திகழ்ந்தார்கள். தாங்கள் எப்பொழுதும் பாராபட்சமற்றத் தன்மை உடைய மார்க்கத்திற்கு முக்கியத்துவம் அளித்தார்கள். ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இரண்டு நபர்கள் தகாத வார்த்தைகளின் மூலமாக சண்டையிட்டுக் கொண்டார்கள். ஒருவர் முஸ்லிமாக இருந்தார். மற்றொருவர் யூதராக இருந்தார். இறைவன் மீது ஆணையாக! இறைவன் முஹம்மத் (ஸல்) அவர்களை தேர்ந்தெடுத்து அன்னாரை முழு உலகிலும் மேன்மையானவராக ஆக்கினான் என்று முஸ்லிம் கூறினார். உடனே அந்த யூதர் கூறினார்: இறைவன் மீது ஆணையாக! அவன் மூஸாவை முழு உலகிற்கும் மேன்மையானவராக தேர்ந்தெடுத்தான். உடனே அந்த முஸ்லிம் யூதரின் மீது கையை உயர்த்தி கன்னத்தில் அறைந்து விட்டார். அந்த யூதர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் புகார் தெரிவித்தார். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்த முஸ்லிமிடம் முழு விவரத்தையும் கேட்டார்கள். பிறகு கூறினார்கள்:

لَا تُخَيِّرُوْنِيْ عَلٰى مُوْسٰى

அதாவது என்னை மூஸாவை விட மேன்மைப்படுத்தாதீர்.

நமது அன்பிற்குரிய இமாம் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்த அறிவிப்பை செய்தவாறு கூறினார்கள்: இதுதான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வழங்கிய கருத்துச் சுதந்திரத்தின் தரமாகவும், மார்க்க சுதந்திரத்தின் தரமாகவும் இருந்தது. அதாவது மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்த பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மதீனத்து மக்கள் மற்றும் யூதர்கள் இடையே அமைதிக்கான சூழலை நிலைநாட்ட ஓர் ஒப்பந்தத்தை வைத்தார்கள். அதன் காரணமாக முஸ்லிம்களின் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தததினால் அல்லது எவர்கள் முஸ்லிமாக இல்லாதபோதிலும் முஸ்லிம்களோடு இணைந்து கொண்டார்களோ அவர்களின் மூலமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கையில் ஆட்சி ,அதிகாரம் இருந்தது. ஆனால், இந்த ஆட்சி அதிகாரம் இருந்ததனால் மற்ற மக்களின் உணர்வுகளை மதிக்கத் தேவையில்லை என்ற அர்த்தமில்லை. திருக்குர்ஆனின் சாட்சி இருந்த போதிலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அனைத்து நபிமார்களிலும் உயர்ந்தவர் ஆவார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நபிமார்களின் போட்டியின் காரணமாக நடைபெறும் சூழலின் விளைவாக அதன் வெகுமதியை அளிக்க வேண்டும் என்பதை ஏற்கவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்த யூதரிடம் விவரத்தை கேட்டு முஸ்லிமை கடிந்து கொண்டார்கள். நீங்கள் உங்களுடைய

சண்டையில் நபிமார்களை ஏன் கொண்டு வருகின்றீர்கள்? என்று கூறினார்கள். உங்களுடைய பார்வையில் நான் அனைத்து நபிமார்களிலும் உயர்ந்தவனாக இருக்கின்றேன் என்பது சரிதான். அதனை அல்லாஹ்வும் சாட்சியாக கூறுகின்றான். ஆனால், நமது அரசாங்கத்தின் கீழ் இருக்கும் ஒரு நபரின் நபியைக் குறித்து இவ்வாறு கூறும்போது அவருடைய மனம் துன்புறுத்தப்படுகிறது என்றால் அது இருக்கக் கூடாது. அதற்கான அனுமதியையும் என்னால் கொடுக்க முடியாது. என்னை கண்ணியப்படுத்துவதற்கு நீங்கள் மற்ற நபிமார்களையும் கண்ணியப்படுத்துவது அவசியமாகும்.

ஆக, இதுதான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நீதி மற்றும் சுதந்திரத்தின் தரமான வெளிப்பாடாக இருக்கின்றது. அதனை தம்மவர்களையும் மற்றவர்களையும் கவனத்தில் கொண்டவாறு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நிலைநாட்டினார்கள். இன்னும் கூறப்போனால், சில நேரங்களில் மற்றவர்களின் உணர்வை அதிகமாக கருத்தில் கொண்டிருந்தார்கள்.

அல்லாஹ் கூறுகின்றான்:

لَا يَنْهٰىكُمُ اللّٰهُ عَنِ الَّذِيْنَ لَمْ يُقَاتِلُوْكُمْ
فِي الدِّيْنِ وَلَمْ يُخْرِجُوْكُمْ مِّنْ دِيَارِكُمْ
اَنْ تَبَرُّوْهُمْ وَتُقْسِطُوْٓا اِلَيْهِمْ ؕ
اِنَّ اللّٰهَ يُحِبُّ الْمُقْسِطِيْنَ

(உங்கள்) மார்க்கம் தொடர்பாக உங்களுடன் போர் செய்யாதவர்களுக்கும் உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்து அவர்களிடம் நீதியாக நடப்பதை அல்லாஹ் தடுக்கவில்லை. அல்லாஹ் நீதியுடன் நடப்பவர்களை நேசிக்கின்றான். (திருக்குர்ஆன் 60: 9)

இஸ்லாம் எதிரிகள் காட்டும் அத்துமீறலில் கூட அமைதியை நிலைநாட்டும் நோக்கத்தில் அந்த தீமைக்கு சமமான பழி வாங்குதலை அனுமதிக்கின்றது. மேலும் கூறுகிறது. ஒருவேளை மன்னிப்பை நீங்கள் கையாண்டால் அல்லாஹ்விடத்தில் உங்களுடைய இந்த செயலானது மிகவும் பிடித்தமானதாக இருக்கும்.

அல்லாஹ் கூறுகின்றான்:

وَجَزٰٓؤُا سَيِّئَةٍ سَيِّئَةٌ مِّثْلُهَا ۚ
فَمَنْ عَفَا وَاَصْلَحَ فَاَجْرُهٗ عَلَى اللّٰهِ ؕ
اِنَّهٗ لَا يُحِبُّ الظّٰلِمِيْنَ

ஒரு தீங்கிற்குரிய கூலி அதேயளவு தீங்கேயாகும்.(என்பதனை அவர்கள் நினைவில் கொள்கின்றனர்) ஆனால், எவர் மன்னித்து சீர்திருத்துகிறாரோ அவருக்குரிய நற்பலன் அல்லாஹ்விடமுள்ளது. நிச்சயமாக அவன் அநீதி இழைப்பவர்களை நேசிப்பதில்லை. (திருக்குர்ஆன் 42: 41)

அல்லாஹ் மிக அழகிய முறையில் கூறுகின்றான்:

يٰۤاَيُّهَا النَّاسُ اِنَّا خَلَقْنٰكُمْ مِّنْ ذَكَرٍ وَّاُنْثٰى
وَجَعَلْنٰكُمْ شُعُوْبًا وَّقَبَآئِلَ لِتَعَارَفُوْا ؕ
اِنَّ اَكْرَمَكُمْ عِنْدَ اللّٰهِ اَتْقٰٮكُمْ ؕ
اِنَّ اللّٰهَ عَلِيْمٌ خَبِيْرٌ

பொருள்: மக்களே! நாம் உங்களை ஆண், பெண்ணிலிருந்து படைத்தோம். நீங்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்காக நாம் உங்களைக் கோத்திரங்களாகவும், இனங்களாகவும் ஆக்கியுள்ளோம். நிச்சயமாக அல்லாஹ்வின் பார்வையில் உங்களுள் கண்ணியமிக்கவர் உங்களுள் இறையச்சமிக்கவரே. நிச்சயமாக அல்லாஹ் எல்லாம் அறிந்தவனும், எல்லாம் உணர்ந்தவனுமாவான். (49: 14)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்த பொது அறிவிப்பை வெளியிட்டார்கள்.

يَا أَيُّهَا النَّاسُ أَلَا إِنَّ رَبَّكُمْ وَاحِدٌ
وَإِنَّ أَبَاكُمْ وَاحِدٌ
أَلَا لَا فَضْلَ لِعَرَبِيٍّ عَلَى أَعْجَمِيٍّ وَلَا
لِعَجَمِيٍّ عَلَى عَرَبِيٍّ وَلَا لِأَحْمَرَ عَلَى أَسْوَدَ وَلَا أَسْوَدَ
عَلَى أَحْمَرَ إِلَّا بِالتَّقْوَى

மக்களே! உங்கள் இறைவன் ஒருவனே உங்கள் தந்தை ஒருவரே எந்தவோர் அரபிக்கும் அரேபி அல்லாதவர் மீதும் எந்த மேன்மையும் இல்லை. எந்தவொரு அரேபி அல்லாதவருக்கும் எந்தவோர் அரேபியர் மீதும் எந்தவொரு மேன்மையும் இல்லை. மேலும், இறையச்சத்தை தவிர வேறு எந்த ரீதியிலும் எந்தவொரு கருப்பருக்கும் வெள்ளையரை விடவும், எந்தவொரு சிகப்பு நிறத்தவருக்கும் கருப்பரை விடவும் மேன்மை கிடையாது.(மக்களில் இறையச்சம் கொண்டவரே சிறந்தவர் ஆவார். இனம் மற்றும் நிறத்தின் அடிப்படையில் எந்த மேன்மையும் கிடையாது).

இதன் அடிப்படையில் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தம்முடைய இறுதி சொற்பொழிவில் அனைத்து முஸ்லிம்களுக்கும் கட்டளையிட்டார்கள். எந்தவொரு அரபியும் அரேபி அல்லாதவரை விட உயர்ந்தவர் அல்ல. மேலும் எந்தவொரு அரேபி அல்லாதவரும் அரேபியரை விட உயர்ந்தவர் அல்ல. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கற்றுத் தந்தார்கள். அதாவது எந்தவொரு வெள்ளையருக்கும் கருப்பரை விட உயர்ந்தவர் அல்ல. எந்தவொரு கருப்பரும் வெள்ளையரை விட உயர்ந்தவர் அல்ல. ஏனெனில், இது இஸ்லாத்தின் தெளிவான போதனையாகும். அதாவது அனைத்து சமுதாயமும் மற்றும் சந்ததிகளின் மக்களும் சமமானவர்கள் ஆவர். அதாவது அனைத்து மக்களுக்கும் எந்தவொரு பாகுபாடும் ,பாரபட்சமுமின்றி சம உரிமை கிடைக்க வேண்டும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இதனையும் தெளிவாக கூறியுள்ளார்கள். இது சமுதாயத்திற்கிடையே சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்ட அடிப்படையான மற்றும் பொது விதியாகும்.

யூதர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கூட்டத்தில் கலந்து கொள்ளும்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்த மக்களுடன் நல்லமுறையில் நடந்து கொள்வார்கள். இதன் காரணமாக ஏதாவது ஓர் யூதருக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அருக்காக இந்த துஆ செய்வார்கள். அதாவது, அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி வழங்குவானாக. மேலும் உங்களது நிலைமையை சீராக்குவானாக.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் யூதர்களில் யாராவது நோய்வாய்ப்பட்டதாக தகவல் கிடைத்தால் உடனே அவருடைய சிகிச்சைக்காக செல்வார்கள். இதேபோன்று ஓர் யூத குடும்பத்தைச் சேர்ந்த நபர் நோய்வாய்ப்பட்ட உடன் தானே நலம் விசாரிக்க சென்றார்கள்.

மாற்று மதத்தைச் சேர்ந்தவர்களில் இறந்தவர்களுக்கும் மதிப்பளித்து மனிதனின் மதிப்பு மரியாதையை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நிலைநாட்டினார்கள். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அபீ லைலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஸஹல் பின் ஹனீஃப் மற்றும் கைஸ் பின்த் சஃது (ரலி) அவர்கள் காதிசியா என்ற இடத்தில் அமர்ந்திருந்தனர். அப்போது அவர்களுக்கு அருகில் ஒரு ஜனாஸா எடுத்துக் கொண்டு செல்லப்பட்டது. உடனே அவர்கள் இருவரும் எழுந்து நின்றார்கள். அவர்களுக்கு இது முஸ்லிம் அல்லாதவர் ஆவார் என்று கூறப்பட்டது. அப்போது அவர்கள் ஒருமுறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அருகில் ஒரு ஜனாஸா சென்று கொண்டிருந்தது. அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மதிப்பளித்தவாறு எழுந்து நின்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு இது ஒரு யூதரின் ஜனாஸா ஆகும் என்று கூறப்பட்டது. உடனே ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இதன் தொடர்ச்சி 18-ம் பக்கம்

## திருக்குர்ஆனின் முக்கியத்துமும் அதன் சிறப்புகளும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களின் ஒளியில் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் அறிவுரைகள்

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆனின் முக்கியத்துவம் அதன் சிறப்புகள் மற்றும் அதன் ஒளிமிக்க ஆதாரங்கள் தொடர்பாக இந்தக் காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு மிகவும் தெளிவுபட கூறியுள்ளார்கள். சில காலமாக நான் குத்பாக்களில் இதைக் கூறிவருகின்றேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பல மேற்கோள்களைக் கூறுகின்றேன். எனவே இவற்றை மீண்டும் மீண்டும் கேட்பது, படிப்பது மற்றும் இவற்றின் மீது ஆழ்ந்து கவனம் செலுத்துவது ஆகியவற்றின் தேவை உள்ளது. அப்போதுதான் நம்மால் இதைப் பற்றிய சரியான புரிதலை நம்மிடம் உருவாக்க முடியும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிகாட்டல்கள் தொடர்பாகவே இன்றும் நான் சில மேற்கோள்களை முன் வைப்பேன்.

திருக்குர்ஆன் நிரந்தரமான, என்றென்றைக்குமான ஷரீஅத்தாகும் என்பதை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: வல்ல இறைவனின் நுட்பங்களும், கட்டளைகளும் இரு வகைப்படும். சில நிரந்தரமானவையாக, என்றென்றைக்குமானவையாக இருக்கின்றன. சில குறிப்பிட்ட நேரத்திற்கும், தற்காலிக தேவையின் அடிப்படையிலும் பிறப்பிக்கப்படுகின்றன.

எனினும் இவற்றிலும் இவற்றிற்கென ஒரு நிரந்தரத் தன்மை இருக்கிறதுதான். தற்காலிக தேவைக்காக இருப்பினும் இவை நிரந்தரமான கட்டளைகள் ஆகும். ஆனால், அவை தற்காலிகமாக இருக்கும். உதாரணமாக, பயணத்தில் தொழுகை மற்றும் நோன்பு தொடர்பாக வேறு கட்டளைகள் உள்ளன. பயணம் இல்லாமல் ஓரிடத்தில் இருக்கும் நிலையில் வேறு உள்ளன. உதாரணமாக, பயணத்தில் தொழுகையை ஜம்மு செய்து கொள்வதற்கும் கஸ்ர் செய்து தொழுகையை முழுமையாக தொழ வேண்டும். இதேபோன்று நோன்புகள் இருக்கின்றன. பயணத்தில் ஓரிடத்தில் தங்கி இருக்கும்போது வைக்க வேண்டும். உடல் ஆரோக்கியம் பெற்ற ஒவ்வொருவர் மீதும் கடமையாகும்.

பிறகு கூறினார்கள்: உதாரணமாக, இன்னொரு கட்டளை உள்ளது.

பெண் வெளியே செல்லும்போது புர்கா அணிந்து செல்கிறார். இது எப்படிப்பட்ட ஒரு கட்டளை என்றால், அது பெண்ணுக்கு ஒரு குறிப்பிட்ட சூழலில் உள்ளது. வீட்டில் புர்கா அணிந்து இருப்பதற்கான தேவை இருப்பதில்லை. பர்தா அணிவதற்கான கட்டளை உள்ளது என்றால் வீட்டிற்கு வெளியில் பர்தா அணிவதற்கான கட்டளை உள்ளது. பிறகு, யார்? யார்? முன் பர்தா செய்ய வேண்டும்? யார்? யார்? முன் பர்தா செய்ய வேண்டாம்? என்று உள்ளது. அடுத்து, தவ்ராத் மற்றும் இஞ்சீலின் போதனைகளுடன் ஒப்பிட்டவாறு அன்னார் (அலை) கூறினார்கள்:

அவை யா தற்காலிகமானதாக இருந்தன. தற்காலிக தேவைகளுக்கு ஏற்ப இருந்தன. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எந்த ஷரீஅத்தை, திருமறையைக் கொண்டு வந்தார்களோ அந்தத் திருமறை நிரந்தரமான என்றென்றைக்குமான ஷரீஅத் ஆகும். எனவே, அதில் கூறப்பட்டுள்ள அனைத்தும் முழுமையானதும், நிறைவானதும் ஆகும். திருக்குர்ஆன் நிரந்தரமான சட்டமாகும். திருக்குர்ஆன் வராமல் இருந்திருந்தாலும், தவ்ராத்தும் இஞ்சீலும் ரத்தாகியிருக்கும். ஏனெனில், அவை நிரந்தரமான, என்றென்றைக்குமான மார்க்கச் சட்டமாக இருக்கவில்லை.

(மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 42, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

எனவே திருக்குர்ஆனுக்கு இந்த ஒரு முக்கியத்துவம் உள்ளது. அதாவது திருக்குர்ஆனின் வழிகாட்டல்கள் ஒவ்வொரு சூழ்நிலைக்கு ஏற்ப உள்ளன. மிகவும் முழுமையான போதனையாகவும் ஒவ்வொரு காலத்திற்காகவும் இருக்கின்றன. ஆட்சேபனை செய்யக்கூடியவர்கள் உதாரணமாக, பர்தா பற்றிய உதாரணத்தைக் கூறினேனே அதிலும் ஆட்சேபனை செய்து விடுகிறார்கள். அதாவது இந்தக் காலத்தின் அடிப்படையில் பர்தா அவசியம் இல்லை என்கிறார்கள். சிலவேளை நம் பெண் பிள்ளைகளும் பாதிப்புக்கு உள்ளாகின்றார்கள்.


ஆனால், இந்த மக்கள் சுயமே இந்த விஷயத்தை ஏற்றும் கொள்கின்றார்கள். அது பற்றி பெரும் பெரும் கட்டுரைகள் எழுதப்படுகின்றன. பெண் அமைப்புகளும் இப்போது குரல் எழுப்ப ஆரம்பித்துவிட்டன. பத்திரிகைகளிலும் சில சமயம் வர ஆரம்பித்து விடுகிறது. அதாவது, ஆண்கள் பெண்கள் ஒருவர் மற்றவருடன் கலந்துவிடுவது, சிலவேளை பெரும் அருவருப்புகளை உருவாக்கி விடுகிறது. தனித்தனி அமைப்பு இருக்க வேண்டும் என்று இப்போது அதன் சில மக்கள் சிந்திக்கவும் ஆரம்பித்துவிட்டார்கள்.

அடுத்து, தமது வருகையின் நோக்கத்தையும் திருக்குர்ஆன் நிரந்தரமான ஷரீஅத் ஆக இருப்பது பற்றியும் எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இந்த விஷயத்தையும் உள்ளத்தால் செவிமடுங்கள். எனது வருகையின் அசல் நோக்கம் என்ன? எனது குறிக்கோள் என்ன? நான் வந்ததன் நோக்கமும் குறிக்கோளும் இஸ்லாத்தைப் புதுப்பிப்பதும் அதற்கு ஆதரவு அளிப்பதும் மட்டுமே ஆகும். இதன் மூலமாக நான் ஏதாவது புதிய ஷரீஅத்தைக் கற்றுக் கொடுப்பதற்காக வந்துள்ளேன் என்றோ அல்லது புதிய கட்டளைகளைப் பிறப்பிப்பதற்காக வந்துள்ளேன் என்றோ அல்லது ஏதாவது புதிய மறை இறங்கும் என்றோ இருக்கக் கூடாது. ஒருபோதும் இல்லை! யாராவது இவ்வாறு நினைத்தால் என்னைப் பொருத்தவரை அவர் கடுமையான வழிகேட்டிலும் மார்க்கம் அற்றவராகவும் உள்ளார்.

இதன் தொடர்ச்சி 17-ம் பக்கம்

## உலகில் எந்தவொரு தாயின் பிள்ளையும் இந்த அளவிற்கு நன்மை புரியக் கூடிய வேதத்தை முன் வைக்கவில்லை




**ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:**

(திருக்குர்ஆனாகிய) இந்த வேதம் நன்மைகளால் நிறைந்துள்ளது. திருக்குர்ஆன் நன்மை புரியாத எந்த மனிதன் தான் உலகில் இருக்கின்றான்?முஸ்லிம்கள் திருக்குர்ஆனின் மீது முழுமையாக அமல் செய்யக் கூடியவர்களாக இருந்தால் பின்னர் உலகின் ஒவ்வொரு மனிதனையும் இந்த நன்மையின் சங்கிலிகளுக்குள் கட்டி வைத்து விட முடியும். நம்மிடமே சோம்பல் உள்ளது. நன்மைக்கான வழிகளோ இருக்கவே செய்கின்றன. நன்மைக்கான ஊற்று இருக்கவே செய்கின்றது. நன்மைக்கான போதனையும், வழிகாட்டலும் இருக்கவே செய்கின்றது. மனித இயல்பில் நன்மையின் வழியில் நடப்பதற்கான ஆற்றலும், தகுதியும் இருக்கவே செய்கின்றது. நாம் சோம்பலை வெளிப்படுத்துகின்றோம். மேலும், நாம் எதுவரை சோம்பலை வெளிப்படுத்தி வருவோமோ அதுவரை உலகை இதன் நன்மைகளிலிருந்து இழப்பிற்குரியதாக நாம் ஆக்கிக் கொண்டிருப்போம். எனவே திருக்குர்ஆனின் போதனையை பொருத்த வரை திருக்குர்ஆன் மனித குலத்தின் மீது எந்த அளவிற்கு கருணை புரிகின்றது என்றால், உலகின் எந்தவொரு தாயின் பிள்ளையும் இந்த அளவிற்கு நன்மை புரியக் கூடிய வேதத்தை முன் வைக்கவில்லை.

(குத்பாத்தே நாஸிர், தொகுதி 2, பக்கம் 555)

## ஆன்மிக உலகின் விஞ்ஞான நூல்
## ஆச்சரியம் கொள்ளத் தக்க அறிவும், ஞானமும் கொண்ட வேதம்



**ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் إِنَّ الْحَسَنٰتِ يُذْهِبْنَ السَّيِّاٰتِ ط என்ற வசனத்தின் விளக்கவுரையில் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆன் ஆச்சரியம் அளிக்கத் தக்க அறிவும் ஞானமும் கொண்ட ஒரு வேதம் ஆகும். அது மனித இயல்பின் தவறுகளை சீர்திருத்துவதுடன் இயல்பில் இருக்கின்ற தீய விளைவுகளை சரிசெய்கின்றது. பின்னர் அதனை சரியான பாதையின் பக்கம் வழிகாட்டவும் செய்கின்றது. நன்மைகள் வலிமை வாய்ந்தவையாகும்; தீமைகள் பலவீனமானவையாகும் என்று அல்லாஹ் கூறுகின்றான். எந்த சமுதாயங்களிடத்தில் நீங்கள் தீமைகளை காண்கின்றீர்களோ அவர்களிடத்தில் முதலில் சிறப்புகளும், நன்மைகளும் மறையத் தொடங்கின.....

ஆன்மிக உலகின் இந்த விஞ்ஞான நூல் ஆச்சரியம் கொள்ளத் தக்க எத்தகைய சொற்றொடர்ளை பயன்படுத்துகின்து; மேலும், எப்படிப்பட்ட கருத்துகளின் மீது ஒளிபாய்ச்சுகின்றது என்றால் மனித அறிவு அங்கு வரை சென்றடையவே முடியாது. (ஒரு விஷயத்தில்) திருக்குர்ஆனின் கண்ணோட்டத்தைக் குறித்த அறிவு உங்களுக்கு கிடைத்து விட்ட பிறகு நீங்கள் அதனை சிந்தித்து சீர்தூக்கிப் பார்த்தால் பின்னர் நீங்கள் திருக்குர்ஆனின் கூற்றுகளை ஆச்சரியம் அடையும் வகையில் உண்மையானதாகக் காண்பீர்கள். எனவே நன்மை என்பது ஒரு நேர்மறை அம்சம் ஆகும்; தீமை என்பது நன்மை இல்லாத நிலையின் பெயராகும் என்பது அடிப்படை விஷயம் ஆகும்.

(குத்பாத்தே தாஹிர், தொகுதி 2, பக்கம் 404)

## உலகின் சீர்திருத்தத்திற்கும் உலகில் நன்மையை செயல்படுத்துவதற்கும் உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்கும் உலகில் இறை வணக்கம் செய்பவர்களை உருவாக்குவதற்கும் உலகில் எல்லா தரப்பு மக்களின் உரிமைகளை நிலைபெறச் செய்வதற்கும் இந்த போதனையே உத்திரவாதம் ஆகும்



**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இது தூய வேதம் ஆகும்; மேலும் இது எல்லா வகையான குறைகளிலிருந்தம் தூய்மையானதாகும்; மேலும், இது பரிசுத்தமான வேதம் மட்டுமல்ல.மாறாக, எல்லா வகையிலும் சிறப்பான, அழகான போதனை இதில் காணப்படுகின்றது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கிய திருக்குர்ஆனைக் குறித்து அல்லாஹ் சாட்சி பகர்கின்றான். இதற்கு நிகரான வேதமே கிடையாது. மேலும் முந்தைய வேதங்களில் குறைவாக இருந்த அந்த அனைத்து சிறப்புகளும் இதில் இணைக்கப்பட்டு விட்டன. தற்போது எல்லா வகையான குறைபாடுகளிலிருந்தும் தூய்மையான போதனை இது ஒன்றே ஆகும். இன்னும் கூறப்போனால், இந்த போதனையின் படி அமல் செய்து எல்லா வகையான தீமைகளிலிருந்தும் தப்பித்துக் கொள்ள முடியும். வெறும் தப்பித்துக் கொள்வது மட்டுமல்ல மாறாக, இதன் போதனையின்படி செயல்படுவதன் மூலமும் மற்றும் இந்தப் போதனையை அமல்படுத்துவதன் மூலமும் மட்டுமே  தனிநபர் மற்றும் உலகின் சீர்த்திருத்தம் சாத்தியம் ஆகும். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கிய இந்த போதனையே தற்போது உலகின் சீர்திருத்தம், உலகில் நன்மைகளை செயல்படுத்துதல், உலகில் அமைதியை நிலைநாட்டுதல், உலகில் இறை வணக்கம் செய்பவர்களை உருவாக்குதல் உலகில் எல்லா தரப்பு மக்களுடைய உரிமைகளை நிலைநாட்டுதல் ஆகியவற்றிற்கான உத்திரவாதம் ஆகும்.

(குத்பாத்தே மஸ்ரூர், தொகுதி 3, பக்கம் 127)

**EDITOR**
Moulavi.
O.M.Muzzammil Ahmad
**SUB EDITOR**
Moulavi.
A.Abdurrahman Tahir
Mobile:8838158410
e-mail:subeditortamil@gmail.com

Registered with the Registrar of the News papers for India at No.PUNTAM/2016/68785

بدر **Weekly BADAR Qadian**

Qadian - 143516 Distt. Gurdaspur (Pb.) INDIA

Vol. 8 Thursday 21 - 28 - December - 2023 Issue. 51 - 52

**MANAGER**
**SHAIKH MUJAHID AHMAD**
Mobile : +91 99153 79255
e -mail:managerbadrqnd@gmail.com
Website : www.akhbarbadr.in
: www.alislam.org/badr


# திருக்குர்ஆனின் பத்து நோக்கங்கள்

திருக்குர்ஆனின் நோக்கங்களில் ஒன்று இதுவாகும்: அதாவது, அது அல்லாஹ்வின் அனைத்து புகழ்களையும் எடுத்துரைக்கின்றது. மேலும், அவனது இருப்பிற்கு இருக்கின்ற முழுமையான தன்மை அனைத்தையும் விளக்கமாக எடுத்துரைக்கின்றது. ஆக, இந்த நோக்கம் اَلْحَمْدُ لِلّٰهِ என்பதில் சுருக்கமாக வந்துவிட்டது. ஏனெனில், அனைத்து முழுமையான புகழ்களும் அல்லாஹ்வின் இருப்பிற்கே உரியன என்பது நிரூபணமாகியுள்ளது. மேலும், அனைத்து சிறப்புகளுக்கும் தகுதி படைத்தவனும் அனைத்து இறை வணக்கங்களுக்கும் தகுதி படைத்தவனும் அவனே ஆவான் என்பது இதன் பொருளாகும்.

திருக்குர்ஆனின் **இரண்டாவது நோக்கம்** இதுவாகும்: அதாவது இறைவன் முழுமையான படைப்பாளன் ஆவான்; அவன் அகில உலகங்களையும் படைத்தவன் ஆவான் என்பதை வெளிப்படுத்துகின்றது. மேலும், உலகத்தின் துவக்கத்தை எடுத்துரைக்கின்றது. மேலும், இந்த உலகின் வட்டத்தில் நுழைந்துவிட்டதை அது படைப்பினமாக ஆக்கியுள்ளது. மேலும், இந்த விவகாரங்களை எவர்கள் நிராகரிக்கின்றனரோ அவர்களின் பொய்யை நிரூபணம் செய்கின்றது. எனவே இந்த நோக்கம் رَبُّ الْعٰلَمِيْنَ என்பதில் சுருக்கமாக இடம் பெற்று விட்டது.

திருக்குர்ஆனின் **மூன்றாவது நோக்கம்** என்னவென்றால் அது இறைவனின் கருணை அனைவருக்குமானது என்பதை நிரூபணம் செய்வதும் அவனது பொதுவான கருணையை எடுத்துரைப்பதும் ஆகும். எனவே இந்த நோக்கம் رحمٰن என்பதில் சுருக்கமாக வந்து விட்டது.

திருக்குர்ஆனின் **நான்காவது நோக்கம்** என்னவென்றால், உழைப்பு மற்றும் முயற்சியினால் கிடைக்கக் கூடிய இறைவனின் அருளை நிரூபணம் செய்வது ஆகும்.எனவே இந்த நோக்கம் رَحِيْم என்ற சொல்லில் வந்து விட்டது.

திருக்குர்ஆனின் **ஐந்தாவது நோக்கம்** என்னவென்றால், மறுமையின் உண்மைத்துவத்தை எடுத்துரைப்பது ஆகும். எனவே இந்த நோக்கம் مَالِكِ يَوْمِ الدِّيْنِ என்பதில் வந்துவிட்டது.

திருக்குர்ஆனின் **ஆறாவது நோக்கம்:** தூய்மை, அடியாரின் தன்மைகள், அல்லாஹ் அல்லாதவற்றிலிருந்து மனதை தூய்மைப்படுத்திக் கொள்ளுதல், ஆன்மிக நோய்களுக்கான சிகிச்சைகள், தீய ஒழுக்கங்களுக்கான சீர்திருத்தம் மற்றும் ஏக இறை வணக்கத்திற்கான வழிமுறைகள் போன்றவற்றை எடுத்தரைப்பது ஆகும்.
اِيَّاكَ نَعْبُدُ என்பதில் சுருக்கமாக வந்து விட்டது.

திருக்குர்ஆனின் **ஏழாவது நோக்கம்** என்பது ஒவ்வொரு பணியிலும் உண்மையான வினையாற்றுபவனாக இறைவனை ஆக்கிக் கொள்வது ஆகும். மேலும், அனைத்து நற்பேறுகளும், இன்பம், உதவி, கட்டுப்படுதலில் நிலைத்து இருத்தல், பாவங்களில் இருந்து தூய்மையாக இருத்தல், நன்மைக்கான அனைத்து காரணிகளும் கிடைத்தல், உலகம் மற்றும் மார்க்க திறமைகள் ஆகிய அனைத்தும் அவனால் வழங்கப்பட்டது என்பதை ஒப்புக் கொள்ளச் செய்வதும் ஆகும். இந்த அனைத்து விவகாரங்களிலும் அவனிடமே உதவி வேண்டுவதற்கு வலியுறுத்துதல் ஆகும். ஆக, இந்த நோக்கம் اِيَّاكَ نَسْتَعِيْنُ என்பதில் அழகிய முறையில் எடுத்துரைக்கப்பட்டு விட்டது.

திருக்குர்ஆனின் **எட்டாவது நோக்கம்** என்பது ஸிராத்தே முஸ்தகீம் எனும் நேரான பாதையின் ஞானங்களை எடுத்துரைப்பது ஆகும். மேலும், துஆ மற்றும் உருக்கத்துடன் அதனை அவனிடம் வேண்டுவதற்கு வலியுறுத்துதல் ஆகும். ஆக, இந்த நோக்கம் اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ என்பதில் அழகிய வடிவில் வந்து விட்டது.

திருக்குர்ஆனின் **ஒன்பதாவது நோக்கம்** என்பது எந்த மக்களுக்கு இறைவனின் அருட்கொடை கிடைத்ததோ அவர்களுடைய வழிமுறைகளையும், நல்லொழுக்கங்களையும் உண்மையைத் தேடுபவர்களின் உள்ளங்களை உறுதிபடுத்துவதற்காக எடுத்துரைப்பது ஆகும். ஆக, இந்த நோக்கம் صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ என்பதில் சுருக்கமாக இடம் பெற்று விட்டது.

திருக்குர்ஆனின் **பத்தாவது நோக்கம்** என்பது எந்த மக்களின் மீது இறைவனின் கோபம் இறங்கியதோ அவர்களுடைய வழிமுறைகள் மற்றும் ஒழுக்கங்களை எடுத்துரைப்பது ஆகும். அல்லது எவர்கள் வழிதவறி பலவகையான சடங்கு சம்பிரதாயங்களில் மூழ்கி விட்டனரோ அவர்களுடைய வழிமுறைகள் மற்றும் ஒழுக்கங்களை எடுத்துரைப்பது ஆகும். உண்மையினை தேடக் கூடியவர்கள் இந்த வழிகளிலிருந்து அஞ்ச வேண்டும் என்பது இதனை எடுத்துரைப்பதன் நோக்கம் ஆகும். ஆக, இந்த நோக்கம் غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ என்பதில் அழகிய வடிவில் எடுத்துரைக்கப்பட்டு விட்டது.

இவையே திருக்குர்ஆனில் இடம்பெற்றுள்ள பத்து நோக்கங்கள் ஆகும். இவை அனைத்து உண்மைத்துவங்களுக்கான அசல் வழிமுறைகள் ஆகும். ஆக, இந்த அனைத்து நோக்கங்களும் சூரா ஃபாத்திஹாவில் அழகிய வடிவில் இடம் பெற்று விட்டது.

(பராஹீனே அஹ்மதிய்யா, பாகம் 4, ரூஹானீ கஸாயீன், தொகுதி 1, பக்கம் 581, அடிக்குறிப்பு எண்: 11)


Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab.
And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian Distt. Gsp-143516, Punjab. India Editor:Mansoor Ahmad

جمیل احمد ناصر، پرنٹر و پبلشر نے فضل عمر پرنٹنگ پریس قادیان میں چھپوا کر دفتر اخبار بدر قادیان سے شائع کیا۔ پروپرائیٹر:-نگران بدر بورڈ قادیان